[illegible]

XXIII

16 [illegible], 1952

[illegible], N30S
N52.23-9
198609

ஆயுட் காலத்துக்கு பென்ஷன்

நீங்கள் பென்ஷன் பெறமுடியாத உத்தியோகத்திலோ, வியாபாரத்திலோ, தொழிலிலோ இருக்கிறீர்களா? நீங்கள் கூட இந்த சுலபமான 'சுய-உதவி' முதலீடு திட்டத்தின் பிரகாரம் உங்கள் ஆயுட்காலத்திற்கும் பென்ஷன் பெறமுடியும்.

இப்போதே தொடங்குங்கள். அடுத்த 12 வருடங்களுக்கு மாதாமாதம் விடாமல் ஒரு பன்னிரண்டு வருஷ நேஷனல் சேவிங்ஸ் ஸர்டிபிகேட் வீதம் வாங்குங்கள். தொகை ரூ. 150 என்று வைத்துக்கொள்வோம். இந்த ஸர்டிபிகேட்டுகள் 1963 முதல் ஒவ்வொரு மாதத்திலும் ; காலாவதியாகி வரும். மாதம் ஒரு ஸர்டிபிகேட் வீதம் மாற்றி ரூ. 75 போனஸ் பெறுங்கள். அசல் தொகை ரூ. 150ஐ திரும்ப முதலீடு செய்து விடுங்கள். இப்படியாக 1963 முதல், உங்களுக்கு மாதாமாதம் ஒழுங்காக ரூ. 75 வருமானம் கிடைக்கும்.

இதனுடன் அசல் தொகையின் மொத்தம் ரூபாய் 21,600 உங்கள் வாரிசுதாரர்களுக்கும் வைக்கலாம். இன்றே ஆரம்பித்து மாதம் ஒரு ஸர்டிபிகேட் வீதம் அடுத்த பன்னிரண்டு ஆண்டுகளுக்கு வாங்குங்கள்.

நேஷனல் சேவிங்ஸ் ஸர்டிபிகேட்டுகள்

எதிர்கால நலனை உத்தேசித்துப் பார்ப்பவர்களுக்கும் பாதுகாப்பு

இந்திய நேஷனல் சேவிங்ஸ் கமிஷனர் வெளியீடு, [illegible]

198609

சுதேசமித்திரன்
வாழிய செந்தமிழ் — வாரப்பதிப்பு — வாழ்க நற்றமிழர்
Vol XXIII] கர ஞல பங்குனிமீ 3உ — 1952-ஞ மார்ச்மீ 16உ No 7

கவர்னர் மாற்றம்

★

நமது ராஜ்யத்தின் புதிய கவர்னர் ஸ்ரீ ஸ்ரீபிரகாசா நாளை பதவி ஏற்கின்றார். அப்பதவியிலிருந்து விலகும் பவநகர் மகாராஜாவுக்கு சென்னை மக்கள் உண்மையில் வருத்தத்துடனேயே விடைகொடுப்பர். காரணம், அவர் நம்மிடையே இருந்து வந்திருக்கும் மூன்றரை வருஷகாலமும், அவர் ஜனங்களின் அன்பையும், மதிப்பையும் மேன்மேலும் கவர்ந்து வந்திருப்பதுதான். நல்ல சம்பிரதாயங்கள் ஒரு முறை ஏற்பட்டுவிட்டால் பிறகு அவற்றைப் பின்பற்றி நடப்பது எளிது. ஆனால் ஆரம்பத்தில் அவற்றை உருவாக்குவது அவ்வளவு சுலபமல்ல. அதிலும் முதன் முதலாக சிறிதும் கலப்பற்றதொரு ஜனநாயகமுறையின் ஆரம்ப கட்டத்தில் சிறந்த சம்பிரதாயங்களை உருவாக்குவதில் சிரமமுண்டு. எனினும் இப்பணி நமது ராஜ்யத்தில் வெற்றிகரமாக நடந்தேறிவந்திருப்பதில் பவநகர் மகாராஜாவுக்கு விசேஷமான பங்குண்டு. நமது குடியரசில் முக்கிய அதிகாரம் மந்திரிகளிடந்தான் என்றாலும், ராஜ்யத்தின் தலைவர் என்ற முறையில் ஒரு கவர்னர் வகிக்கும் பதவி மிக்க உயரியது. இதற்குரிய பொறுப்பை பவநகர் மகாராஜா அனைவரும் ஒருமுகமாகப் பாராட்டத்தக்க முறையில் நிறைவேற்றிவந்திருக்கிறார். அவர் மாஜி சமஸ்தான மன்னர்களில் ஒருவர் என்பது அப்பாராட்டுக்கு இன்னும் சோபை அளிக்கக்கூடியது. பவநகர் மகாராணியும் சென்ற மூன்று ஆண்டுகளாக இந்த ராஜ்யத்தில் பல சமூக சேவா ஸ்தாபனங்களுடன் தொடர்பு கொண்டு அருஞ் சேவை புரிந்துவந்திருப்பது அனைவருக்கும் தெரியும். இவ்வாறு பொதுத் தொண்டில் ஆர்வமும், உள்ளத் தூய்மையும் வாய்ந்த பவநகர் தம்பதிகளைப் பிரிய நேர்ந்திருப்பதில் இம்மாகாண மக்கள் வருத்தங் கொள்வது இயற்கையே.

அடுத்தபடியாக இச்சமயத்தில் ஸ்ரீ ஸ்ரீபிர்காசா கவர்னர் பதவியை மேற்கொள்வது பலவகைகளில் பொருத்தமானது. அவர் விசேஷமான படிப்பாளி; பழுத்த அரசியல் வாதி; சுமார் நாற்பது வருஷ காலமாகப் பொது வாழ்வில் ஈடுபட்டு வந்திருப்பவர்; சட்டசபைகளில், பொதுவாக ஜனநாயக வழிமுறைகளில் நல்ல அனுபவமுள்ளவர். சமீபத்தில் அவர் அஸ்ஸாம் கவர்னராக இருந்து பின்னர் மத்திய சர்க்காரில் மந்திரியாக அமர்ந்தது அனைவருக்கும் தெரியும். நமது ராஜ்யத்தில் மற்ற வகைகளில் நெடுநாளாகவே இருந்துவரும் பல பிரச்னைகளுடன் இப்போது இணையற்றதொரு அரசியல் சிக்கலும் சேர்ந்திருக்கிறது. ஸ்திரமான ஒரு மந்திரி சபை ஏற்படுவதிலுள்ள சங்கடங்கள் அனைவரும் அறிந்ததுதான். இவை எவ்வாறு தீருமென்று தற்போது யாரும் திட்டமாகச் சொல்வதற்கில்லை. ஆனால் எத்தகைய நிலைமை ஏற்பட்டாலும், அதை சமாளிக்கக்கூடிய திறன் வாய்ந்த ஒருவர் இப்போது கவர்னராக இருப்பது அவசியமென்பதில் அபிப்பிராயபேதத்துக்கு இடமில்லை. இதற்கு வேண்டிய யோக்கியதை ஸ்ரீ ஸ்ரீபிரகாசாவுக்குப் பூர்ணமாக உண்டென்பதிலும் கருத்துவேறுபாடு இருக்கமுடியாது. இந்த ராஜ்யத்தில் தற்போதுள்ள சஞ்சலங்கள் தீர்ந்து ஒரு நிலையான மந்திரி சபையின் கீழ் நாம் பலவகையிலும் துரிதமாக முன்னேறுவதற்குப் புதிய கவர்னர் நமக்குப் பேருதவியாயிருப்பாரென்று நாம் திண்ணமாக எதிர்பார்க்கலாம்.

பொருளடக்கம்

★

		பக்கம்
கவர்னர் மாற்றம்		2
காற்றுவாக்கிலே	சிரேயஸ்	3
குதர்க்கம்	தரளம்	4
தந்தையின் பாசம்	மிஸ் சுசித்தா டேவிட்	5
முறைப்பெண்	கோமதி சுப்ரமன்யம்	11
லக்ஷ்மி	கே ஆர். கௌஸல்யா	17
ஜோடி வளையல்	ரசு	21
காளையும் கல்யாணமும்	இல்லவாசி	23
உங்கள் காலபலன்	ரசவ்	28
உத்தம புருஷன்	ஸுசீலா	32
ஜலந்தப்ரபா	கமலா	35
மந்திரக் கம்பளம்	சந்தனு	38
தேர்த்தட்டு வார்த்தை	வாரன்	39
புருஷனும் மனைவியும்	சாட்சி	41
ஹிந்தி உலகம்	பண்டிட்ஜி	43
அனுபவ ரேகாசாஸ்திரம்-ரோமேஷ் கே சாஸ்திரி		45
கலாமண்டபம்		47

"மித்திரன்" வாரப்பதிப்பில் கதைகளில் வெளியாகும் பெயர்கள் சம்பவங்கள் எல்லாம் கற்பனையே. அவை யாரையும் குறிப்பிடுவன அல்ல.

காற்றுவாக்கிலே...

நாலைந்து நாளைக்கு முன்னாலே கவர்னரானாரே ஸ்ரீபிரகாசா, அவர் தீராத தலைவலிக்காரராம். தலைவலி யென்றால் உங்க வீட்டு-எங்க வீட்டுத் தலைவலியில்லை, மண்டையைக் குடைந்து குருத்தெடுத்து விடுகிற தலைவலி! இப்படித்தான் அவர் ஒருநாள் துடியாய்த் துடித்துக்கொண்டிருந்தபோது யதேச்சையாக நேரு அவர் வீட்டுக்கு வந்தாராம். விஷயம் புரிந்ததும் ஓடோடிப் போய் மாத்திரை கொண்டு வந்து அவஸ்தையைத் தணித்தாராம்.

இப்போது புரிகிறதல்லவா, எதனால் வலுவில் வந்த இந்த வேலையை ஒப்புக்கொள்ள அவர் லேசில் சம்மதிக்கவில்லையென்பது? தலைவலி, திருகுவலியாக முற்ற யாருக்குத்தான் மனசு இருக்கும்! ஒரு உபாதையும் இல்லாதவர்களே 'சென்னை' என்றதும் பயந்து நடுங்கும்போது அவர் தயங்கியதில் ஆச்சரியமேது?

இத்தனைக்கும் அவரும் நேருவும் ரொம்ப ரொம்ப சிநேகிதர்கள். பள்ளிக்கூடநாளிலிருந்தே யார் மீதாவது 'காரம்' இருந்தால் கொடுக்க வேண்டிய இந்தப் பதவியைப் பின் எதற்காக ஸ்ரீ பிரகாசா மீது நேரு திணிக்கவேண்டும்? 'ஆண்டவனே என் நண்பர்களிடமிருந்து என்னைக் காப்பாற்று' என்று ஓலமிடச் செய்யவேண்டும்? பாலைப் போல, பழகப் பழகப் புளித்து விட்டதா? அதெல்லாம் ஒன்றுமில்லை, காரணம் இருக்கிறது, வேணமட்டும் இருக்கிறது.

முதலாவது, தனக்குத் தலைவலி வந்தாலும் மற்றவர்களின் விலா வலிக்கும்படிச் செய்துவிடும் சாமர்த்தியமுண்டு ஸ்ரீ பிரகாசாவுக்கு. படே தமாஷ் பேர்வழி அவர். சிரிக்கச் சிரிக்கப் பேசி வயிறு வெடிக்கச் செய்துவிடுவார் எல்லாரையும். எந்த இக்கட்டிலும் நகைச்சுவையைத் தேடிப் பிடித்து நகாசு கொடுத்துவிடுவார். 'ஆனாலும் ஆச்சுது, போனாலும் போச்சுது, அடிக்கிறேன் பார் ஒரு தம்மாசு' என்று வரிந்து கட்டிக்கொண்டு கிளம்பிவிடுவார். இப்படிப்பட்டவர் சென்னைக்கு வந்தால் சௌஜன்யத்துக்கு என்ன குறைச்சல்? எல்லாம் 'இனிது நடக்கும்' என்பதில் சந்தேகமென்ன? மேலும், சென்னையை விட்டால் வேறு எங்கேதான் இவ்வளவு தமாஷ்களைப் பார்க்க முடியும், ஹாஸ்யப் பிரியரான தம் அத்யந்த சிநேகிதரையல்லாமல் வேறு யாரை இதையெல்லாம் கண்டு களிக்க நேரு அனுப்ப முடியும்?

இரண்டாவது காரணம், ஸ்ரீ பிரகாசாவின் தத்துவப் பித்து. தகப்பனாரான டாக்டர் பகவன் தாஸைப் போலவே பழுத்த தத்துவ ஞானி. பிரும்ம ஞானத்திலே அபார மோகம். பாரமார்த்திகத் துறையில் 'முற்றிக் கனிந்த' சென்னைக்கு இம்மாதிரியானவர் அனுப்பப்படுவது பொருத்தம்தானே! இப்போதைய ராஜீய நிலைக்குக்கூட 'பற்றற்ற' மனோபாவமும் ஒரு காரணமல்லவா? ஆகவேதான் முள்ளை முள்ளாலே எடுப்பது போல அவரை நேரு அனுப்பியிருக்கிறார் போலிருக்கிறது.

மூன்றாவதாக, சென்னைக்கும் அவருக்குமிடையேயுள்ள வெகு நாளைத் தொந்தம். சரித்திரத்தில் படித்திருப்பீர்களே கிழக்கிந்தியக் கம்பெனியென்று, அந்த நாள் முதலாகவே. அதனுடன் கொடுக்கல் — வாங்கலுக்காக அப்போதே அவருடைய மூதாதைகளுக்கு இந்தப் பக்கம் வரத்துப் போக்கு உண்டாம். 'பெரியார் திருக்கூட்டத்துக்குத் தெரிந்தால் விபரீதமாகிவிடுமே, இப்போதே வடநாட்டான் படையெடுப்பு என்று கூறுபவர்கள், ஓநாய்—ஆட்டுக்குட்டி கதையில் போல பாட்டன், முப்பாட்டனின் வியாபாரத்துக்காகக் கொள்ளுப் பேரனைக் கொத்தியெடுத்து விடுவார்களே' என்று வீணாகக் கலங்காதீர்கள். சாதாரண ஆடல்ல இது, சண்டைக் கடா! ஆனானப்பட்ட பாகிஸ்தானிலேயே வருஷக்கணக்கில் தாக்குப்பிடித்து வந்திருக்கிறது. அஸ்ஸாம் மலைப் பகுதியிலே நாகர்களிடையே கூட நல்ல பெயர் எடுத்து வந்திருக்கிறது. அப்படியிருக்க, வெறும் குடைத்துணியைக் கண்டா மிரண்டுவிடும்! கருப்புக்கொடி வீரரெல்லாம் நாகர்களைப்போல காட்டு மிராண்டிகளல்ல, நாகரிகப் பழங்கள், என்பதுதான் ஸ்ரீ பிரகாசாவுக்குத் தெரியாத விஷயமா?

வல்லவனையும் புல் தடுக்குமல்லவா? ஆகவே ஒரு எச்சரிக்கை: குதிரை சவாரியில் அவருக்கு வெகு பிரியமாம். குண்டு சட்டியிலல்ல, நிஜக் குதிரை மீதுதான். டில்லியிலிருந்தவரையில் தினப்படி தம் லாயத்திலிருந்து ஒரு குதிரையை ஜனாதிபதி அவருக்கு அனுப்பி வைப்பது வழக்கமாம். சென்னையில் இதற்கெல்லாம் அவருக்கு 'டயம்' கிடைக்காதென்பது நிச்சயம். 'பச்சைக் குதிரை' தாண்டுவதற்கே பொழுது சரியாயிருக்கும். மேலும், வலங்கிமான் குதிரைகளுக்கும் வெள்ளிமூக்குக் குதிரைகளும் மண் குதிரைகளும் தான் ஏராளம் இங்கே. 'முன்னால் பார்த்தால் செட்டியார் குதிரை, பின்னால் பார்த்தால் சாயபு குதிரை' என்று சந்தர்ப்பத்துக்குத் தகுந்தபடி சாதிப்பவர்களும் ஜாஸ்தி உண்டு. ஆகவே, அவர் சொன்னார், இவர் சொன்னார் என்று 'இடக்கு மட்டம்' எதன் மேலாவது ஏமாந்து ஏறாமல், நல்ல ஜாதிக் குதிரையா, சுழி சுத்தமாயிருக்கிறதா என்று ஒரு தடவைக்குப் பத்து தடவையாகப் பார்த்து ஏறவேண்டும். இல்லாவிட்டால் எக்கச்சக்கம்தான். ஆமாம், இப்போதே சொல்லிவிட்டேன். —சிரேயஸ்

குதர்க்கம்

பர்தோலியில் நடக்கும் எஞ்ஜினீயர்கள் மகாநாட்டில் 'இயந்திர எதிர்ப்பு இயக்கம்' ஒன்றைத் துவக்குவது பற்றி ஆலோசிக்கப்படும்.

—சூரத் செய்தி.

இந்த இயக்கத்தை எஞ்ஜினீர்களே 'முடுக்கிவிட' முன்வந்துள்ளதால் அது திறமையாக 'இயங்கும்' என்பதில் யார்தான் சந்தேகப்பட முடியும்?!

* * *

லீப்வருட தினமாகிய பிப்ரவரி 29-ந் தேதியன்று ஆரோரா நகரிலுள்ள பெண்மணிகள் அரசாங்கத்தின் எல்லாப் பதவிகளையும் தாங்களே ஏற்றதுடன், போலீஸ் படையொன்றும் நிறுவி மணமாகாத இளைஞர்களையெல்லாம் சிறைபிடித்து அபராதம் விதித்தனர்.!

—செய்தி.

'இத்தோடு விட்டால் பரவாயில்லையே! தங்கள் உள்ளச் சிறையிலும் அவர்களை அடைத்து வைத்துக் கலியாண தண்டனையை விதிக்காமலிருக்கவேண்டுமே அந்தப் பெண்தெய்வங்கள்!' என்கிறார் இங்கொரு பிரம்மசாரி!

* * *

சந்திர மண்டலத்திலுள்ள உலோகங்களைத் தோண்டியெடுக்கும் உரிமை கோரி விஞ்ஞான சங்கமொன்றின் தலைவர் ஒருவர் ஐ.நா.சபைக்கு மனுச் செய்துகொண்டுள்ளார்.

—பேர்க்லே செய்தி.

இந்தச் செய்தியை அறிந்தபின்பும் நமது பிரதம மந்திரி ஸ்ரீ.நேரு சந்திர மண்டல அரிசிவிளைவையெல்லாம் இந்தியாவிற்கே உரிமையாக்கவேண்டும் என்று ஐ.நா.வுக்கு மனுச்செய்து கொள்ளாமல் வாளாவிருக்கமாட்டார் என்றே கருதுகிறோம். 'சந்திர மண்டலத்திலிருந்தாலும் அரிசி கொண்டு வருவேன்' என்று சொல்லினவரல்லவா?

* * *

குடித்துவிட்டு வந்ததாக போலீஸ்காரர் ஒருவர் வேலையிலிருந்து நீக்கப்பட்டார்.

—வேலூர் செய்தி.

'இந்தியா குடியரசான பின்பு போலீஸ்காரர்கள் குடிகளின் தோழர்களாக இருப்பதுதான் முறை என்று பல பிரமுகர்கள் பேசியிருப்பதற்குச் செவி சாய்த்தே அவர் அப்படிச் செய்திருக்கக்கூடும்' என்கிறார் ஒரு கிண்டல்காரர்! முறை தவறுவது முறையல்லவே! !

* * *

குறட்டை விடுவதில் தவறே இல்லை என்று இரு பிரபல டாக்டர்கள் அபிப்பிராயப்படுகின்றனர்.

—லண்டன் செய்தி.

ரயில் நேரங்கள்

★

சென்ட்ரல் ஸ்டேஷன்

புறப்படும் நேரம்

கல்கத்தா மெயில்	இரவு	8–20
கிராண்ட்டிராங் எக்ஸ்.	காலை	8–15
சென்னை-கல்கத்தா (ஜனதா 3-வது வகுப்பு மட்டும்)	காலை	10–30
சென்னை—பெஜவாடா பர்ஸஞ்சர்	காலை	6–55
பம்பாய் மெயில்	இரவு	9–5
விசாகப்பட்டணம் பார்ஸல் பாசஞ்சர் (3-ம் வகுப்பு)	இரவு	10–45
சென்னை—பம்பாய் ஜனதா எக்ஸ்பிரஸ் (3-ம் வகுப்பு) பிரதி வியாழன்	மாலை	2–0
பம்பாய் எக்ஸ்பிரஸ்	காலை	7–35
ரெய்ச்சூர் பாஸஞ்சர்	காலை	8–50
ரேணிகுண்டா பாஸஞ்சர்	மாலை	5–30
பெங்களூர் மெயில்	இரவு	8–50
பெங்களூர் எக்ஸ்பிரஸ்	பகல்	12–35
" பாஸஞ்சர்	காலை	6–10
" "	இரவு	9–25
சேலம் பாஸஞ்சர்	காலை	11–10
பூரி பாஸஞ்சர்	இரவு	7–20
விசாகப்பட்டணம் பார்சல் பாஸஞ்சர் (3- வகுப்பு)	இரவு	10–45
ஜோலார்பேட்டை பாசஞ்	காலை	11–40
நீலகிரி எக்ஸ்பிரஸ்	இரவு	8–15
கொச்சின் எக்ஸ்பிரஸ்	மாலை	6–0
மங்களூர் எக்ஸ்பிரஸ்	இரவு	7–30
அரக்கோணம் பாசஞ்	மாலை	6–44

வரும் நேரம்

கல்கத்தா மெயில்	காலை	6–45
கிராண்ட் டிராங் எக்ஸ்பிரஸ்	மாலை	6–50
சென்னை-கல்கத்தா (ஜனதா 3-வது வகுப்பு மட்டும்)	மாலை	5–40
சென்னை-பெஜவாடா பாஸஞ்சர்	இரவு	9–30
பூரி பாஸஞ்சர்	காலை	10–10
விசாகப்பட்டணம் பார்சல் பாசஞ்சர் (3- வகுப்பு)	காலை	5–45
பம்பாய் மெயில்	காலை	5–50
" எக்ஸ்பிரஸ்	இரவு	7–10
ரெய்ச்சூர் பாஸஞ்சர்	மாலை	4–20
ரேணிகுண்டா பாஸஞ்	இரவு	9–15
" "	காலை	9–50
பெங்களூர் மெயில்	காலை	6–25
" எக்ஸ்.	மாலை	2–25
" பாஸஞ்சர்	இரவு	8–40
" "	காலை	5–15
ஜோலார்பேட்டை பாஸஞ்சர்	மாலை	2–15
பிட்ரகுண்ட பாஸஞ்	காலை	4–0
கொச்சின் எக்ஸ்பிரஸ்	காலை	7–50
நீலகிரி எக்ஸ்பிரஸ்	காலை	7–5
மங்களூர் எக்ஸ்பிரஸ்	காலை	7–20
மதராஸ்-பம்பாய் வாராந்திர ஜனதா எக்ஸ்பிரஸ் (3-ம் வகுப்பு மட்டும்) பிரதி திங்கள்	மாலை	8–0

எழும்பூர்

புறப்படும் நேரம்

மெயின் லைன்

செங்கோட்டை பாஸஞ்	காலை	7–0
இந்தோ-சிலோன் எக்ஸ்.	இரவு	8–20
திருவனந்தபுரம் பாஸஞ்.	இரவு	9–50
மதுரை பாஸஞ்சர்	இரவு	10–20

கார்டு லைன்

திருவனந்தபுரம் எக்ஸ்.	இரவு	7–30
தூத்துக்குடி எக்ஸ்பிரஸ்	இரவு	9–30
மதுரை ஜனதா எக்ஸ்பிரஸ்	இரவு	6–55
தனுஷ்கோடி பாஸஞ்சர்	காலை	10–0
விழுப்புர்ம் பாசஞ்சர்	மாலை	3–40

பீச்சிலிருந்து

காஞ்சீபுரம் பாசஞ்சர்	மாலை	5–34
காஞ்சீபுரம் பாஸஞ்சர்	மாலை	6–1

வரும் நேரம்

மெயின் லைன்

செங்கோட்டை பாசஞ்சர்	இரவு	8–50
இந்தோ-சிலோன் எக்ஸ்.	காலை	7–40
திருவனந்தபுரம் பாஸஞ்.	காலை	6–0
மதுரை பாஸஞ்	காலை	5–30

கார்டு லைன்

திருவனந்தபுரம் எக்ஸ்.	காலை	6–50
தூத்துக்குடி எக்ஸ்.	காலை	6–20
தனுஷ்கோடி பாஸஞ்.	மாலை	4–5
விழுப்புரம் பாசஞ்சர்	காலை	11–45
மதுரை ஜனதா எக்ஸ்பிரஸ்	காலை	8–25

பீச்சிற்கு

காஞ்சீபுரம் பாசஞ்சர்	காலை	9–28
" "	காலை	9–52

செய்தியை சட்டசபைத் தலைவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர பல சட்டசபை அங்கத்தினர்கள் முயன்று வருவதாகவும் கேள்வி!

* * *

கள்ளச் சந்தையில் விற்பதற்காகக் கொண்டுபோன சுமார் ரூ.1500 பெறுமான நூல்கள் போலீசாரிடம் பிடிபட்டன.

—மதுரைச் செய்தி.

நூல்கள் போலீசாரிடம் சிக்கிக் கொண்டன என்றிருந்தால் பொருத்தமாக இருக்குமே!

* * *

மதுரை, ராமனாதபுரம், திருநெல்வேலி ஜில்லா பஞ்சு வியாபாரிகள் சங்க முதல் ஆண்டுவிழாவில் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

—செய்தி.

தீர்மானங்களின் மீது விவாதம் நடந்திருந்தால் அவை பஞ்சு படும் பாடும் பட்டிருக்கும் என்று நினைக்கலாமல்லவா .....!

* * *

கல்வி விஷயத்தில் சர்க்கார் திடீர், திடீரென கொள்கையை மாற்றுவது கண்மூடித்தனம். பையன்களின் அறிவைக் குறைப்பதாகும்.

—ஸ்ரீ.தென்னேட்டி விஸ்வநாதம்.

இவ்வளவுதூரம் படித்துப் படித்துச் சொல்லுகிறாரே, சர்க்கார் செவி சாய்க்குமோ? :

தாளம்

தந்தையின் பாசம்

★

மிஸ் சுகிர்தா டேவிட்

"அப்பொழுது நான் மதுரை கவர்ன்மெண்ட் ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டிருந்தேன். புது இடம். இன்னும் நண்பர்கள் ஏற்படவில்லை. சதா நண்பர்கள் புடைசூழ நேரத்தை வேடிக்கையாக கழித்து வந்த எனக்கு 'இந்த சூழ்நிலை கண்களைக் கட்டி காட்டில் விட்டது போலிருந்தது. கிருபாகரியும் (எங்கள் அண்ணி) நானும் 'கொட்டுக் கொட்டென்று' ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருப்போம். நானும் வேலைநேரம் தவிர வீடே கதியென்று கிடந்தேன். இந்த நிலையில்தான் சப் இன்ஸ்பெக்டர் இளங்கோவன் எனக்குப் பரிச்சியமானார். கவர்ன்மெண்ட்உத்தியோகஸ்தர்கள் என்ற பதவி நிலை நாங்களிருவரும் அடிக்கடி சந்திக்க சந்தர்ப்பமேற்படுத்திக் கொடுத்தது. சரளமான சுபாவம்—பண்பட்ட உள்ளம்—விரிந்த மனப்பான்மை இவையாவும் எங்களிடையே ஸ்திரமான அன்பையும், ஆழ்ந்த நட்பையும் பதித்துவிட்டன. இன்ஸ்பெக்டர் மணமாகாதவர். மனைவி, குழந்தை குட்டிகள் என்று நச்சுப் பிச்சுகள் இல்லையாதலால் நானும் நேரம் கிடைத்த போதெல்லாம் அவருடைய வீட்டிற்குச் சென்று உரையாடிக் கொண்டிருப்பேன்.

இரண்டு நாட்களாக எனக்கு ஓய்வு ஒழிச்சல் இல்லாத வேலை. டி. எம். ஓ. எங்கள் ஆஸ்பத்திரியை வந்து பார்வையிடப் போகிறார் என்ற காரணமே அதற்கு முக்கியமானது. அதனால் இவ்விரண்டு நாட்களிலும் என்னால் இன்ஸ்பெக்டரைச் சந்திக்க முடியவில்லை. மூன்றாம் நாள்தான் அதிகப்படியான வேலைகளிலிருந்து கொஞ்சம் விடுபட்டிருந்தேன். ஆனால் சப் இன்ஸ்பெக்டரிடமிருந்து கிடைத்தத் தகவலிலிருந்து, ஒரு அநாதைப் பிணம் தெப்பக் குளத்தில் மிதப்பதாகவும், அதை 'போஸ்ட் மார்ட்டம்'செய்யவேண்டியிருக்குமெனவும் அறிந்து அங்கு ஓடினேன். அதையும் முடித்துவிட்டு வீட்டிற்குத் திரும்பும்பொழுது பகல் மணி மூன்றரை.

"ஏன்னா! ஏன் இன்றைக்கு இத்தனை நேரம்?" என்று கேட்டுக் கொண்டே என்னை வரவேற்ற கிருபாவுக்குக்கூட பதில் கொடுக்காமல் அப்படியே ஈஸிசேரில் 'தொப்'பென்று விழுந்தேன். அவ்வளவு அசதி!

"இது என்ன பிழைப்பு! வேளா வேளைக்கு ஆகாரமுண்டா? ஓய்வு ஒழிச்சல்தான் உண்டா? இப்படி உடம்பை கவனித்துக் கொள்ளாமல் ஓடாய் உழைத்தால் என்ன ஆவது? இந்த டாக்டர்களே பிறத்தியாருக்கு உபதேசம் செய்யத்தான்!" என்று அலுத்துக் கொண்டாள் கிருபா.

"என்ன கிருபா! நீகூட இப்படிப் பேசுகிறாய்? கடமைக்குப் பிறகல்லவா ஓய்வும் உணவும்! இன்றைக்காவது சீக்கிரம் வீட்டுக்கு வந்துவிடலாமென்றுதான் கிளம்பினேன். ஆனால் எதிர்பாராதவிதமாக சப் இன்ஸ்பெக்டர் இளங்கோவனிடமிருந்து ஆள் வந்துவிட்டது. ஏதோ ஒரு அனாதைப் பிணமாம். தெப்பக் குளத்தில் மிதந்துகொண்டிருந்ததாம். பிரேதப் பரிசோதனைக்கு உடனே வரும்படி சொல்லியனுப்பியிருந்தார். என்ன செய்வது? அங்கேயும் போகவேண்டியதாகிவிட்டது. பிரேதத்தை அறுத்துப் பரிசோதனை செய்ய வேண்டியிருந்ததால் இவ்வளவு நேரமாகிவிட்டது" என்றேன்.

இதற்குள் யாரோ "டாக்டர் சார்" என்று கூப்பிடும் குரல் கேட்டு வாசலுக்கு ஓடினேன். போலீஸ் சேவகன் மூன்றுநாலு நின்றுகொண்டிருந்தான். ஓடிவந்த வேகத்தினால் மூச்சு வேகமாக வந்துகொண்டிருந்தது. "என்னப்பா விசேஷம்?" என்று கேட்குமுன்பே, "டாக்டர் ஐயா! இன்ஸ்பெக்டர் எசமான் உங்களைக் கையோட கூட்டியாரச் சொன்னாங்க" என்று இரைக்க இரைக்கக் கூறினான். "சரி, இதோ வந்துவிட்டேன்" என்று கூறிவிட்டு உள்ளே சென்று "கிருபா! இன்ஸ்பெக்டர் என்னை உடனே கூட்டிக்கொண்டு வரச் சொன்னாராம். ஏதோ அவசர காரியம் போலிருக்கிறது. நான் போகிறேன். கதவைச் சாத்திக் கொள்" என்றேன். கிருபாவுக்கு கோபமும் ஆத்திரமும் குமுறிக் கொண்டு வந்தன. "ஆமாம் அந்த இன்ஸ்பெக்டருக்கும் வேலையில்லை. உங்களுக்கும் வேலையில்லை. அவர்தான் பிரம்மச்சாரி. பெண்டாட்டி பிள்ளை என்ற பிக்கல் பிடுங்கல் கிடையாது. உங்களுக்கும் அப்படியா? இனி அரட்டைக் கச்சேரியை ஆரம்பித்துவிட்டீர்களானால் வீட்டிற்குவர இரவு இரண்டுமணியாகாதா! என்றைக்குத்தான் இந்த அவலப் பிழைப்பு ஒழியுமோ?"வென்று படபடப்பாகக் கூறிவிட்டு அடுக்களைக்குள் போய் நுழைந்துகொண்டாள். நானும் மூன்றுநாலைப் பின் தொடர்ந்தேன்.

சோர்ந்த முகத்தோடு கன்னத்தில் கைவைத்து உட்கார்ந்து கொண்டிருந்த இன்ஸ்பெக்டரைக் கண்டதும் என் மனம் துணுக்குற்றது. இன்ஸ்பெக்டர் இளங்கோவனுக்குக்கூட கவலையா? விதவிதமான வரலாறுகளைக் கூறும் கைதிகளோடு பழகுபவர். அவற்றின் சாராம்சத்தில்—உணர்ச்சிப் பெருக்கில் மரத்துப்போன அவரது மனதையே நெகிழ வைக்கக் கூடிய சக்தி அவரது உள்ளத்தில் பொங்கிக் கொண்டிருப்பதானால்? ஏதோ விபரீதம் நிகழ்ந்

திரும்பதாக என் உள்ளுணர்வு கூறிற்று.

"வாருங்கள், டாக்டர்!" என்றார் இளங்கோவன். ஆனால் வரவேற்புக்குரிய உற்சாகம் தொனிக்கவில்லை அவரது வார்த்தைகளில். சோகத்தில் தோய்ந்த சொற்கள். உடலில் சிறு நடுக்கம். அவரையே தகர்த்துக்கொண்டு அவர்மனம் புரண்ட புரட்சி பயங்கரமானதாகத்தானிருந்திருக்க வேண்டும். திடீரென அவருள் கிளர்ந்த எழுச்சியை மடக்கவோ அல்லது தனக்குத்தானே அறிந்து கொள்ளுவதற்குக்கூட அவரது மனோ பாஷை பலனற்றுப் போனதுபோல் வேதனையின் சாயை படிந்து சிந்தனை ரேகைகள் படர்ந்திருந்தன அவரது முகத்தில். அவருடைய இந்தப் போக்கு எனக்குப் பிடிபடவேயில்லை.

"இன்ஸ்பெக்டர்! என்னை அழைத்தீர்களாமே!" இவ்வார்த்தைகள் என் வாயிலிருந்து லேசாக வெளி வந்த போதிலும் அங்கு நிலவிய அமைதிக்கு முன்னால் எக்காள ஓசையோடு எதிரொலிப்பது போலிருந்தது.

"ஆம் மிஸ்டர் துரைராஜ்! நான் தங்களை அழைத்தேன்; உடல் நோய்க்கு வைத்தியம் செய்யும் தாங்கள் என் உள்ள நோய்க்கு மருந்து கொடுக்க மாட்டீர்களா என்றுதான்! டாக்டர்! தாங்கள் பிறருக்குப் பணியாற்றுவதிலேயே மன நிம்மதியடைய வழியுண்டு. ஆனால் என் உத்தியோகத்தில் மன நிம்மதிக்கே மார்க்கமில்லை. ஏதோ பீடிகையிலேயே நேரம் போக்குகிறேன் என்று நினைக்காதீர்கள். இன்றுநடந்த சம்பவம் என் வாழ்க்கையையே வேறு பாதையில் திருப்பி விட்டது. என் மனோவேதனையின் போராட்டத்தை, எனக்குற்ற நண்பனான தங்களிடம் கூறியாவது என் துயரச்சுமையைக் குறைத்துக் கொள்ள எண்ணியே தங்களை வரவழைத்தேன்." என்றார். நான் உட்கார்ந்திருந்த சோபாவை அவரருகில் நகர்த்திக்கொண்டு அவரது முகத்தில் மின்னி மறையும் எண்ணற்ற சலன பாவங்களையே உற்று நோக்கிக் கொண்டிருந்தேன். அவற்றிலிருந்து அவரது உள்ளத்தில் கொந்தளிக்கும் சிந்தனைக் குமுறல்களில் எந்த பகுதியை முதலில் வெளியிடுவது என்று தெரியாமல் திணறுவது நன்கு பிரதி பலித்துக்கொண்டிருந்தது.

"டாக்டர்! என் வாழ்க்கைச் சரிதம் முழுவதையும் கூறினால் தான் என் இன்றைய மனோ நிலையை நீங்கள் கற்பனை செய்தாவது பார்க்க முடியும், தயவுசெய்து பொறுமையாகக் கேட்டுக்கொண்டு வாருங்கள்."

"நான் பிறக்கும்பொழுதே பணக்காரனாகப் பிறந்துவிடவில்லை. என் தாய்தந்தையர்கள் மிகவும் ஏழைகள். என் தந்தை மாணிக்கம்பிள்ளை ஒரு செட்டியாரிடம் முப்பது ரூபாய் சம்பளத்தில் கணக்கப்பிள்ளையாகயிருந்துவந்தார். என் தாயார் பெயரளவில் மஹாலெட்சுமியாகயிருந்தபோதிலும் பொருளாதார நிலையில் லட்சுமி கடாட்சம் பெற்றிருக்கவில்லை. யுத்த நெருக்கடியான காலம். விலைவாசிகள் விஷம்போல் ஏறியிருந்தன. அரை வயிற்றுக் கஞ்சிக்குக் கூட காணாத வருவாய். இதில் மூன்று ஜீவன்கள் எப்படி உயிர் வாழ முடியும்? ஆனாலும் என் பெற்றோர் எனது படிப்பில் மிகுந்த அக்கரைகாட்டி வந்தனர். நான் எட்டாவது வகுப்பில் படித்துக்கொண்டிருந்தேன். எப்பொழுதுமே கல்வித் தேர்ச்சியில் முதல் ஸ்தானம் வகிப்பவனாதலாலும், ஏழை என்ற காரணத்தாலும் எனக்கு உபகாரச் சம்பளம் கிடைத்து வந்தது. மகன் கல்வி கற்று உத்தியோகம் வகிப்பான். நம் வறுமை வெறுமையாகி விடும் எனப்பெருமிதம் கொண்ட என் பெற்றோர் பசிக்கொடுமை என்பதே நானறியா வண்ணம் தங்கள் உணவையும் எனக்களித்து செல்வமாக வளர்த்து வந்தனர். ஒருநாள் அப்பா சோர்வோடு திரும்பி வந்தார். வீட்டிற்கு நானும் அம்மாவும் காரணம் கேட்டோம். அப்பா வேலை பார்த்து வந்த செட்டியாரின் சிங்கப்பூரிலிருந்த கடைகள் ஜப்பானியரின் குண்டு வீச்சுக்கு இலக்காகி விட்டபடியால் இனிமேல் அப்பாவுக்கு வேலையில்லை. அப்பா கூறிய தகவல் இதுதான். என் பெற்றோரின் துன்பச்சுமை வளர்ந்தது. விளையாட்டுப் பருவமாதலால் குடும்ப நிலை என்னை அதிகம் பாதித்ததாகத் தெரியவில்லை. வறுமையின் வளர்ச்சி உடலுறுப்புக்களை அரிக்கவாரம்பித்தது. அம்மா படுத்த படுக்கையானாள். அப்பா எலும்புக்கூடானார். நான் ஊரார் வீட்டுச் செல்லப்பிள்ளையாக இங்குமங்கும் கிடைப்பதை தின்று வந்தேன்.

அந்நிலையில் தான் எனது ஒன்றுவிட்ட பெரியப்பா சிங்கப்பூரிலிருந்து லட்சாதிபதியாகத் திரும்பி வந்தார். எங்களது குடும்ப நிலைக்கு இறங்கி தமக்குக் குழந்தைகளில்லையாதலால் என்னைத் தமக்கு ஸ்வீகாரமாகக் கொடுத்து விட்டால் அவர் என் தந்தைக்கு ரூ 500 கொடுத்து விடுவதாகச் சொன்னார். முழுவதுமாக ரூ 100ஐ சேர்ந்தாற்போல் மொத்தமாகப் பார்த்தறியாத எங்கள் கண்களுக்கு ரூ500 பெருந்தொகையாகத் தோற்றமளித்தது. என்னை ஸ்வீகாரம் கொடுக்க என் தாயார் முதலில் ஒப்புக்கொள்ளாவிட்டாலும் 'நானாவது சுகப்படலாமே!' என்ற எண்ணத்தினால் ஒரு வகையாக சம்மதித்தாள். ஆனால் அவளுக்கு நான் செய்த கைம்மாறு?

நானும் பெரியப்பாவின் பங்களாவுக்கு வந்துவிட்டேன். புதுப்புது உடைகள், பள்ளிக்கூடம் செல்ல பளபளப்பான கார், மனிதன் ஏழையாகயிருக்கும் வரையில் நல்லவனாகயிருக்கிறான். ஆனால் திடீரென ஏராளமான சொத்துக்கு அதிகாரியாகி விட்டால்... பணக்கார சூழ்நிலை அவனது நடத்தையை எவ்வளவு தூரம் மாற்றி விடுகிறது. அதன் ஆதிக்கத்துக்கு நான் மட்டும் விலக்காகி விட முடியுமா? என் ஏழைத் தந்தை, மரணப் படுக்கையிலிருக்கும் தாய், இவர்களைப் போய் காண்பதும் ஓட்டைக் குடிசையின் இறங்கிய தாழ்வாரத்தில் தலை குனிந்து நுழைவதும் என் கௌரவத்துக்கு கீழானது என எண்ணினேன். என் தாயார் என்னைக் காண ஏங்குவதாக என் தந்தை என்னை வந்து அழைக்கும் போதெல்லாம் அவரைத் துச்சமாகப் பேசி அனுப்பி விட்டேன். வறுமை, நோய், மனக்கவலை ஏக்கம் யாவும் ஒன்று சேர்ந்து என் தாயின் உயிரைக் குடித்து விட்டன.

திடீரென அவர் பேசும் வார்த்தைகளின் தொடரே அவருக்கு மறந்துவிட்டது போல் ஒரு நிமிஷ நேரம் மௌனமாயிருந்தார். அவரது மனதின் அடி தளத்தில் ஆழப் புதைந்து கிடந்த எதையோ சிரமப்பட்டு வெளிக்கொண்டு வருவது போன்ற ஒரு நிலையைக் காட்டியது அவர் முகம். துன்பத்தின் சாயை மறைத்துக் கொள்ள முயலுபவர் போல் கை குட்டையால் ஒரு முறை முகத்தைத் துடைத்துக் கொண்டு ஒரு பெருமூச்சுடன் மீண்டும் பேச ஆரம்பித்தார்.

"தாயின் பிரிவு என் தந்தையை நடைபிணமாக்கியது. கவலையை மறைக்கக் காவாலிகளோடு சேர்ந்து சூதாடவும் குடிக்கவும் பழகிக் கொண்டார். கையிலிருந்த காசு கரைந்த போதெல்லாம் பெரியப்பாவிடம் வந்து பணம் கேட்பார். அப்பாவின் இழிவான பேச்சுகளுக்கு அஞ்சி அவர் கேட்கும் போதெல்லாம் ஏதாவது பணம் கொடுத்துக் கொண்டே வந்தார் பெரியப்பா. இது அப்பாவின் கீழ்த்தர செயல்களுக்கு தூபம் போட்டது.

இத் தருணத்தில் தான் நான் சப் இன்ஸ்பெக்டர் பதவியை ஏற்றுக் கொண்டேன். பெரியப்பாவுக்கு நான் பதவியில் ஒருவருக்குக் கீழ் கைகட்டிச் சேவகம் செய்வது பிடிக்கவில்லை. சொத்துக்களை மேற்பார்வையிட்டுக் கொண்டிருக்கும்படி சொன்னார். ஆனால் என் முரட்டு சுபாவத்துக்கு இன்ஸ்பெக்டர் வேலை மிகவும் பிடித்திருந்ததால் பெரியப்பாவின் சொல்லைத்தட்டி உத்தியோகத்திலமர்ந்தேன். நாட்கள் ஓடிக்கொண்டிருந்தன. எதிர்பாராத விதமாக ஒரு நாள் திடீரென்று பெரியப்பா மாரடைப்பால் இறந்து போனார். சொத்துக்கு வாரிசாகி விட்ட என்னைச் சுற்றி சுற்றி வந்தார் அப்பா. அப்பாவின் சகவாசத்தாலும், கீழான நடத்தையினாலும் உத்தியோகத்தில் நான் அடையக் கூடிய உயர்வுகளுக்கு தடையேற்படுமோவென பயந்தேன். சூதாட்டத்தை ஒழிக்கும்படி கெஞ்சினேன். மன்றாடினேன். கண்டித்தேன். "என் கையாலேயே தங்களுக்கு விலங்கு பூட்ட நேரிடும்" என்று பயமுறுத்தினேன். ஆனால் இவற்றிற்கெல்லாம் மசியவில்லை அவர்.

அன்றொரு நாள் இரவு பத்து மணி இருக்கும். நான் மொட்டை மாடியில் உலாவிக் கொண்டிருந்தேன். எனக்கு பால் எடுத்துக் கொண்டு வந்த சமயற்காரன் "யாரோ ஒருவன், பார்த்தால் பிச்சைக்காரனைப் போலிருக்கிறது. துர்நாற்றம் கிட்டே நெருங்க முடியவில்லை. அடித்து விரட்டினாலும் போகமாட்டேனென்கிறான். தங்களை அவசியம் பார்க்க வேண்டுமென்கிறான்.

கொடுத்தார். நான் ஆவலோடு பிரித்துப் படித்தேன்.

"ஆசை மகனுக்கு,

எத்தனையோ வருஷங்களுக்குப் பிறகு உனக்கு நான் எழுதும் முதலும் கடைசியுமான கடிதம் இது. நான் உயிரோடிருந்த வரையிலும் உனக்கு ஒரு வித நன்மையும் செய்யவில்லை. ஒரு தந்தையின் கடமையைக் கூட சரிவர நிறைவேற்ற முடியவில்லை என்னால். என்னால் உனக்கு நேர்ந்த கஷ்டங்கள் எத்தனையோ! மகனே! அவற்றிற்கெல்லாம் முடிவு கட்டவே இக்கடிதம் எழுதுகிறேன்.

இளங்கோவா. 6 மாதங்களுக்கு முன்பு பேப்பரில் படித்திருப்பாய். நான் திருடனென்பதை அறிந்து உன் மனம் துடி துடித்திருக்கும். மனைவியை இழந்த கவலையை மறக்க உதவிய குடியே என்னைத் திருடத் தூண்டியது. ஆனால், கைதியானேன். முன் பின் திருடியறியாத என்னைப் போலீஸார் சுலபமாகப் பிடித்துவிட்டனர். அவர்களின் கசையடிகள் என் உடலில் பதிந்து இரத்தக் கிளறியாக்கி விட்டன. லட்சாதிபதியான மகனின் தந்தையான நாம் அடிபடுகிறோமே என்றெண்ணிய வேளையில் உன்னைத் தூற்ற எண்ணியது மனம். ஆனால், நான் உனக்கு இது வரை கொடுத்து வந்த மனக்கஷ்டங்களுக்குப் பிராயச்சித்தமாக உன் பெயரை வெளியிடவில்லை. மகனே. சிறையில் நானனுபவித்த மனத் துயரம் எத்தகையது தெரியுமா? அருமையான மகனின் அன்பைப் பெற வழியில்லாத அபாக்கியவான் அல்லவா நான். அனுபவிக்க வேண்டியதுதானே.

சிறை வாசம் என் உடலை மட்டுமல்ல— உள்ளத்தையும் மாற்றிவிட்டது. நான் விடுதலை பெற்றவுடன் இனியாவது நேர்மையாக வாழ வேண்டுமென்று தான் எண்ணினேன். ஆனால், அதனால் பயனென்ன? என் உயிருள்ளளவும் உன் பதவிக்கு என் பெயர் ஒரு களங்கமாகத்தானே இருக்கும்? மனிதன் பிறக்கும் பொழுதே கெட்டவனாகப் பிறப்பதில்லை. சூழ் நிலை தான் அவன் போக்கை மாற்றிவிடுகிறது. அதே சூழ் நிலையின் சேர்க்கை என் மனோ திடத்தையும் மாற்றிவிட்டால்.

கடைசி முறையாக உன்னைச் சந்தித்த போது இனிமேல் உன் முகத்தில் விழிக்கக் கூடாது என்றாய். நேற்று தான் நான் சிறையிலிருந்து வெளி வந்தேன். இனியும் நான் உயிருடனிருந்தால் உன் கௌரவத்திற்கு இழுக்கு நேரிடலாம். ஆகையால் மகனே நான் போகிறேன். இக்கடிதம் நாளை உன் கைகளில் கிடைக்கும் பொழுது எனது சடலம் தெப்பக் குளத்தில் மிதந்து கொண்டிருக்கும்.

இளங்கோவா, நீ போலீஸ் அதிகாரி. நீ மனம் வைத்தால் என் பிணத்தை டாக்டர்களின் கத்திக் கீரல்களுக்குத் தப்புவிக்கலாம். என் உடல், உன் தந்தையின் பிணம் என்பதை வெளியிட நீ மனம் துணியாமல் என் சவத்தைச் சின்னா பின்னப்படுத்த நீ உட்பட்டாலும் அதுவும் என் குற்றங்களுக்கு ஏற்ற தண்டனையாகவே இருக்கட்டும். உன் மனம் நோகச் செய்த என் எல்லா செய்கைகளுக்காகவும், என்னை மன்னித்துவிடு. உனக்கு என் மனப் பூர்வமான ஆசீர்வாதம்.

உன் தந்தையென்று
கூறவும் உரிமையற்ற பாவி.
மாணிக்கம் பிள்ளை"

"இக்கடிதம் உங்களுக்கு எப்பொழுது கிடைத்தது?" என்று கேட்டேன்.

இப்பொழுதுதான் கிடைத்தது. உடனே பிரேத பரிசோதனை ஸ்தலத்துக்கு ஆளனுப்பினேன். ஆனால், காரியம் மிஞ்சி விட்டது. நீங்கள் வேலையை முடித்து விட்டீர்கள். சிறையில் கடும் வேலையினாலும் தாடி மீசை வளர்ந்து உருத் தெரியாமல் ஒரு நாள் முழுவதும் தண்ணீரில் கிடந்ததாலும் உருக் குலைந்த என் தந்தையை என்னால் அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை. சிறிது நேரத்திற்கு முன்பு மட்டும் இக்கடிதம் கிடைத்திருந்தால் என் தந்தையின் கடைசி ஆசையையாவது நிறைவேற்றி வைத்திருப்பேனே" என்று கூறி கதறினார் இன்ஸ்பெக்டர்.

அந்த அபாக்கியவானுக்காக என்னாலும் இரண்டு சொட்டு கண்ணீர் சிந்தாமலிருக்க முடியவில்லை. பிறகு எங்களிடையே நிலவிய மௌனம் மாணிக்கம் பிள்ளையின் ஆத்மா சாந்தியடைய அநுதாபம் தெரிவிப்பது போலிருந்தது.

ஸ்ரீ சக்தி ஆருடம்!

அண்ணாமலை யூனிவர்சிடி Prof. R. ராமானுஜாசாரி, M. A. கூறுகிறார்:—"தங்கள் சாஸ்திர ஆராய்ச்சியையும், எதிர்கால பலன்கள் கூறும் திறமையையும் நான் மிகவும் மெச்சுகிறேன்"

1 முதல் 3 எதிர்கால ஆருட கேள்விகளுக்கு ரூ 1. 3-க்குமேல் கேள்வி 1-க்கு அணா 8 1 வருட பலன் ரூ 5. ஜாதகம் கணிக்க ரூ. 2. 1 தசைக்கு புக்திவாரி பலன் ரூ. 10 சக்தி கவசம் ரூ 7-8-0 வி பி செலவு தனி. ஜாதகம் or எழுதும் நேரம் தேவை.

N B:—வெளி நாட்டிற்கு இரட்டிப்பு சார்ஜ் முன் பணம் அனுப்பவும்

"சக்தி ஹோம்"
விருத்தாசலம் P. O. (S. I.)

சுதேசமித்திரன்
வாரப்பதிப்பு சந்தா விகிதம்

★

1	வருடம்	13—0
6	மாதம்	7—0
3	மாதம்	3—12

தனிப்பிரதி அணா 4.
வெளிநாடு:

1	வருஷம்	ரூ. 15.
6	மாதம்	ரூ. 8.

சர்க்குலேஷன் மானேஜர்,
சுதேசமித்திரன் ஆபீஸ், சென்னை.

முறைப்பெண்

கோமதி சுப்ரமணியம்

3

விசாலம்

பதினெட்டு வயது நிரம்பிய யௌவன மங்கையாகப் பூரித்து நிற்கிறாள் என் மீனா. அவளைப் பெற்றதன் பாக்கியம் நிறைவேறும் காலம் நெருங்கிக் கொண்டுதானிருக்கிறது. தாய்க்கு வேண்டியதென்ன? தனது மகள் மேன்மையான இடத்தில் காலடி வைத்துவாழ்க்கைநடத்துகிறாள். அவளது வாழ்க்கைப் படகு இன்பக் கடலிலே மிதப்பதைக் கண் குளிரக் கண்டு களிக்கவே எந்தத் தாயும் விரும்புவாள். மீனாவின் தாய் என்ற ஸ்தானத்திலிருக்கும் நானும் அதையே விரும்புகிறேன் மாலையும் கழுத்துமாக நிற்கும் அவளது உருவத்தை என் அகக் கண்களில் கண்டு களிக்கிறேன். அவள் கரத்தில் தாங்கி நிற்கும் மாலையை ஏற்க எந்த மணவாளன் வரப்போகிறானோ—என்று இதுவரை விசாரப்பட்டுக்கொண்டிருந்தேன். இனி அந்தக் கவலையும் இல்லை. குமார், சந்துரு, இவர்கள் இருவருமே அவளது அழகுச் சுழலில் மயங்கி நிற்கின்றனர். பாலைவனம் போல் தோன்றிய இடம் இப்பொழுது பிருந்தாவனமாகக் காட்சியளிக்கிறது.

என் நாத்தனார் குழந்தைகள் வந்த இந்த ஒரு மாதத்தில் என் பங்களா எத்தனையோ விதங்களில் மாறிப்போயிருந்தது. பங்களா மட்டுமென்ன? அதன் சொந்தக்காரி மீனாவே முற்றிலும் மாறிப் போயிருந்தாள் என்றால் மற்றதைச் சொல்வானேன்? நாளைக்கொரு தடவை தலை வாரிக்கொள்ள சோம்பல் கொள்ளும் மீனா, இப்பொழுது ஐந்தாறு தடவை பின்னிக்கொண்டாலும், திருப்திகொள்ளாமல் சீப்பும் கையுமாகவே அலைகிறாள். ஜவுளிக்கடை ரங்கசாமிப் பிள்ளையும், நடராஜன் ஸ்டோர்ஸ் கம்பெனிக்காரனும் இந்த மாதம் தங்களுக்கு நல்ல வருமானம் என்று பூரித்துப் போகிறார்கள்.

புஸ்தகப் புழுவாய் சதா எந்த நேரமும் புஸ்தகங்களினூடே திரிந்துகொண்டிருந்தவள் இப்பொழுது பட்டுப் பூச்சியாகமாறி பறக்கத் தொடங்கி விட்டாள். லைப்ரெரி புஸ்தகங்கள் வந்து மூலைக்கு மூலை குவிந்து கிடக்கின்றன. புஸ்தகங்களுக்காக மீனா ஏங்கி நின்ற காலமும் உண்டு. இப்பொழுது மீனாவின் ஸ்பரிசத்திற்காக அவைகள் ஏங்கி நிற்கவேண்டிய காலமாக மாறிவிட்டது.

படிக்கும் நேரம் தவிர பாக்கி நேரங்களில் பெரும் பகுதியைத் தோட்டப் பயிர்களிலே செலவிடும் மீனா இப்பொழுது மாலை நேரங்களில் மலர் பறிக்கும்நேரம் தவிர, மற்ற நேரங்களில் அந்தப் பக்கம் எட்டியே பார்ப்பதில்லை. ஏதோ தோட்டக்காரன் புண்ணியத்தில் அவைகள் அரைகுறையாக தலையெடுத்து நிற்கின்றன. இத்தனை வயதிற்குப் பிறகு நமக்கு இதிலெல்லாம் மனம் செலுத்த முடிகிறதா என்ன? இன்னும் சொல்லப் போனால் இப்படி எத்தனையோ? உள்ளூர் லைப்ரெரியிலிருந்து வாங்கும் புத்தகங்களை நிமிஷத்தில் படித்து முடித்துவிட்டு பொழுது போகாமல் தவிக்கிறாளேயென்று குற்றாலம், தென்காசி லைப்ரெரிகளிலும் சந்தா செலுத்தி புத்தகங்களை வரவழைத்துக் கொடுப்பார் அவள் தந்தை. அவைகளையும் இரண்டொரு நாளில் படித்து முடித்துவிட்டு, பாக்கியுள்ள நாட்களில் படிக்க புஸ்தகத்திற்கு ஏங்கித் தவிப்பாள். இப்பொழுது உள்ளூர் லைப்ரெரி புஸ்தகமே படித்து முடிந்த பாடாகக் காணோம். ஒரு வாரத்திற்குப் பின்வந்து கேட்ட லைபரெரியனிடம் வாங்கிய சுவடு அழியாமல் அப்படியே திருப்பிக் கொடுத்துவிட்டாள். ஏண்டி மீனா புஸ்தகத்தில் ஒரு வரிகூட திருப்பாமல் அப்படியே கொடுத்தனுப்பிவிட்டாயே. இது என்ன அதிசயமடி என்று கேட்டால்,

'இதெல்லாம் படிப்பதற்கு யாருக்கம்மா நேரமிருக்கிறது?' 'மேலும் இந்த உபயோகமற்ற புஸ்தகங்களெல்லாம் படிப்பதனால் என்னம்மா பிரயோஜனம்?'

இந்த மாதிரி மாறுபட்டுக் காணும் என் மகளைப் பார்த்துச் சிரிக்காமல் என்ன செய்ய முடியும்?

லட்சுமண பிள்ளை

ஆம், சிரிக்கத்தான் வேண்டும். அவன் நிலைமையைக் கண்டு சிரிக்கத்தான் வேண்டும். மும்மூர்த்தியும் ஒரு அவதாரமாய் உருவெடுத்ததைப்போல் வந்திறங்கிய அந்த சகோதரர்கள் இன்று ஆளுக்கொரு புறமாய் ஒருவர் முகத்தை மற்றவர் நோக்காமல் நவக்கிரகங்களாக மாறிப்போய் இருக்கும் குமார், சந்துரு, விமலி இம்மூவரையும் கண்டு சிரிக்காமல்என்ன செய்யமுடியும்? இந்தப் பிளவுபட்ட மாறுதலுக்குக் காரணம் யார்? விமலி கூறுவதைப்போல் முழுக் குற்றத்தையும் மீனா மீதே சுமத்திவிட முடியுமா? இருந்தாலும் இந்த சந்துருவுக்கு, இந்தத் துடுக்குத்தனம் ஆகவே ஆகாது. என்னதான் மீனாமீது கட்டுக்கடங்காத அன்பாக இருருந்தாலும் அதற்காக உடன்பிறந்த சகோதரனையும் சகோதரியையும் பகைத்துக் கொள்ளலாமா? முறைப்படி பார்க்கப் போனால் பெரியவனான குமார்தான் மீனாவிற்கு உரிமைப்பட்டவன்.

உரிமை கொண்டாடி வாழ்வை வகுத்தது, அந்தக் காலம். ஆனால் இப்பொழுதோ அவரவர்கள் மனமே நீதி வழங்கும் மன்றமாக மாறி நிற்கிறது. மீனாவின் மன மன்றத்தில் யார் சார்பாக தீர்ப்பாகப் போகிறதோ? அதைப் பற்றி இப்பொழுது என்ன? காலமும் பொழுதும் சந்திக்கும் கால் நடப்பதுபோல் நடக்கட்டும்.

அன்று மாலை மீனாவின் வீணைக் கச்சேரி நடந்த அன்று நேர்ந்த சம்பவத்தை இப்பொழுது நினைத்துக்கொண்டாலும் வியப்பாகத்தான் இருக்கிறது. அன்று மீனாவின் கச்சேரி, அமைந்ததென்னவோ வெகு ஜோர்தான். நானும்இதற்கு முன் எத்தனையோ தடவை பாடிக் கேட்டிருக்கிறேன். இனியும் கேட்கவும் போகின்றேன். ஆனால், அன்றைய தினத்தைப் போல் அமையுமா என்பது சந்தேகம்தான்.

ஏதோ ஒரு புஸ்தகத்தில் படித்ததாக ஞாபகம். முன் ஜன்மத்தில் ஸ்வாமிக்குத் தேனாபிஷேகம் செய்திருந்தவர்களுக்கு இந்த ஜன்மத்தில் நல்ல சாரீரம் அமையுமென்று அதன்படி பார்த்தால் மீனா லட்சக் கணக்கான படிகள், அபிஷேகம் செய்திருக்க வேண்டும். அதன் பலனாய் அளவிட முடியாத சாரீர சம்பத்தைப் பெற்றிருந்தாள். மீனா என் மகள். இதை நினைக்க நினைக்க என் மனம் பெருமிதம் கொள்ளுகிறது. சொல்ல வந்தது ஒன்று, சொல்லிக் கொண்டே போவது மற்றொன்றாக அல்லவா இருக்கிறது?

'சந்திரன் வருவது யாராலே' என்று இயற்கை எழில்களை வர்ணித்து இவையாவிற்கும் சிருஷ்டி ஒருவன் என்பதை நம்பு என்ற அர்த்தம் கொண்ட அந்தப் பாடலை அவள் பாடியபொழுது எதிரே தெய்வம் இல்லை என்று பலமாக வாதிக்கும் நாஸ்திகன் ஒருவன் இருந்தால், தனது கட்சியை மறந்து தெய்வம் ஒன்று இருக்கத்தான் செய்கிறது என்பதைத் தவறாமல் ஒப்புக் கொள்வான். அவ்வளவு உருக்கமாகப் பாடினாள்.

அவள் ராக ஆலாபனை செய்யும் பொழுது சுருதியோடு சேர்ந்து அழகான கோர்வைகளுடன் சாஸ்திரீய முறையில் ராகபாவத்தோடு ஆலாபனை செய்தது, செவிக்கினிய விருந்தாக இருந்தது.

அவள் பாடியது என்னவோ ஐந்தே பாட்டுகள்தான். ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையில் சிறந்து, எங்கள் உள்ளத்தைப் பூரிக்கச் செய்தது. கான மாதுரியத்திலே கட்டுண்ட நாகத்தைப் போல் அவள் இசை பரவும் திசையெல்லாம் எங்கள் உள்ளமும் ஆடி ஆடி நெளிந்து சென்றது.

இசையில் உள்ளத்தைப் பறிகொடுத்து தன்னை மறந்திருந்த நிலையில் பாட்டை நிறுத்திவிடவே, இன்னும் சற்று நேரம் பாட மாட்டாளா என்றிருந்தது. அடுத்த பாட்டு எப்பொழுது துவக்கப் போகிறாள், என்ன பாட்டை ஆரம்பிக்கப் போகிறாள் என்று காத்துக் கொண்டிருந்தோம். நாங்கள் எதிர்பார்த்ததற்கு மாறாக, வீணையை விமலியின் பக்கம் திருப்பிய மீனா எங்கே ஆரம்பிக்கலாமா என்ற அர்த்தத்தில் தலையை ஆட்டினாள். இந்த எதிர்பாராத உத்தரவினால் திடுக்கிட்ட விமலிஏதோ சொல்லத் தயங்கினாள். ஆனால், சொல்ல வந்ததை சொல்லவிடாமல் சந்துரு குறுக்கிட்டான்.

'காலேஜில் டிகிரி வாங்குவதுதான் சுலபமே தவிர, இதற்கெல்லாம் லாயக்கில்லை விமலி. ஒரு வேளை மீனா பாடுவதற்கு முன்னால் வேண்டுமானால் பாடியிருக்கலாம். அவள்பாட்டைக் கேட்ட பின்னரும் புத்திசாலியான என் தங்கை பாட ஒப்புக் கொள்ள மாட்டாள் என்றே நம்புகிறேன்' என்று கூறி, கேலிப் புன்னகை புரிந்தான். அவன் வார்த்தையில் நிறைந்திருந்த கேலி, அவள் உள்ளத்தைத் தைத்தது. ஆனால், அவள் மனத் துடிப்பை வெளியே காட்டிக் கொள்ளாமல் லாகவமாய் அளித்த பதில் என்னை வியப்புக் கடலில் ஆழ்த்தியது. அண்ணனின் ஏளனத்தைக் கொண்டு ஆத்திரம் கொள்வதகுப் பதிலாக ஆனந்தம் அடைகிறாளே பேதை விமலா என்றும் எண்ணத் தொடங்கினேன். 'யாரைப் பழித்து ஏளனம்செய்து கொண்டிருந்தாயோ, அவளுக்காக அவளது அன்பைப் பெறுவதற்காக உயிருக்குயிரான பிறந்த தங்கையைப் பழித்துக் கூறும்படிமாறிய உங்கள் மன நிலையை கண்டு சந்தோஷம் கொள்கிறேன் சந்துரு அண்ணா, என்று கூறிச் சிரித்தாள் ... இல்லை சிரிக்க



முயன்றாள் விமலி. ஆஹா என்ன அன்பு அவள் மனதிலே என்று உடல் சிலிர்த்தேன்.

அவமானத்தினால் கொந்தளிக்கும் குமிழிகளை மறைத்து, இனிய மொழிகளை பொழிந்து விட்டாள் விமலி. ஆனாலும் விழக்கடையில் தேங்கி நின்ற கண்ணீர் இரண்டு சொட்டாக வழிந்து அவ்ளது உள்ளத் துடிப்பை வெளியிடத் தயங்கவில்லை

சந்துரு

விமலியின் கலங்கிய கண்கள் என் நெஞ்சத்தைச் சுட்டன. என்னுடைய ஏளனத்தை எதிர்த்து நின்று வாதாடியிருந்தால் ஒரு வேளை துக்கப்பட்டிருக்க மாட்டேன். வேதனை அடையாது. ஆனால் அவளது அடக்கம் என்னை வெற்றி கொண்டு விட்டது. விமலியின் வாடிய முகம் என் செய்கைக்காக என் புத்தி தடுமாற்றத்திற்காக ஒவ்வொரு கணமும் என்னை இடித்துக் கூறியது. இந்திரன் கெட்டதும் பெண்ணாலே, சந்திரன் கெட்டதும் பெண்ணாலே என்று சொல்லிக் கொள்வார்கள். அது எவ்வளவு உண்மையோ எனக்குத் தெரியாது. ஆனால், இந்தச் சந்துரு கெட்டது பெண்ணாலே என்பது மட்டும் என் வரையில் நிஜம்தான். மீனாவின் அற்ப சந்தோஷத்திற்காக என் அருமைத் தங்கையின் உள்ளத்தைப் புண்படச் செய்தது என் மதியீனம்.

அவளைத் தேற்றும் வகை தெரியாமல் திகைத்து நின்ற தருணத்தில், நல்ல காலமாக மாமா அபயமளித்தார்.

'பொழுது போய் விட்டதே. வீட்டிற்குத் திரும்ப நேரமாகவில்லையா?' என்று நடுவே புகுந்து பேச்சை மாற்றினார்.

ஆம் மாலைநேரம் போய் அந்தி பூத்துவிட்டது. வெளியே நிலா சொரிந்து கொண்டிருந்தது. வானத்தை அண்ணாந்து பார்த்தேன். வான் முகட்டில் பூர்ணச் சந்திரன் உதயமாகிக் கொண்டிருந்தான். இன்னும் சற்று நேரமானால் அந்தப் பிராந்தியத்திலே வாசம் செய்யும் 'பூச்சி' பொட்டுகள் உலவக் கிளம்பிவிடும். இனியும் தாமதிக்கலாகாதென்று நடையைக் கட்டினோம்.

ஒவ்வொருவர் உள்ளத்திடையும் வெவ்வேறு எண்ணங்கள் கொப்பளிக்க ஒருவரொடொருவர் பேசாமல் வழி நெடுக நடந்தோம்.

அதிலிருந்து இன்று வரை விமலியுடன் பேசச் சந்தர்ப்பம் வாய்க்கவில்லை. சந்தர்ப்பம்

வாரிக்கும் போலிருந்தாலும், எந்த முகத்தைக் கொண்டு அவளிடம் பேச்சுக் கொடுப்பது என்று மெல்ல நழுவிவிடுவேன். ஆனால், இந்த மௌன விரதம் மேலும் என்னைச் சித்திரவதை செய்தது. இன்று அவளிடம் எப்படியும் மன்னிப்பு பெற வேண்டுமென்ற எண்ணம் எழவே, அவள் இருந்த இடத்தை நாடிச் சென்றேன்.

கட்டிலில் படுத்திருந்தபடியே ஏதோ புஸ்தகத்தைப் படித்துக் கொண்டிருந்த விமலி என்னைக் கண்டதும் மரியாதையாக எழுந்துகொண்டு "அண்ணா வருங்கள், எங்கே புறப்பட்டீர்கள்" என்று அவள் கேட்டபொழுது என்னால் ஒன்றுமே பேச முடியவில்லை. அன்று துடித்த நெஞ்சுக் குழியின் விம்மலும் மோவாயின் துடிப்பும் இன்றும் என் கண்முன் நிற்பது போலிருந்தது. அன்று நடந்துகொண்ட இங்கிதம் தெரியாத செயலுக்காக இன்று மன்னிப்புக் கோரி வந்து நிற்கிறேன்.

"உன்னிடம்தான் வந்தேன். விமலி உனக்கு என்மேல் கோபமா?" என்று மனதிலுள்ளதை படபடவென்று கொட்டித் தீர்த்தேன்.

"எதற்காக அண்ணா" என்று சாந்தமாகக் கேட்டாள்.

"அன்று மாலை, மீனாவின் முன்னிலையில் உன்னை அவமானப்படுத்தியதற்காக என்னை மன்னித்துவிடு."

கலகலவென்று சிரித்தாள் விமலி. "இதில் மன்னிப்பென்ன இருக்கிறது அண்ணா'' உண்மையை நியாயத்தைக் கூற எவருக்கும் உரிமையுண்டு. மீனா என்னைப் பாடச்சொல்லிய பொழுது நான் எதைச் சொல்ல நினைத்தேனோ, அதைத்தான் நீங்கள் சொன்னீர்கள். அதுதான் உண்மை அன்பின் நிஜரூபம். அதில் தவறென்ன இருக்கிறது. மன்னிப்பதற்கு அவசியமேது?"

பதறாமல் பேசும் விமலியின் குட்டிப் பிரசங்கத்தைக் கேட்டு உள்ளம் களித்து நின்றேன்.

அப்படியானால் உண்மையாகவே என்மேல் கோபமில்லையா?

'இப்பொழுது நிஜமாகவே எனக்குக் கோபம்தான் அண்ணா,' என்று முகத்தைச் சிணுக்கினாள்.

'ஏன்?' என்று பதற்றத்தோடு கேட்டேன். அன்று பேசியதற்காக கோபமில்லை. அண்ணா: இப்பொழுது இவ்வளவு சொல்லியும் என்மேல் நம்பிக்கையில்லாமல் மீண்டும் சந்தேகித்தால்.— என்று குறும்பாகப் பதிலளித்தாள் அரட்டை விமலா. 'இந்தக் குறும்புக்காரிக்கு வாயரட்டை என்று அம்மா பட்டமளித்ததில் தவறு என்ன?'

அம்மாவுக்கு சர்டிபிகேட் அளிப்பதை காதில் வாங்கினாளோ இல்லையோ அவளுடைய அடுத்த உத்தரவைத் துவக்கிவிட்டாள்.

'அண்ணா நாளைக்கு ஊருக்குப் புறப்படப் போகிறோமே. இன்று கடைசித் தடவையாக அருவிக்கு ஒரு தடவை போய் வருவோமா?'

'ஓ, ரெடி' நான் எப்பொழுதுமே தயார்தான். இதோ ஐந்து நிமிஷத்தில் புறப்பட்டுவிட்டேன். என்று என் அறைக்குத் திரும்பும் போது.

அண்ணா போகும்பொழுது அப்படியே மீனாவிடம் தெரிவித்துவிடுங்கள். அவளும் ரெடியாக இருப்பாள். இதோ நானும் வந்துவிடுகிறேன். என்று விமலியிட்ட ஏவலை சிரமேல் தாங்கி மீனா இருக்குமிடத்தை நாடினேன்.

அவள் அறையை அடுக்கும் நேரத்தில் அங்கிருந்து விசும்பல் ஒன்று வந்து என்னைத் தடுத்து நிறுத்தியது. யார் அழுகிறது. எதற்காக அழுகிறது. உண்மையை அறிய மெதுவாக ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தேன்.

'அத்தான் என்னை மன்னித்துவிடுங்கள்' என்றுகூறி மேலும் விசும்பினாள். அந்த அறையிலேயே சற்றுத் தூரத்தில் குமார் அண்ணா நின்று கொண்டிருந்தான். அவனது முதுகுப்புறம் மட்டுமே தெரிந்ததால் அவன் முகக் குறியைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

எதற்காக அவனிடம் மன்னிப்பைக் கோருகிறாள். நேற்று என்னுடன் வந்ததற்காக இருக்குமோ. அப்படித்தானிருக்க வேண்டும்.

அடுத்துவந்த வார்த்தைகள் மேலும் சிந்திக்க இடமளிக்கவில்லை.

'உனக்குப் பிடிக்கவில்லையானால் சொல்லிவிடேன். அதற்கு ஏன் தயக்கம்?' இது குமார் அண்ணாவின் குரல். அதற்கு மீனாவிடமிருந்து எவ்விதமான பதிலும் எழவில்லை. தொடர்ந்து எழும் விசும்பல்களே அவளுடைய பதிலாக இருந்தது. அதைத் தொடர்ந்து நீண்ட மௌனம் நிலவியது. ஆமாம் சந்துருவைப் பிடிக்கவில்லை என்று நேரடியாகச் சொல்லிவிடுவதற்கென்ன, அதற்காக ஏன் தயங்குகிறாய் என்று சொல்லிக் கொடுப்பதாக எண்ணினேன். அந்த எண்ணம் மேலோங்கவே, என் தலை சுற்றியது. உதடுகளும் புருவமும் நிலை கொள்ளாமல் துடித்தன. நெற்றியில் வியர்வை முத்து முத்தாக அரும்பிவிட்டது. மனமயக்கத்தில் கீழே விழுந்துவிடுவேன் போலிருந்தேன்.

ஒருவகையாக சமாளித்துக் கொண்டுவந்த சுவடு தெரியாமல் தள்ளாடித் தள்ளாடி என் அறையை வந்தடைந்தேன்.

குமார்

ஆம், தள்ளாடித் தள்ளாடி என் அறையை வந்தடைந்தேன்.

மீனாவின் பதில் விஷம் தோய்ந்த அம்புபோல் என் இதயத்தில் ஊடுருவிப் பாய்ந்தன. அந்தச் சொல் என்னை என் சித்தத்தை அடியோடு குலைத்தது. இது வரை கட்டிய மன மாளிகைகள், அவளுடைய ஒரே வார்த்தையினால், இடிந்து தூள்தூளாகச் சிதறி மண்ணோடு மண்ணாய் மறைந்தது. அன்பும் ஆசையும் மிதக்கும் கண்கள் எனக்கு அபயமளிக்கும் என்று நினைத்தேன். அது என்னை அடித்துத் துரத்தியது. 'பெண்ணைப் பூஜித்தால் தெய்வம்; தூஷித்தால் புழு. . .' என்று யாரோ ஒரு மஹான் எழுதிவைத்திருந்தார். ஆனால், நான் பூஜிக்க விரும்பும் தெய்வம் என் பூஜையை ஏற்க விரும்பவில்லை. எந்தத் தெய்வத்திற்காக என் இதயக் கோவிலைத் திறந்துவைத்துக் காத்திருந்தேனோ, அந்தத் தெய்வம் என் இருதய பீடத்தில் அமர மறுத்துவிட்டது. அவளது அன்பு, என்னும் கடலில் எனது வாழ்வு என்னும் இன்பப் படகைச் செலுத்த எண்ணியிருந்தேன். ஆனால், அந்த அன்புக் கடலில் புயலெழும்பி சூறாவளியாக மாறிவிட்டபின்பு, திசை தெரியாமல் தத்தளிக்கும் படகின் நிலைமையை ஒத்தவனானேன்.

அமுதம் என்று நினைத்து பருக விரும்பிய பானம், விஷமாக மாறிவிட்டால் . . . . ? ஆம் இனி மீனா எனக்கு விஷத்திற்குச் சமம்தான். விஷத்தை யாராவது தீண்ட விரும்புவார்களா? அப்படித்தான் எனது தம்பியின் மனைவியாகப் போகும் மீனாவை இனி மனதாலும் தீண்டலாமா?

மீனா. அவள் ஒரு அழகுத் தெய்வம். பெண்களுக்குள் அத்தனை கம்பீரமான தோற்றத்தை வேறு எங்கும் காணமுடியாது. அவள் முகச் சாயலிலே ஒரு கவர்ச்சி. அந்த வசீகரத்திலே ஒரு குளுமை. அவள் கண்களிலே ஒரு பிரகாசம். அவளுடைய பார்வையிலே ஒரு இனிமை.

அவள் விழியைச் சுழற்றி, புன்னகை பூத்து, மலர்ந்த முகமாய், கனிவுடன் பேசும்போது, என் உள்ளத்தைப் பறிகொடுத்து நிற்பேன். அவள் கையால் அளிக்கும் உணவை அமிர்தமென ஏற்று உண்பேன்.

அவளும் எனக்குப் பிடித்தமானவை எது என்று அறிந்து அதை திறம்படச் செய்து எனக்களிப்பதில் மகிழ்ச்சியுடன் செய்வாள். இதெல்லாம் எந்த அன்பினால் என்பதை அறியாமல் துர் எண்ணம் கொண்ட நானேயன்றோ குற்றவாளி.

களங்கமற்ற அவளது அன்பை காதல் என்று எண்ணி ஏமாந்து போனேன். அவளது பேச்சிலும் செயலிலும் மயங்கி அல்லும் பகலும் அறுபது நாழிகையும் அவளது சிந்தனையாகவே மாறியிருந்தேன். அந்தச் சிந்தனைக்கு முடிவு தேட எண்ணி, இன்பமோ துன்பமோ உள்ளுக்குள்ளேயே மனம் புழுங்கி எத்தனை நாள் துன்புற முடியும். பல நாள் முயன்று நழுவிவிட்ட சந்தர்ப்பம் கடைசியாக அன்று. அதுதான் ஊருக்குப் புறப்படுவதற்கு முதல் நாள் தனிமையில் சந்திக்கும் பாக்கியம் கிடைத்தது. வாய்த்த தருணத்தை நழுவவிடாமல் உள்ளத்தே பொங்கிப் பெருகும் ஆவலை திறந்து வெளியிட்டேன். ஆனால் அதற்குக் கிடைத்த பதில் என்னை அடியோடு மயங்கச் செய்தது. எதை எதிர்பார்த்துக் காத்திருந்தேனோ, எந்த பதிலுக்காக ஏங்கித் தவமிருந்தேனோ அதற்கு நேர் மாறான பதில் என் நெஞ்சைச் சுடுவது, போலிருந்தது. அந்தப் பதில் என் இதயத்தை ஆயிரம் சல்லடைக் கண்களாகத் துளைத்தது.

'அத்தான், என்னுடைய அன்பை, தவறாக எண்ணிக் கொண்டதற்காக மிகவும் வருந்துகிறேன். என்னுடைய அன்பு தங்களுக்குத் தவறாகப்படும் என்று தெரிந்திருந்தால் நான் தங்களுடன் இவ்வளவு சகஜமாகப் பழகியே இருக்கமாட்டேன். தவறுக்காக மன்னிக்கவும். நான் தங்களை . . . .' மேலே சொல்லவில்லை. தொண்டையை அடைத்தது. தலை குனிந்து விக்கினாள்.

தவறு யாருடையது. அவளது உள்ளமறியாமல் வரம்பு மீறி கோட்டைகள் எழுப்பிய என்னுடைய எண்ணமல்லவா தவறானது. அத்தானுக்கு விமோசனம் இனி எந்த ஜென்மத்திலுண்டு. இனிமேலே நடக்கவேண்டியது என்ன? என்னுடைய கடமை என்ன? எதற்கும் அடங்காத என் மனதைக் கடமை என்னும் வரம்பிற்குள் மடக்க முயன்றேன். ஆனால் என்னுடைய தோல்வியை எவரும் அறியாவண்ணம், என்னுள்ளேயே அடக்கிக் கொண்டு, என்றும் போலச் சகஜமாகப் புறப்பட்டோம்.

தங்கம்

குழந்தைகள் ஊரை விட்டுப் போய் இரண்டு மாதமாகிறது. வீடு விடென்றிராமல் வெளிச்சோடிப் போயிருக்கிறது. எங்கு சென்றாலும் குழந்தைகளின்

ஞாபகமாகவே ஏங்குகிறது மனம். தோட்டப்பக்கம் சென்றால் பூத்துக் குலுங்கும் புஷ்ப இனங்கள் எங்கே, என் விமலி என்று கேட்பது போல் கொத்துக் கொத்தாய் குலுங்கித் தொங்குகிறது. அதைவிட்டு அப்பால் சென்றால் அவர்கள் பந்து விளையாடும் மைதானம். 'எங்கே என் குழந்தைகள். நான் நிச்சிந்தையாய் உறங்குவது உனது கண்ணில் படவில்லையா?' என்று கேட்பது போலிருக்கிறது. அதைவிட்டு பொழுது போக்குக்காக ரேடியோவை திருப்பினால், நாடகங்கள் வரும்போது நாடகப் பிரியை விமலியை நினைவு மூட்டுகிறது. சங்கீத மண்டலம் சந்துருவைக் கூவியழைக்கின்றன. அரசியல் உலகம் குமார் பிள்ளையைத் தேடுகிறது. இந்த நினைப்பை வைத்துக்கொண்டு ரேடியோவின் முன் உட்காருவதில் என்ன பயன்? நிகழ்ச்சிகளை எப்படி மனம் கொண்டு கேட்க முடியும்? அதுதான் போகட்டுமென்று சிநேகிதி வீட்டிற்குப் போய்ப் பார்த்தேன். அங்கே என் சிநேகிதியின் மகள், விமலியின் தோழி 'என் விமலி வராமல் உங்கள் வரவை, நல் வரவாக ஏற்றுக்கொள்ள முடியாது' என்று தன் குறையைக் கூறுவது போல் என் குறையை அதிகப்படுத்தி விடுகிறாள். ஆகவே, எங்குசென்றாலும் எத்திசையை நோக்கினாலும் குழந்தைகள் ஏக்கமாகவே இருக்கிறது.

ஏங்கி வாடிப் போயிருக்கும் என்னைக்கண்டு குழந்தைகளின் அப்பாவே பரிகாசம் செய்ய ஆரம்பித்துவிட்டார்கள்.

'புதிதாய் மாப்பிள்ளை வீட்டிற்கு வந்த மணப் பெண்போல் தவிக்கிறாயே; பொழுது போகாவிட்டால் வேண்டுமானால் என்னுடன் வா. சினிமாவுக்கு, டிராமாவுக்கு, பாட்டுக் கச்சேரிக்கு வேண்டுமானாலும் அழைத்துச் செல்லுகிறேன். என்ன வருகிறாயா?' என்று நையாண்டி பண்ணுகிறார்கள்.

குழந்தைகள் வருந்தி வருந்தி அழைத்த காலத்திலேயே இதற்கெல்லாம் புறப்படாதவர்கள் இப்பொழுதுதானா வரப்போகிறார்கள். அதெல்லாம் வெறும் மேல் பேச்சு.

கடைசியாக விமலியிடமிருந்து வந்த கடிதத்தை 60-வது தடவையாக எடுத்துப் படித்தேன். 'இன்னும் ஒரு வாரத்தில் புறப்படுகிறோம்' . . . இந்த வாக்கியத்தைப் பன்முறை படித்தும் அலுக்காமல் சலிக்காமல் துடித்து மெய் மறந்திருந்தேன். அதே சமயம் அங்கே வந்த அவர்கள் 'என்ன இங்கேயும் கடிதம் வந்ததா. என்ன?' என்று கேட்டார்கள்.

அவர்களுக்கு என்ன பதில்ளிப்பதென்றே தெரியாமல் விழித்தேன். அன்றைக்கு வந்த கடிதத்தை இப்பொழுதுபடித்துக் கொண்டிருக்கிறேனென்று சொன்னால் பரிகாசம் செய்ய மாட்டார்களா? "என்ன கேட்கிறேன், பதில் ஒன்றும் காணோமே அப்படி என்ன விசேஷம் அந்தக் கடிதத்தில்?"

இனிமேலும் சொல்லாமலிருப்பதில் பிரயோஜனமில்லையென்று, 'இது பழைய கடிதம். இன்றைக்கு ஒன்றும் வரவில்லையே' என்றேன். பரிகாசமாய் சிரித்தபடியே, "அடப்பா, குழந்தைகள் இல்லையென்று அவ்வளவு ஏக்கமாக்கும். பாவம், ஒரேயடியாக ஏங்கிப் போய்விடாதே. இன்று இரவு போட்மெயிலில் உன் திருக்குமாரர்களும் திருவளர் செல்வியும்...."

'கடிதம் வந்ததா என்ன? என்னிடம் சொல்லவில்லையே.'

'பண்ணையார்வாள் தங்கை குமாரர்கள் கடிதம் எழுதுவார்களா? தந்தி அடித்திருக்கிறார்கள்' என்று கூறி தந்தி பாரத்தை நீட்டினார்கள். வரப்போகிற என் செல்வக் குழந்தைகளுக்குப் பிரியமான சமையல் தயாரிக்க சமையல் கட்டை நோக்கித் துள்ளினேன். 'குழந்தைகள் வருகிற சந்தோஷத்தில் சின்னப் பெண்ணு மாதிரியல்ல, துள்ளி ஓடுதே' என்று அவர்கள் பரிகாசம் செய்தது, எனக்குக் கேட்காதென்று நினைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

'ஒரு மாதம் பிரிவிற்கே இப்படி ஏங்குகிறவள், நாளை மகளை விவாகம் செய்து கொடுத்து விட்டால், எப்படித்தான் பிரிந்திருக்கப் போகிறாளோ!' என்று சொல்லிக்கொண்டதையும், கேட்டுக்கொண்டு இருந்தேன் என்பது அவர்களுக்கு எப்படித் தெரியும்?

(தொடரும்)

ஆருடம்! ஜாதக பலன்!!



ஜனன கால விவரம் அல்லது முழுப் பெயர். சுமார் வயது. செய்யும் தொழில். கடிதம் எழுதும் நேரம் தேவை. 1 முதல் 5 எதிர்காலக் கேள்விகளுக்குப் பதில் எழுத ரூ. 2. ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன் ரூபா 6. முக்கிய யோகாம்சங்களும் சுருக்கமான பலனுடன் ஒரு ஜாதக குறிப்புக்கு ரூ. 5. ஒரு தசைக்கு புக்திவாரி பலன் எழுத ரூ 10 கிரஹசார தோஷம் நீங்கி, சகல நன்மைகளும் உண்டாவதற்கு 'விஜய ரக்ஷணி' கவசம் 1-க்கு ரூ 7-8-0 பிரத்யேக ரக்ஷை ரூ. 72-8. வி.பி. செலவு தனி

வி கே. கிருஷ்ணமாச்சாரியார்,
Astrologer & Journalist,
Triplicane : Madras 5.

லக்ஷ்மி

★

கே. ஆர். கௌஸல்யா

"காமாக்ஷி! காமாக்ஷி!" என்று கூப்பிட்டார் ஹரிஹரய்யர்.

"ஏன்? என்ன சமாசாரம்"? என்று கேட்டுக்கொண்டே வந்தாள் காமாக்ஷி

ஹரிஹரய்யரின் கையில் ஒரு பிரித்த கடிதம் இருந்தது.

"மாப்பிள்ளை கடுதாசு போட்டிருக்கிறார். அவரை அனந்தப்பூரிலிருந்து கடப்பைக்கு மாற்றி விட்டார்களாம். சீக்கிரமே இந்திராவைக் கொண்டுவிட வேண்டுமாம்."

"ஏன்! இப்பத்தானே குழந்தைக்கு ஐந்து மாசமாச்சு. அதுக்குள்ளே என்ன அவசரம்?"

"அங்கே அவருக்கு ரொம்ப சௌகரியக் குறைச்சலாயிருக்காம். காட்டிலாகாவிலே உத்தியோகமோல்லியோ? கடப்பை ஜில்லாவிலே காட்டுப் பிரதேசத்துக்குச் சமீபத்திலே பங்களா கொடுத்திருக்காளாம். அங்கு ஹோட்டல் வசதியெல்லாம் ரொம்பக் குறைச்சலாம்."

ஒரு நிமிஷம் தயங்கினாள் காமாக்ஷி. பின் "காட்டுப்பிரதேசம்னு சொல்றேளே, இவ்வளவு சின்னக் குழந்தையை வச்சுண்டு இந்திரா எப்படி ஒண்டியாயிருக்கமுடியும்? அவரை வேணா வேறு ஊருக்கு மாற்றிக்கொள்ள முடியுமான்னு எழுதிப்பாருங்களேன்" என்றாள்.

"அதெல்லாம் முடியாத காரியம். அவரை இன்னும் மூணுவருஷத்துக்கு வேறே எங்கேயும் மாத்த மாட்டாளாம். பத்து வருஷம் கழிச்சுப் பிறந்திருக்கும் உன் அருமைப் பேரன் சகுந்தலை பிள்ளை பரதன் மாதிரி காட்டுப் பிரதேசத்திலேதான் வளரணும் போலிருக்கு! ... அங்கேயெல்லாம் ஒண்ணும் அவ்வளவா பயமிருக்காதாம். அதோடகூட ராத்திரியிலே ரெண்டு மூணு பாராக்காரர் வேறே வந்து காவல் படுத்துக்கிறாளாம்"

"சரி பகவான் மேலே பாரத்தைப்போட்டுட்டு ஒரு நல்ல நாள் பார்த்துக் கொண்டுவிட வேண்டியதுதான்."

உள்ளே சென்றாள் காமாக்ஷி. ஆனால் ஏனோ அவள் மனம்மாத்திரம் சற்று சமாதானம் அடையவில்லை. மாப்பிள்ளை ரொம்ப நல்லவர்தான். ஆனால் அவர் உத்தியோகம்தான் அவளுக்குப் பிடிக்கவில்லை. காடு, மேடு, வனம், வனாந்திரத்தில் 'டியூடி'.

இதுவரை அவர்களது பேச்சையெல்லாம் ஒன்று விடாமல் கேட்டுக் கொண்டிருந்த இந்திராவின் மனத்தில் தன் கணவனைப்பற்றிய நினைவுகள்தான் சுழற்சியிட்டன. தான் ஊருக்கு வரும்போது தன் கணவன் தன்னிடம் "குழந்தையுடன் சீக்கிரம் வந்துவிடு. உன்னைப் பிரிந்து என்னால் அதிக நாட்கள் இருக்க முடியாது" என்று அன்பு ததும்ப கூறிய வார்த்தைகள் அவள் காதில் மீண்டும் எதிரொலித்தன. தன் மேல் உயிரையே வைத்திருக்கும் கணவனைமட்டும் அங்குத்தவிக்க விட்டு விட்டுத் தான் இங்கு இருக்க விரும்பவில்லை அவள். அவர் இருக்குமிடத்தில் குறைகள் எதுவாயினும் அவிரிடம் போய்ச் சேர்ந்துவிட வேண்டும் என்பதே அவள் தீர்மானம். அதோடு அவளுக்குக் காட்டு வாசம் புதிதல்ல. தனக்கும் ராமச்சந்திரனுக்கும் மணமானதிலிருந்தே அவள் அவனுடன் காடுகளில்தான் வசித்துவந்தவள். கோயம்புத்தூர், திருநெல்வேலி, அனந்தப்பூர் மூன்று இடங்கள் பார்த்தாகிவிட்டது. நரிகள் ஊளையிடும் சப்தத்திற்கு மத்தியிலும், சிறுத்தையின் உறுமலுக்கு இடையேயும் பயமின்றித் தூங்கித் தூங்கி அவளுக்கு வழக்கம்.

மெதுவாகக் காமாக்ஷி இந்திரா இருக்குமிடம் வந்தாள். "என்ன இந்திரா! உன்னைக் கொண்டு வந்து விடச் சொல்லி மாப்பிள்ளை கடுதாசு எழுதியிருக்கிறார். என்ன சொல்றே" என்று கேட்டாள் காமாக்ஷி.

"அவர் எத்தனை நாள் அங்கே ஒண்டியாயிருப்பார். அதோடகூட நாங்க இதுவரை எத்தனையோ காட்டுப் பிரதேசத்திலேயெல்லாம் இருந்திருக்கோம். அதனாலே அது எங்களுக்குப் பழக்கமா போச்சு" என்று சொல்லிவிட்டு ஏதோ காரியமாக உள்ளே சென்றுவிட்டாள். கணவனைப் பார்க்கப் போகும் சந்தோஷத்தில் துள்ளியது அவள் மனம்.

2

ஹரிஹரய்யருக்கு மதராஸில் அக்கௌண்டண்டு ஜெனரல் ஆபீஸில் வேலை. நல்ல சம்பளம். அதோடு பூர்வீக சொத்தும் நிறைய உள்ளவர். மதராஸில் சொந்தமாக ஒரு வீடும் இருந்தது. தம் ஒரே பெண்ணான இந்திராவை மிகவும் அருமையாக வளர்த்து அவளை ஸ்கூல் பைனல் வரையிலும் படிக்கவைத்தார். இந்திராவும் நல்ல அழகி. புத்தி சாலி.

வரன் தேடும் படலத்தில் ராமச்சந்திரனைத் தம் மாப்பிள்ளையாகத் தேர்ந்தெடுத்து விவாகத்தையும் மிகவும் சிறந்த முறையில் நடத்தினார் ஹரிஹரய்யர்.

ராமச்சந்திரன் காட்டிலாகாவில் உத்தியோகம் வகிப்பவன். சிறுவயதிலேயே பெற்றோரை இழந்துவிட்ட அவன் தன்னுடைய முயற்சியினாலேயே படிப்படியாக உயர்ந்து கடைசியில் காட்டிலாகாவில் உயர்ந்த சம்பளத்தில் நல்ல பதவியில் அமர்ந்தான். அடிக்கடி அவனுக்கு வெவ்வேறு ஊர்களுக்கு மாற்றலாகிக் கொண்டிருந்ததால் அவன் இந்திராவை விவாகமானவுடனேயே தன்னுடன் கூட்டிக் கொண்டுபோய்விட்டான். அவர்களுடைய ஆதரிசத் தாம்பத்ய வாழ்க்கையில் இன்பம் பொங்கி நின்றது.

கல்யாணமான பத்து வருஷங்களுக்குப் பிறகுதான் அருமையாக ஒரு குழந்தை பிறந்தது அவர்களுக்கு திடீரென்று ராமச்சந்திரனுக்கு கடப்பை ஜில்லாவிற்கு மாற்றலாகி விட்டது. காட்டின் ஓரத்தில் ஒரு சிறு பங்களா. ராமச்சந்திரனுக்கு என்று ஒரு ஜீப் வண்டியும் கொடுக்கப்பட்டிருந்தது அருகில் சாப்பாட்டுக்கு வசதி எதுவுமில்லாததால் பிறந்தகம் சென்றிருந்த இந்திராவை சீக்கிரம் கொண்டுவரும்படி தன் மாமனாருக்குக் கடிதம் எழுதி இருந்தான்.

கடைசியில் ஒரு நல்லநாள் பார்த்து இந்திராவை அவள் கணவனிடம் கொண்டுவிட ஏற்பாடு செய்தார் ஹரிஹரய்யர்.

மறுநாள் கடப்பைக்குப் புறப்படவேண்டிய தினம். காமாக்ஷிக்குத் திடுமென ஒரு யோசனை உதித்தது. ஹரிஹரய்யரைப் பார்த்து "ஏன்னா! நம் இந்திரா கைக் குழந்தைக்காரி. அடிக்கடி பால் தேவையாக இருக்குமே. அந்தக் காட்டுப் பிரதேசத்தில் 'திடும்'னு வேணும்னா பாலுக்கு எங்கே போறது? நம்ப 'லக்ஷ்மி'யை அவளுக்குக் கொடுத்துட்டா என்ன? அது இப்பத்தான் கன்னுபோட்டு ரெண்டு மாசமாறது. இன்னும் ஒரு வருஷம் கறக்கும்" என்றாள்.

ஹரிஹரய்யர் யோசனையில் ஆழ்ந்தார்.

'லக்ஷ்மி' அவர்கள் வீட்டுப் பசு. இந்திராவுக்கு அதனிடம் அபிமானம் அதிகம்.

"ஆமாம்! நீ சொல்வது வாஸ்தவந்தான். நமக்கு இங்கே வேறு பசு வாங்கிண்டா போச்சு. நாளைக்கே நான் அதையும் ரயிலேத்தி அனுப்பிடறேன்" என்றார்.

அவர்கள் புறப்படு முன்பே 'லக்ஷ்மி' ரயிலேறிவிட்டது.

3

இந்திரா கடப்பைக்கு வந்து நான்கு நாட்களாகியிருந்தன. தம் அருமைப் புதல்வனைக் கண்டு உள்ளம் பூரித்தான் ராமச்சந்திரன். பெண்ணைக்கொண்டு விடுவதற்காக வந்திருந்த இந்திராவின் பெற்றோர் ஊருக்குக் கிளம்பிக் கொண்டிருந்தனர்.

"இந்திரா! நாங்கள் போய் விட்டு வருகிறோம். குழந்தையை ஜாக்கிரதையா கவனிச்சுக்கோ. நீங்க என்னதான் 'தைரியமா இருக்கோம்'னு சொன்னாலும் எனக்கென்னமோ இந்தக் காட்டுப் பிரதேசத்திலே நீங்க ஒண்டியாயிருப்பதுகவலையாத்தான் இருக்கு" என்றாள் காமாக்ஷியம்மாள். அவள் கண்களின் ஓரத்தில் இரண்டுசொட்டு நீர்த்துளிகள் தேங்கி நின்றன.

"அதெல்லாம் ஒண்ணும் பயப்படாதேயுங்கோ. எங்களுக்கு இதெல்லாம் ரொம்ப பழக்கமா போச்சு." என்று தைரியம் கூறினான் ராமச்சந்திரன்.

அதற்குள் மூட்டைகளை 'ஜீப்' ஏற்றிவிட்டு வந்த ஹரிஹரய்யரும் "மாப்பிள்ளை! அடிக்கடி லெட்டர் போடுங்கோ. நான் முன்னே சொன்னபடி இன்னும் ஒண்ணுரெண்டு நாளிலே பசுவும் வந்துடும். பாலுக்கும் திண்டாடாமே சௌகரியமாயிருக்கும். நாங்க போய்விட்டு வருகிறோம்" என்று கூறி விடை பெற்றுக்கொண்டார்.

மாமனாரையும், மாமியாரையும் ஊருக்கனுப்பிவிட்டு உள்ளே வந்தான் ராமச்சந்திரன்.

"என்ன இந்திரா இந்த தொல்லையெல்லாம் நமக்கு எதுக்கு? இந்தக் காட்டுப் பிரதேசத்திலே நம்மையும், குழந்தையும் ஜாக்கிரதையா கவனிச்சுக்கறதே பெரிய காரியமாயிருக்கு.

இது நடுவிலே பசு ஒண்ணு என்னத்துக்கு?" என்றான். அவன் முகத்தில் ஒருவிதமாறுதல் தென்பட்டது.

"இல்லை ... இது இருந்தா நமக்கு எவ்வளவோ சௌகரியமாயிருக்குமேன்னுதான் ....."

"வாஸ்தவந்தான். அதுக்குப் பாத்தா. அதை எப்படி நம்ப ஜாக்கிரதையா காப்பாத்தறது? அதுவும் துஷ்டமிருகங்கள் நடமாடுகிற இந்தக் காட்டிலே. நான் இல்லாத சமயத்திலே நீ எப்படி தனியா அதையும் பாத்துண்டு வீட்டையும் கவனிச்சுப்பே. இப்பகூட ஒண்ணும் முழுகிப் போய் விடலை. வேண்டாம்னு உங்க அப்பாவுக்குத் திருப்பி அதை அனுப்பிவிட்டா என்ன?"

"தயவு செஞ்சு அது மாதிரி மாத்திரம் செய்ஞ்சுடாதேயுங்கோ. அந்தப் பசு வந்த வேளை எங்காத்திலே எவ்வளவோ நல்ல காரியங்களெல்லாம் நடந்திருக்கு. அது ரொம்ப சாதுவான பசு. கன்றுக்குட்டியாயிருக்கும்போதிலிருந்தே அதன் மீது எனக்கு ஒரு தனிப் பிரீதி"

மனைவியின் ஆசையைக் கெடுக்க விரும்பவில்லை அவன். இரண்டு நாட்களுக்கெல்லாம் பசு வந்துவிட்டது. புறக்கடையில் இருந்த சிறு தாழ்வாரத்தில் ஒரு பக்கத்தில் பசுவும், அதற்கடுத்தாற்போல் அதனுடைய சின்னஞ்சிறு கன்றும் கட்டப்பட்டன புறக்கடைப் பக்கத்துக்கு உறுதியான கதவு ஒன்றும் போடப்பட்டது. இந்திராவுக்குச் சந்தோஷமும் பெருமையும் பிடிபடவில்லை. தானே அதற்குத் தீனி போடுவது, பாதுகாப்பது எல்லா காரியங்களையும் அக்கரையோடு செய்துவந்தாள்.

4

அன்று இருட்டி சிறிது நேரமாகியும் 'ஜீப்'பை எடுத்துக் கொண்டு காட்டினுள் சென்ற ராமச்சந்திரன் ஏனோ இன்னும் வீட்டுக்கு வந்தபாடில்லை. இந்திராவுக்கு அன்றைக்கென்று இன்னும் சமையலும் முடிந்தபாடில்லை. அவள் மனமும் ஒரு நிலையில் இல்லை. வாசலுக்கும், சமையற்கட்டுக்குமாக நடந்து கொண்டிருந்தாள் அவள். குழந்தை தொட்டிலில் தூங்கிக் கொண்டிருந்தது.

புறக்கடையில் கட்டப்பட்டிருந்த பசு திடீரென்று 'அம்மா' என்று கத்தியது. சிறிது நேரத்திற்கு முன்தான் அதற்குத் தீனி வைத்துவிட்டு வந்திருந்தாள் இந்திரா. திரும்பவும் எதனால் கத்துகிறதென்று அவளுக்குப் புரியவில்லை. ஒருவேளை தண்ணீர் கேட்கிறதோ என்று நினைத்து ஒரு தொட்டியில் தண்ணீரை வைத்துவிட்டு வந்து மறுபடியும் தன் வேலையிலீடுபட்டாள்.

மறுபடியும்,–ஆனால் முன்னைவிட அதிக சத்தமாக அது கத்தும் சத்தம். சமையல் ஆகாதே வேதனை, தன் கணவன் இன்னும் வீடு திரும்பாத வருத்தம்–இரண்டும் சேர்ந்து அவள் உள்ளத்தில் கோபமாக உருவெடுத்தது. ஆகவே அவள் "சனியன் ஏன் இப்படிக் கத்தறது? இப்போதுதானே வைக்கோல் போட்டுவிட்டு வந்தேன். மறுபடியும் என்ன கத்தல்" என்று வெறுப்புடன் அலுத்துக் கொண்டு பேசாமல் தன் வேலையைக் கவனிக்கலானாள். மூன்றாம் முறை மிகவும் பலமான அலறல். விஷயம் புரியாமல் தவித்தாள் அவள். தனியாக அவ்வேளையில் புறக்கடைப் பக்கம் போகவும் பயம். போகாமல் இருக்கவும் தோன்றவில்லை. மெள்ள தைரியத்தை வரவழைத்துக் கொண்டு வாயிற்படி வரை வந்தாள். கால்கள் அதற்கு மேலே செல்லத் தயங்கின. 'ஒன்றுமிருக்காது' என்று திரும்பவும் உள்ளேயே சென்று வேலையிலீடுபட்டாள். அடுத்த நிமிஷம் திடீரென்று பசு மிகவும் உரக்க "அம்மா. அம்மா." என்று அலறியது. பசு கயிற்றை அறுத்துக் கொண்டு இப்படியும், அப்படியுமாக உலவும் ஓசை. கால் குளம்புகளின் "பட பட" சப்தம். மாட்டின் கொம்புகளுடன் ஏதோ ஒன்று பலமாக உராயும் அரவம்.

இந்திராவின் மனத்தில் ஏதோ ஒரு விவரிக்க முடியாத அச்சம் புகுந்து கொண்டது. கால்கள் வெட வெடவென்று நடுங்கின. நடுவில் கணவனைப்பற்றிய நினைவு. "ஒரு நாளுமில்லாமல் ஏன் இவ்வளவு நேரமாக வேண்டும்? அவருக்கு ஏதோனும் தீங்கு நேரிட்டிருக்குமோ. . . ." நினைக்கும் போதே அவள் ஹிருதயம் 'பட்'டென்று நின்றுவிடும் போல் இருந்தது.

திடீரென்று குழந்தையின் அழுகுரல். ஏற்கெனவே இருந்த பயத்துக்கு இது தூபம் போட்டது. ஆனால், அடுத்த கணமே பாசம் பயத்தை வென்றது. 'வந்தது



வரட்டு'மென்று அவள் வேகமாக ஓடி பீரோவின் மேல் இருந்த டார்ச்சை எடுத்து அதைப் போட்டு புறக்கடைப் பக்கம் திருப்பினாள். 'பளீ' ரென்ற டார்ச் வெளிச்சம் மின் வெட்டுப் போல் பாய்ந்தது. பின் பக்கம் பார்த்தாள். ஐயோ. இந்திராவின் தலை சுழன்றது. தேகத்தில் ரத்தம் உறைந்தது. பயத்தால் நாக்கு ஒட்டிக் கொண்டுவிட்டது. 'பளிச்' சென்று பாயும் அந்த வெளிச்சத்தின் நடுவில் மற்றொரு இன்னும் பிரகாசமான இரு உருண்டையான விழிகள். கண்ணாடி குண்டுகளைப் போல் தொிந்தன அவைகள் அவள் கண்களுக்கு. உருட்டி உருட்டி விழிக்கும் அந்தப் பார்வை அவள் ஹிருதயத்தில் ஊடுருவி பாய்ந்தது.

டார்ச் வெளிச்சத்தில் அவள் கண்களுக்குப்புலப்பட்டது. அந்த பயங்கிர காட்சி. பசுவின் மீது பாய்ந்து கொண்டிருந்தது அந்த சிறுத்தை. தன்னாலான மட்டும் அதை முட்டி அதை உள்ளே வர விடாமல், தானும் அதனிடமிருந்து மீள வழியில்லாமல் திமிறித் திண்டாடிக் கொண்டிருந்தது பசு. பசுவின் உடலெங்கும் இரத்தம் பீறிட்டு வழிந்து கொண்டிருந்தது. தூரத்தில் "அம்மா, அம்மா" என்று பயந்து அலறித் துள்ளிக் கொண்டிருக்கும் கன்று– சிறுத்தைக்கு அருகாமையில் தொட்டிலில் அலறிக் கொண்டிருந்தது குழந்தை.

"ஐயோ. சிறுத்தை. . . குழந்தை. . . பசு . . கன்று. ." பைசாச வேகத்துடன் கத்திக் கொண்டே அவள் தொட்டிலண்டை ஓடினாள். ஆனால், அடுத்த கணம் 'மடா' ரென்று கீழே சாய்ந்து விட்டாள் அவள்.

* * *

யாரோ முகத்தில் குளிர்ந்த நீரைத் தெளிப்பது போல் இருந்தது. மயக்கம் நீங்கி கண்ணை விழித்துப் பார்த்தாள் இந்திரா. பயத்துடன் சுற்றிச் சுழன்றன அவள் விழிகள். அந்த இடத்துக்கு வந்ததும் அவள் பார்வை நின்றது. ஆம். சற்று முன்பு அங்கே தான் நடந்தது அந்தப் பயங்கர காட்சி.

"இந்திரா"

மெள்ளத் திரும்பிப் பார்த்தாள் அவள். பக்கத்தில் அவள் கணவன் நின்று கொண்டிருந்தான். உயிர் வந்தது அவளுக்கு.

"நீங்கள். . வந்துவிட்டீர்களா? . . குழந்தை. . பசு. . ."

"பயப்படாதே இந்திரா. நான் வந்துவிட்டேன். குழந்தைக்கு ஒன்றும் அபாயமில்லை."

"எங்கே என் செல்வம்? . ."

எழுந்திருக்க முயன்றாள் அவள்.

"இந்திரா. நீ எழுந்திருக்க வேண்டாம். இதோ குழந்தை. . ."

தொட்டிலில் இருந்து குழந்தையை எடுத்துக் கொடுத்தான் அவன். அதை மார்புறத் தழுவிக் கொண்டாள் அவள். மறுபடியும் எதையோ நினைத்துக் கொண்டவள் போல், "பசு. . ." தட்டுத் தடுமாறினாள் அவள்.

"பசுவிற்குத்தான் படு காயம் ஏற்பட்டிருக்கிறது இந்திரா."

"ஐயோ. படுகாயமா?"

மெள்ள ஒருவாறு சமாளித்துக் கொண்டு எழுந்தாள் இந்திரா. கணவனுடன் பசு இருக்குமிடத்திற்கு வந்தாள்.

சிறுத்தை இறந்து விழுந்து கிடந்தது. பக்கத்தில் "அம் . மா." என்று உரத்துக் கத்த முடியாமல் திணறிக் கொண்டிருந்தது அவளுடைய அருமைப் பசு. உடலெல்லாம் இரணம். மிகவும் சிரமத்துடன் வந்து கொண்டிருந்தது மூச்சு. பொறுக்க முடியாத வலியின் காரணமாக அதன் கண்களிலிருந்து தாரை தாரையாகக் கண்ணீர் பெருகிக் கொண்டிருந்தது. தன் தாயின் நிலைமையைக் கண்டு மருள மருள விழித்துக் கொண்டிருந்தது கன்று. இந்திராவின் மனம் தன் குழந்தையையும், அந்தக் கன்றையும் ஒப்பிட்டுப் பார்த்தது. தன் குழந்தையைக் காப்பாற்றுவதற்காகச் சிறுத்தையை எதிர்த்துச் சமாளிக்க முடியாமல் திணறிப் படுகாயமடைந்திருக்கிறது பசு. வாயற்ற ஜீவனான அதன் தியாக சித்தத்தை நினைக்க நினைக்க அவளுக்குத் துக்கம் பீறிட்டுக் கொண்டு வந்தது.

"இந்திரா! நல்ல வேளையாக நான் அப்போது வந்திராவிட்டால் நிலைமை எப்படி ஆகி இருக்குமோ தெரியாது. குழந்தையின் மீது பாய இருந்த புலியைத் தன் கொம்புகளால் முட்டி உள்ளேவிடாமல் தடுத்துக்கொண்டிருந்தது பசு. நல்ல காலமாக ஜீப் டிரைவர் அப்போது என்னுடன் உள்ளே வந்தான். சட்டென்று அவன் சிறுத்தையைசுட்டான். உடனே நான் குழந்தையைத்தூக்கிக்கொண்டுவிட்டேன். சிறுத்தை இறந்து விழுந்தது. ஆனால் நம் அருமைப் பசுதான் பிழைப்பது கஷ்டமாயிருக்கும் போலிருக்கிறது."

"டாக்டரைக் கூப்பிடவில்லையா? ஆளனுப்புங்களேன்."

"சொல்லியனுப்பியிருக்கிறேன். இதோ வந்துவிடுவார். ஆமாம், தாளிட்டிருந்த கதவையும் மீறி எப்படி சிறுத்தை உள்ளே வந்தது?"

அப்போதுதான் இந்திராவுக்கு ஞாபகம் வந்தது. இருட்டியதும் மறதியாக அன்று கதவைத் தாளிடாமல் போனதால் எவ்வளவு அபாயங்கள் நேர்ந்திருக்கின்றன என்று தன்னைத் தானே நொந்து கொண்டாள்.

"இன்று நான் வேலை மும்மரத்தில் கதவைத் தாளிட மறந்து விட்டேன்......"

"எவ்வளவு அஜாக்கிரதை!"—ஒரு பெருமூச்சு விட்டான் அவன்.

நாழிகை ஏற ஏற பசுவின் முனகல் அதிகமாகிக்கொண்டே வந்தது. வாயிற்புறம் 'டக் டக்'கென்ற பூட்ஸ் ஓசை. டாக்டர் உள்ளே நுழைந்தார்.

ஆனால் அதே சமயம் பசு 'வீல்' என்று அலறியது. அடுத்த கணம் அதன் கண்கள் நிலைத்து நின்று விட்டன. உயிர் கூட்டைவிட்டுப் பிரிந்துவிட்டது. தன்னுடைய குழந்தையைக் காப்பாற்றுவதற்காக அதனுடைய குழந்தையைப் பரிதவிக்க விட்டுவிட்டுச் சென்றுவிட்ட அப்பசுவைப் பார்க்கப் பார்க்க இந்திராவின் கண்கள் மாலை மாலையாய் கண்ணீரைச் சிந்தின.

ஜோடி வளையல்

ராசு

★

ராமோகன் வெகு நேரம் அந்தக் கடிதத்தையே வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தான். அதிலுள்ள வாசகங்களை அவன் படிக்கவில்லை. என்ன எழுதப்பட்டிருக்குமென்று அவனுக்குத் தெரியும். கடிதத்துடன் வைக்கப்பட்டிருந்த அந்த வளையல்களின்மீது தான் அவன் பார்வை லயித்திருந்தது.

இரண்டு வருடத்திற்கு முன்பு அவனால் மங்களத்திற்குபரிசாக அளிக்கப்பட்ட வளையல் அவை.

பழைய நினைவுகள் அவனை முற்றுகையிட்டன. தலையைக் கையால் தாங்கியவாறு கவிழ்ந்து கொண்டான்.

சிறு வயதிலேயே தாயையும் தந்தையையும் இழந்த அவன் மாமனின் ஆதரவில் வளர்ந்து வந்தான். மாமனும் சொத்துக்காரன்; அவனும் சொத்துள்ளவன் தான்; தகப்பனார் மகனுக்காக ஏராளமான சொத்துக்களை விட்டுவிட்டுப் போய்விட்டார்.

மாமன் மகள் தான் மங்களம். ராம்மோகனைவிட, ஐந்து வயது சிறியவள். நல்ல சூடிகை. குறுகுறுவென்று நாலாபுறமும் சுழலும் அவளது கண்கள் எல்லோரையும் வசீகரிக்கும் தன்மை உடையவை. இருவரும் சேர்ந்து பழகும் வாய்ப்புக் கிடைக்கவே, அவர்களுக்கிடையில் காதல் பிறந்தது.

மாமாவின் வீட்டினுள் காலை வைத்ததுமே மங்களம் அவன் இதயத்தில் இடம் பெற்றுவிட்டாள்.

முதலில் தகப்பனார் காலமானார். வருத்தம் தாளாமல் ஒரு மாதத்திற்கெல்லாம் தாயும் தகப்பனைப் பின்பற்றிவிட்டாள். துக்கம் நெஞ்சைப் பிளக்க மாமன் வீட்டில் நுழைந்தபோது, "ராமு! ஏன் அழுகிறாய்? அத்தையும், அத்திம்பேரும் செத்துப்போய் விட்டார்கள். அதற்காக அழுவதால் என்ன பிரயோசனம்? அவர்கள் திரும்பி வந்துவிடுவார்களா? நாளைக்கு நடக்கப்போவதை நினைத்துப் பார்ப்பதை விட்டுவிட்டுச் சின்னக் குழந்தையைப் போல அழுகிறாயே!" என்று நூற்றுக் கிழவியைப்போல உபதேசம் செய்த மங்களம், அன்றே அவன் மனதில் குடி கொண்டுவிட்டாள். தாயையும் தந்தையையும் நினைத்து வருத்தப்படும் போதெல்லாம் அவள் சொல்லும் சமாதானங்கள் அவனையே வியப்படையச் செய்தன. இந்தச் சிறுமிக்கு இவ்வளவு அறிவா என்று அதிசயிப்பான்.

"நாளைக்கு மங்களத்திற்குகலியாணமாகி புருஷன் வீடு போய் விட்டால், அப்புறம்? இந்தக்கேள்விக்கு அவனால் விடை கண்டு பிடிக்க முடியவில்லை. நாளடைவில் இதுவே அவன் மனதில் நன்றாகப் பதிந்துவிட்டது. பிறருக்குக் கொடுக்காமல் அவளைத் தானே அடையவேண்டும் என்ற எண்ணத்தை உண்டாக்கியதும் இந்தக் கேள்விதான்.

மாமனும் மாமியும் இதையே தான் திட்டமிட்டிருந்தனர். 'ராம்மோகனுக்கு மங்களத்தைக்கொடுத்துவிட்டால் சரியாக இருக்கும். இரண்டும் நல்ல ஜோடி' என்று அவர்கள் தீர்மானித்திருந்தனர். ஆகவே, அவர்களுடைய பேச்சிலோ, விளையாட்டிலோ அவர்கள் தலையிடவில்லை.

ராம்மோகன் கல்லூரி படிப்பை முடித்ததும், வேலை தேட முயன்றான். மாமிக்கு இது பிடிக்கவில்லை.

"ஏண்டா, ராமு! உடனேயே வேலைக்குப் போய்டணுமா? சும்மா உட்கார்ந்தபடியே சாப்பிட இன்னும் நாலு தலைமுறைக்குக் காணுமே. எதற்காக உடம்பைக் கெடுத்துக் கொள்கிறாய்?"

"சாப்பாட்டிற்கு இருக்கிறதென்று சும்மா இருந்துவிட்டால், ஆகிவிடுமா, மாமி? இந்தக் காலத்தில் வேலையில்லையென்றால் என்ன மதிப்பு?"

ரயில்வேயில் நிஜாம் சமஸ்தானத்தில் அவனுக்கு வேலை கிடைத்தது. அவனுக்கு வெகு நாட்களாக ஒரு ஆசை. தன்னுடைய ஞாபகார்த்தமாக மங்களத்திற்குப் பரிசு ஒன்று கொடுக்க வேண்டுமென்பது அவன் நெடு நாளைய விருப்பம். வேலையில் சேர்ந்து முதல் மாத சம்பளத்தை பெற்றதும், அதைச் செலவழிக்காமல் மங்களத்திற்குப்பிடித்தமான பொருளை வாங்கிக் கொடுக்க வேண்டுமென்று நினைத்தான். உடனே லீவு பெற்றுக் கொண்டு புறப்பட்டு வந்து சேர்ந்தான்.

அன்று இருவரும் கடைத்தெருவுக்குச் சென்றனர். ராம்மோகன் புதிய ஆடைகளை வாங்குவதற்காகப் புறப்பட்டான். வரும் வழியில் யதேச்சையாக நகைக் கடை ஒன்றினுள் நுழைய நேரிட்டது. புதியமோஸ்தரில் கடைக்குவரும் மனிதர்களின் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்த வளையல்கள் மங்களத்தின் மனதைக் கவர்ந்தன.

"இதோ பார், மோகன்! இவைகள் பார்ப்பதற்கு எவ்வளவு நன்றாயிருக்கின்றன" என்றாள்.

மறுநாளே அம்மாதிரி வளையல் ஒரு ஜோடி செய்ய 'ஆர்டர்' கொடுத்துவிட்டான். வளையல் செய்து முடிந்ததும் அவளைக் கடைக்கு அழைத்துச் சென்றான்.

ஆசாரி அவள் கைகளில் வளையலை மாட்டி, இரு முனைகளையும் பற்றவைத்தார்.

"மங்களம்! இது எனது பரிசு. இதை நீ எக்காரணம் கொண்டும்

கழற்றக்கூடாது. ஒருக்கால் நமது விருப்பத்திற்குமாறாக ஏதாவது நேர்ந்தால், அப்போது....”

“மோகன்! அவ்விதம் நேராது என்று நான் முழு மனதுடன் சொல்கிறேன். என் தந்தை ஒரு பத்தாம் பசலி அல்ல!”.

“அதற்கு சொல்லவில்லை, மங்களம். அப்படி ஏதாவதுவிபரீதம் ஏற்பட்டுவிட்டால், அப்போது நீ தட்டானிடம் கொண்டுபோய் வளையலை இரண்டாக வெட்டி எடுத்துவிடு. அதுவரை அதைக் கழற்ற வேண்டாம்.” என்றான்.

ஆறு மாதத்திற்கு முன்புவரை மங்களத்தினிடமிருந்து வாரம் தவறாமல் கடிதம் வரும். அவைகளுக்குப் பக்கம் பக்கமாகப் பதில் வரைவான். தன் உள்ளத்திலிருப்பவைகளை அப்படியே காகிதத்தில் கொட்டிவிடுவான்.

ஒரு நாள் மங்களத்திற்கு ஜுரமென்று கடிதம் வந்தது. அதுதான் அவள் கடைசி கடிதம். பிறகு அபாயம் என்று மாமி எழுதியிருந்தாள். கடைசியாக ஜுரத்திலிருந்து பிழைத்துவிட்டாள் என்று கடிதம் வந்தது. நடுவில் அவளைப் போய்ப் பார்த்துவிட்டு வரவேண்டுமென்று முயன்றான். லீவு கிடைக்கவில்லை.

இவ்வளவு நாட்களுக்குப் பிறகு மங்களத்தினிடமிருந்து வந்த முதல் கடிதத்தில் வளையல்கள் வைக்கப்பட்டிருந்தன. இதை அவன் சற்றும் எதிர்பார்க்கவில்லை.

கடிகாரம் மணியடித்தது. சிந்தனை கலைந்து எழுந்தான் ராம் மோகன். அப்போதும் அவனது கையில் கடிதமிருந்தது. அதைப் பிரித்துப் படித்தான்.

“அன்புள்ள மோகன்! ஆறு மாதகாலமாக நோயில் கிடந்த எனக்குக் கடவுள் ஏமாற்றத்தையே அளித்துவிட்டார். ஒரேயடியாகக் கொண்டு போயிருந்தால் எவ்வளவு சந்தோஷமாயிருந்திருக்கும் தெரியுமா? அன்று ஒரு நாள். படுக்கையில் புரண்டு படுக்கும் போது தற்செயலாகக் கையைத் தூக்கினேன். என் கையிலிருந்து, உன் பரிசான வளையல் நழுவிக் கீழே விழுந்து ஓடியது. என் கையில் அன்று பிடிப்பாக, சுலபத்தில் கழற்ற முடியாதபடி வளையல் போட்டாய். அந்த வளையல் நழுவிக் கீழே விழும் அளவுக்கு எனது உடல் மெலிந்துவிட்டது. வளையலைத் தட்டானிடம் கொண்டு போய் வெட்ட வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. ஆகவே, நீ எனக்களித்தபடியே முழு வளையலாகத் திருப்பி அனுப்பியிருக்கிறேன்.— மங்களம்.”

தந்தி விலாசம்: “கோகுல்” ஸ்தாபிதம்: 1909. டெலிபோன் நெ. 57.

டி. எஸ். ஆர். & கோ.,

கும்பகோணம். ★ பிராஞ்சு: மன்னார்குடி

டிரேட் மார்க்

சந்தனாதித் தைலம்
அரைக்கீரை விதைத் தைலம்
கோகுல் கூந்தல்தைலம்
கூந்தலுக்கு வளர்ச்சியையும் குளிர்ச்சியையும் கொடுப்பதில் நிகரற்றவை.

வத்திகளுள் சிறந்தது
“கோகுல்” வத்திகள்

பல காய்கறி ஊறுகாய்,
கோகுல் வாசனைப்பாக்கு
முதலிய
இதர வாசனை
சாமான்களும்
கிடைக்கும்.

★

மதராஸ் ஸோல் ஏஜெண்டுகள்:—
ஸ்வராஜ் ஏஜன்ஸீஸ்,
87, ஜானி ஜான்கான் ரோடு,
ராயப்பேட்டை, சென்னை-14.

(கோவை & பாலக்காடு ஏஜெண்டு).
B. Balapattabi Chettiyar,
246, Vysyal St.
COIMBATORE.

காளையும் கல்யாணமும்

தில்லைவாசி

செஞ்சி மலைக்கோட்டையைப் பார்த்துவிட்டு வரலாம் என்று தனியாகக் கிளம்பினேன். நண்பர்களுடன் இப்படிப்பட்ட இடங்களுக்குப் போனால் சரிப்பட்டு வராது என்பது எனக்குத் தெரியும். எதையும் ஆர, அமர ஆராய்ந்து பார்க்கவிடமாட்டார்கள். மிக மேதாவிகள்போல் ஏதாவது சொத்தை சொள்ளை சொல்லி என்னைத்தான் பைத்தியமாக அடித்துவிடுவார்கள். என் முந்திய அனுபவங்களே இதற்குச் சான்று.

திண்டிவனத்திலிறங்கி, செஞ்சிக்குப் போகும் பாதையில், கால் நடையாகவே கிளம்பிவிட்டேன். தொலைவில் தெரியும் அழகு மிகுந்தொளிரும் இயற்கைக் காட்சிகள், நான் நடக்க நடக்க, என்னை நெருங்கிவருவதே, எனக்கு பரவசத்தை அளித்துவிடும். மனதைக்கவரும் காட்சிகளைக் காணுந்தோறும், அங்கங்கே கால்மணி, அரைமணி நேரம் தங்கி, அவைகளில் லயித்துப் போய்விடுவேன். ஒவ்வொன்றையும் துருவித்துருவி ஆராயப் புகுவேன். என்னைப் பைத்தியம் என்று வாய் கூசாமல் சொல்லக் கூடியவர்கள் தாம் யாரும் என்னுடன் வரவில்லையே.

அவைகளைப் பார்த்துப் பார்த்து, பழகிப்புளித்துப் போயிருந்த, கிராம வாசிகள் மட்டும், என்னைப் பார்த்தும் பார்க்காதவர்கள்போல் போய்க்கொண்டிருப்பார்கள். என்னைப் பைத்தியம் என்று அவர்கள் எண்ணப் போவதில்லை. தங்கள் ஊர்க் காட்சிகளை இப்படி ஒருவர் பார்த்து மயங்கிப் போவது அவர்களுக்குப் பெருமையாகக்கூடயிருக்கும்.

நடந்துகொண்டே இருந்தேன். செஞ்சி மலை தொலைவிலிருந்தது. என் கண்களுக்குத் தெரிந்தது. அதன் தோற்றத்தைக்கண்டு மயங்கியவனாய்ப் போய்க்கொண்டிருந்தேன். என்னையறியாமலே எனக்கு தேசிங்கு ராஜனின் வீரமும், ஆவேசமும் உண்டாகிவிட்டதுபோல் தோன்றியது.

கொஞ்ச தூரத்தில் தென்பட்ட ஒரு பெரிய உருவம் என் ஆச்சரியத்தைப் பன்மடங்கு அதிகமாக்கிவிட்டது. அது எதனுடைய உருவம் என்பது எனக்கு முதலில் சரியாகத் தெரியவில்லை. கிட்ட நெருங்க, நெருங்கத்தான் அது ஒரு காளைமாட்டின் உருவம் என்பது தெரிந்தது. சிகப்பு வர்ணம் தீட்டப்பட்டிருந்த அது, உயிர் உள்ள காளை போலவே அழகாயிருந்தது. அதன் முக லட்சணமும், உடற் திண்மையும், நீண்ட, கூரிய கொம்புகளின் வளைவும், அது நின்று கொண்டிருந்த தோற்றமும், என் வியப்பை அதிகரித்துவிட்டன. எந்த நிமிஷம், நம் மீது பாய்ந்துவிடுமோ, என்று பயப்படும்படி அதன் தோற்றமிருந்தது. கல்லாலும், சுண்ணாம்பினாலும்தான் அந்த உருவம் செய்யப்பட்டிருந்தது. ஆனால், அது ஒரு உயிருள்ள காளையைப் போலவேயிருந்ததினால், அது கல்லினால் செய்யப்பட்டிருக்கிறது என்று மன உணர்ச்சியையும் மறைத்துவிட்டது. ஆம், அது ஒரு கல்லைமறைத்தக் காளைதான்.

அதன் கழுத்தை, அப்பொழுது தான் புதிதாகக் கொண்டு வந்து போட்டிருந்த பூமாலை அலங்கரித்துக் கொண்டிருந்தது.

அப்போது காலை எட்டு மணியிருக்கும். நான் அதிகாலை ஐந்து மணிக்கே புறப்பட்டு, அவ்வளவுதூரம், காலைக்கதிரவனோடு போட்டியிடும் இயற்கை அழகில் ஈடுபட்டு, நடக்கும் சிரமமும் தெரியாமல் வந்திருந்தேன்.

இங்கே கோயிலில்லை. குளமுமில்லை. கிராமம் தான் இன்னும் ஒரு மைல் தூரத்திலிருப்பது தெரிந்தது. வயல்களுக்கிடையே, காளையின் உருவம், இவ்வளவு அழகாகச் செய்து வைத்திருப்பதுதான் எனக்குப்புரியவில்லை.

சாலையினின்றும் இறங்கி, ‘காளை’ இருந்த இடத்திற்கே போய்விட்டேன். அதைச் சுற்றி வந்தேன். அதில் காட்டியிருந்த கலையுணர்ச்சியைக் கண்டு, கண்டு “இதைச் செய்த திறமைசாலி யாரோ” என்று எண்ணமிட்டேன். அவனுடைய கற்பனை உள்ளத்தை என்னால் பாராட்டாமலிருக்க முடியவில்லை.

அந்தக் காளையைப்பற்றியோ, செய்தவர்களைப் பற்றியோ, ஏதாவது குறிப்பு எங்காவது எழுதிவைத்திருக்கிறார்களா என்று நான் துருவித் துருவிப் பார்த்ததுதான் மிச்சமாயிற்று ஒரு குறிப்பும் கிடைக்கவில்லை. உயிரற்றும், ஜீவ ஒளி வீசிக் கொண்டிருந்த காளையைப் பார்த்தவாறே அருகிலிருந்த மரத்தடியில் உட்கார்ந்தேன்.

இன்னும் கொஞ்சம் தூரத்தில் கிழவர் ஒருவர் தம்முடைய நிலத்தில் களை எடுத்துக்கொண்டிருந்தார். இந்தப் புதிர் விடுபடாமல், சும்மா உட்கார்ந்திருப்பதிலும், பிரியமில்லாமல், மீண்டும் காளையைச் சுற்றிவர ஆரம்பித்துவிட்டேன்.

என்னுடைய பைத்தியக்காரத்தனத்தை அந்தக் கிழவர் பார்த்திருக்கவேண்டும். அவர் என்ன நினைத்தாரோ? தம் வேலையை நிறுத்திவிட்டு என்னை நோக்கி வந்து கொண்டிருந்தார்.

“நீங்கள் யாருங்க? என்ன பார்க்கிறீங்க?” என்று கேட்டார் அவர்.

"நான் ஒரு வழிப்போக்கன். இந்தக் காளையின் உருவத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன். இது எதற்கையா இங்கு வைக்கப்பட்டிருக்கிறது?" என்று நான் கேட்டேன். "அவர் ஏதாவது சொல்லமாட்டாரா?" என்ற ஒரு ஆசையும் என் உள்ளத்தில் தளிர்விட்டது.

"அது ஒரு பெரிய கதை ஐயா! நிழலுக்குப் போவோம், வாருங்கள்" என்று கிழவர் கதை சொல்வதற்கு தம்மைத் தயார்படுத்திக் கொண்டார். நானும் என் காதுகளைத் தீட்டிக்கொண்டேன்.

அவர் சொன்ன கதையை எழுதும்போது, கிழவருடைய உணர்ச்சியும், என்னுடைய உணர்ச்சியும் போட்டி போடுவதினால்தான், 'நடை'யில் ஏற்படும் மாறுதல்கள் வேறுபட்டேயிருக்கின்றன.

* * *

நான் சொல்லப் போவது, நாப்பது வருஷங்களுக்குமுன் நடந்ததுங்க.

அதோ இருக்கிறது பாருங்க. அதுதான் மலையனூர். அந்த ஊரில் பகையுள்ள இரண்டு குடும்பங்கள். ஒன்று துரைசாமிக் கவுண்டர் குடும்பம். மற்றது தங்க சாமிக் கவுண்டர் குடும்பம். இரு குடும்பங்களுமே பரம்பரையாய்ப் பகையுள்ள குடும்பங்கள். இரண்டு பேருக்கும், காசு பணம், கன்று, காணி, மனை மாடுகள், எல்லாவற்றிலும் சமம் தான்.

துரை சாமிக் கவுண்டருக்கு மருதாயி என்று ஒரு பெண் இருந்தாள். தங்க சாமிக் கவுண்டருக்கு மாடன் என்று ஒரு மகன். மாடனுக்கு இரண்டு மூன்று வயசு சிறியவள் தான் மருதாயி.

ஆதி நாள் தொட்டே, மாடனுக்கும் மருதாயிக்கும் முடிச்சு போட்டுவிட வேண்டுமென்ற பேச்சு இரண்டு பெற்றோர்களுக்குமிருந்தது. ஏதோ ஒரு தூரத்து உறவில், மாடன், மருதாயிக்கு முறைக்காரனாகக் கூட இருந்தான். எனவே, இந்தக் கல்யாணப் பேச்சு மருதாயி பிறந்த நாளிலிருந்தே நிச்சயமான பேச்சாகயிருந்தது. அவர்களுக்குக் கல்யாண வயசு வர வேண்டியது தான் பாக்கி.

துரை சாமிக் கவுண்டர் தனக்கிருந்த சொத்துக்களையும், காணி நிலங்களையும், கருத்தாய் பார்த்து விருத்தி பண்ணிக் கொண்டார். தன்னுடைய உழைப்பினால், பூமியைச் செம்மைப் படுத்தி, பொன் போட்டால், பொன் விளையக் கூடிய பூமியாகச் செய்திருந்தார். அதற்கேற்றாற் போல வானமும் வஞ்சனை பண்ணவில்லை. ஒன்றுக்குப் பலவாக விளைந்து கொட்டிற்று. அவர் மேலும் இரண்டு காணி நிலம் வாங்கிப் போட்டார். இரண்டு மூன்று மனைக்கட்டுகளும் வாங்கிவிட்டார்.

தங்க சாமிக் கவுண்டரோ அதற்கு நேர் விரோதம். நிலம், நீரை அவர் சரியாகக் கவனிக்கவில்லை. தன்னுடைய முழு உழைப்பையும் பூமி தேவிக்குக் கொடுக்கவில்லை. விளைச்சல் வெள்ளாமையும் அதைப் போலத் தானிருந்தது. அப்பன் வைத்து விட்டுப் போன சொத்தோடு அவர் ஒன்றும் வாங்கிச் சேர்க்க முடியவில்லை. அது தான் போகட்டும். தனக்குக் கிடைத்த சொத்தையாகிலும் காப்பாற்றிக் கொண்டாரா?

அவர் ஒரு கெட்ட பழக்கத்திற்கு அடிமையாகியிருந்தார். சூதாட்டம் அவர் மனதைக் குலைத்திருந்தது. அதிலேயே சம்பாதித்து, சம்பாதித்து, துரை சாமிக் கவுண்டர் சொத்தைவிட மிஞ்சிவிடலாம் என்ற குருட்டு நம்பிக்கை அவருக்கு.

அவர் சரியாக வீட்டில் தங்குவதில்லை. கையில் நிறையப் பணம் சேர்த்துக் கொண்டு, வெளியூர்களுக்கு சூதாடப் போய்விடுவார். நிறைய மூட்டை கட்டி வரலாம் என்ற நினைப்போடு தான் போவார். திரும்பும் போது கொண்டு போன பணத்தை இழந்து, மனம் ஒடிஞ்சிப் போய் தான் வருவார். கொஞ்ச நாளைக்கு அதை மறந்துவிட்டவர் போலிருப்பார். பிறகு மறுபடியும் பழைய போக்கு தான். சூதாடி, சூதாடியே அவர் தன்னுடைய காணி நிலங்களையெல்லாம் ஒவ்வொன்றாகக் கை மாறிவிட்டார். கடைசியில் குடியிருந்த மனைக்கட்டு தான் மிஞ்சிற்று.

அப்போது தான் தங்க சாமிக் கவுண்டருக்குக் கண் திறந்தது. தவறு புலப்பட்டது.

"ஐயோ, என் மகனுக்கு சொத்து சேர்த்து வைப்பதற்குப் பதில், இருந்த சொத்தையும் சூதாடித் தொலைத்துவிட்டேனே. மலையாகக் கொண்டு வந்து குவித்துவிடலாம் என்று எண்ணி சொத்தை அழித்துவிட்டேன். எனக்குப் பிறகு மாடன் எப்படிக் காலந் தள்ளப் போறானோ?" என்று நினைத்து நினைத்துக் கவலைப்பட்டுக் கொண்டார். இந்தக் கவலையே அவரைப் படுக்கையில் தள்ளி விட்டது. இந்த மன நோய் ஆறாத நோயாகி ஒரு நாள் அவர் உயிரையே வாங்கிக் கொண்டு விட்டது. அப்போது மாடனுக்கு பத்து வயசு. உலகம் எப்படிப் பட்டது என்று அறிந்து கொள்ள முடியாத வயசு.

தங்க சாமிக் கவுண்டர் இறந்த பிறகு, அவர் மகன் மாடனும், மனைவி வள்ளியும் மிகவும் கஷ்டப்பட்டார்கள். சாப்பாட்டிற்கே திண்டாடிப் போனார்கள்.

வள்ளி மட்டும் தைரியத்தை விடவில்லை. "எங்காவது வயல்களில் வேலை செய்தால் பிழைத்துவிடலாம். களை கண்ணிக்குப் போனால் காசு கிடைக்கும்" என்ற நம்பிக்கை அவளுக்கு.

தங்க சாமிக் கவுண்டர் வீட்டில் ஒரு பசு மாடு இருந்தது. அது நல்ல மேற்கத்தி ஜாதி மாடு. ஒரு தரம் கன்று போட்டுவிட்டால், இரண்டு வருஷத்திற்கு, அடுத்த கன்று போடும் வரை பால் கறக்கும். சரியாக இரண்டு படி பால் கொடுக்கும். நல்ல காலம்! தங்க சாமிக் கவுண்டர், அதையும் விற்று சூதாடித் தொலைத்துவிடவில்லை. இந்தப் பசுவும் வள்ளிக்குப் பிழைக்க கொஞ்சம் வழி காட்டிற்று.



அப்பொழுது அது ஒரு காளை கன்று போட்டது. அது செக்கச் செவேறென்று மிகவும் அழகாயிருந்தது. அதன் உடல்வனப்பே ஒரு கவர்ச்சி. அதன் பொன்னான மேனி எல்லாரையும் மயக்கிவடும்.

மாடனுக்கு அது பிறந்தநாள் முதல் கொண்டு, அதனிடம் ஒரு ஆசை விழுந்துவிட்டது. அதன் மீது தன் உயிரையே வைத்து விட்டான் அவன். அதைக் கண்ணுங் கருத்துமாகப் பார்த்து வளர்த்துக்கொண்டு வந்தான். நல்ல துளிர் இலைகளையும், சுத்தமான பச்சைப் புல்லையும் கொண்டுவந்து தீனி கொடுத்தான். "செவலை, செவலை" என்று அதைவிட்டு ஒரு நிமிஷமும் பிரியமாட்டான்.

செவலைக்காளை கொழு, கொழு என்று வளர்ந்துவிட்டிருந்தது. அதன் சிகப்பு நிறமே ஒரு அழகு. அது ஒரு ஆளுக்கு மேல் உயரம். அதன் கூரிய, முன் பக்கமாக நீண்டு வளைந்திருந்த கொம்புகளோ இன்னும் எடுப்பாகயிருந்தன. 'மழமழ' வென்றிருந்த அதன் உடற் பருமனும் எல்லாமே சேர்ந்து பார்ப்பவர்கள், தங்களுக்கு அதைப்போல ஒரு காளையில்லையே என்று பொறாமைப்படும்படியிருந்தது.

அப்போது மாடனுக்கு பதினெட்டு வயசு. அவன் வயல்களில் கூலிக்கு வேலை செய்யும் நேரம் போக, ஒழிந்த வேலைகளில், செவலைக் காளையை தொலை தூரம் மலைக் காட்டினுள்ளே ஓட்டிப் போவான். அதன் வயிறு முட்டுமளவும், மேயவிட்டு ஓட்டி வருவான். செவலையும் தன்

அன்பை அவனிடம்செலுத்திற்று வாயற்ற ஜீவனாகயிருந்தும், அது மாடன் சொல்கிறபடி அடங்கி நடக்கும். கொஞ்சநேரம் அவனைக் காணாவிட்டால், "அம்மே, அம்மே" என்று கத்தி, கதற ஆரம்பித்துவிடும். அநேகமாக மாடனையும், செவலையையும் சேர்ந்தே பார்க்கலாம்.

செவலைக் காளையை, மாடனைத் தவிர, வேறு யாரும் தொட்டுப் பிடித்துவிட முடியாது. அது யாருடைய கட்டுக்கும் அடங்காததாகவே யிருந்தது. நாளுக்கு நாள், அதன் வளர்ச்சியோடு முரட்டுத்தனமும் போட்டியிட்டுக்கொண்டே வளர்ந்தது. ஆனால், மாடன் குரலுக்கு அது 'பெட்டிப் பாம்பாய்' அடங்கிவிடும்.

அந்த வருஷம் மாட்டுப் பொங்கல். ஊரில் பலர் மாடனுடைய செவலையை "மஞ்சள் விரட்டு" விட்டு விளையாடலாம் என்று சொன்னார்கள். மாடனும் சம்மதித்தான்.

மாலை நாலைந்து மணியிருக்கும். விஸ்தாரமாயிருந்த குளத்து மேட்டில் கூட்டம் கூடிவிட்டிருந்தது. மாடனும் செவலையுடன் வந்து சேர்ந்தான். ஊர் நாட்டாண்மைக்காரர் பத்து ரூபாய் பணம் முடிந்து, ஒரு மஞ்சள் துணியை மாடனிடம் கொடுத்தார். மாடனும் மஞ்சள் துணியை செவலையின் கழுத்தில் கட்டி, அதை விரட்டிவிட்டான். அதைப் பிடித்து நிறுத்தி துணியை அவிழ்த்துவிடுபவர்களுக்குதுணியும், பணமும் சேர வேண்டியது என்பது பேச்சு.

எத்தனையோ வாலிபர்கள் முயன்று பார்த்தார்கள். அவர்கள் 'ஜம்பம்' செவலையிடம் முடியவில்லை. யாராலும், அதை அண்ட முடியவில்லை. அப்போது அதனுடைய முரட்டுப் போக்கு, அவர்கள் உயிருக்கே உலை வைத்துவிடும் போலிருந்தது. கடைசியில் பணமும், துணியும், காளையின் சொந்தக்காரனான மாடனுக்குத்தான் கிடைத்தது. அவன் அதைப் பிடித்து நிறுத்தியதில் ஆச்சரியமில்லை. எல்லோரும் மாடனைப் புகழ்ந்து பாராட்டினார்கள்.

வேடிக்கை பார்க்க வந்தவர்களில் மருதாயியும் இருந்தாள். அவள் செவலையை எத்தனையோ தரம் பார்த்திருக்கிறாள். இன்று அதை யாராலும் அடக்க முடியாதபடி, அதன் முரட்டுத்தனத்தைப் பார்த்த அவள் ஆச்சரியம் அதிகமாயிற்று. மாடனை முன்பு அவள் பன் முறை பார்த்திருந்த போதிலும், கூட்டத்தின் நடுவில்தான் அவனை அவளால் நன்றாகப் பார்க்க முடிந்தது. அவன் காட்டிய வீரமும், அவனுடைய கம்பீரமான தோற்றமும், அவள் மனதைப் பெரிதும் கவர்ந்துவிட்டது.

வாட்ட சாட்டமாக வளர்ந்து, சிறு வயது முதலே வேலை செய்து, செய்து முரட்டுத்தனம் ஏறிப் போன உடலும், நல்ல

கிரிஸ்டல் ரேடியோ

விலை ரூ. 30.

மின்சார சக்தியோ பாட்டரியோ இன்றி தொனி சுத்தமாக வேலை செய்யும் அமெரிக்காவிலிருந்து சமீபத்தில் இறக்குமதியானது வசீகரமான நிபந்தனைகளின் பேரில் எங்கும் ஏஜண்டுகள் தேவை. நாணயமுள்ளவர்களுக்கு தவணைகளாகவும் தொகை செலுத்த அனுமதிக்கப்படும்.

எழுதவும் :

General Novelty Stores Ltd,
Delhi-6.

மந்திரி சபை நெருக்கடி

"மாருதி" ஜோஸ்ய பத்திரிகை.

சென்னையில் காங்கிரஸ் மந்திரி சபை ஏற்படுமா?
பங்குனியில் வியாபாரம் எப்படி?

பொன், வெள்ளி விலை உயருமா? பஞ்சு மார்க்கட் எப்படி? எண்ணெய் மார்க்கெட்டின் கதி என்ன? பாக்கு, மணிலாப் பயர், மிளகு, லவங்கம், பாதரசம், முத்துக்கொட்டை, புகையிலை, சுக்கு போன்ற பல முக்கிய வஸ்துக்களின் விலைகளில் தினந்தோறும் ஏற்படும் ஏற்றத் தாழ்வுகள் விவரமும் பொது நிலையும் தெளிவாக எழுதப்படுகிறது உங்கள் காலம் எப்படி? ராசிவாரி தினப் பலன், நக்ஷத்திரப் பலன், தினசரிக் குறிப்புகள், ரேஸ், அதிருஷ்ட எண்கள், நிறம், விவரம் தரப்பட்டிருக்கிறது வாழ்க்கையில் செவ்வாயால் ஏற்படும் பலன் மற்றும் பல முக்கிய விஷயங்களுடன் கூடியது.



தனிப் பிரதி 0—6—0. ஒரு வருஷ சந்தா ரூ. 4—8—0.

குறிப்பு:—ஹிகின்பாதாம்ஸ், சுதேசமித்திரன் புத்தகசாலைகள், மற்றும் எல்லா நியூஸ் ஏஜண்டுகளிடமும் கிடைக்கும்

மானேஜர்: மாருதி ஆபீஸ், திருத்தணி, P. O. (S. I.)

எடுப்பான முக வசீகரமும், சிவந்த மேனியும் கொண்டிருந்த மாடனைக் கணவனாக அடைய எந்தக் கன்னிப் பெண்ணும் விரும்புவாள்.

வருஷா வருஷம் மஞ்சள் விரட்டு விளையாட்டு நடந்தது. மாட்டுப் பொங்கலன்று ஊரில் ஜனங்கள் "ஜே, ஜே" என்றிருக்கும். எங்கெங்கோயிருந்து வந்துவிடுவார்கள். மஞ்சள் துணியில் கட்டும் பணம், ஐம்பது, நூறு, ஏறிக் கொண்டே போகும். எங்கெங்கோவெல்லாமிருந்து பெரிய, பெரிய அசகாய சூரர்கள் வந்தார்கள். "செவலையைப் பிடித்துவிடுகிறோம், பாருங்கள்" என்று மார் தட்டினார்கள். கடைசியல்ி அவர்கள் பேசியது வெட்டிப் பேச்சாகத்தான் போய்விட்டது. எந்தப் பயலாலும், செவலையிடம் நெருங்க முடியவில்லை.

வள்ளி உழைப்பும், மாடன் உழைப்பும் சேர்ந்து அவர்கள் ஜீவனத்திற்கு வேண்டிய வருவாயைக் கொடுத்தது. வள்ளி, மகனின் கல்யாணத்திற்காக, கொஞ்சம் கொஞ்சமாக, முடிந்த வரையில், சேர்த்து வைக்கவும் ஆரம்பித்துவிட்டாள்.

மாடன் இருபத்தைந்து வயசு காளையாக மாறியிருந்தான். மகனுக்குக் கல்யாணம் செய்து, கண் குளிரப் பார்க்க வேண்டுமென்ற நினைப்பு வள்ளிக்குண்டாயிற்று.

முன்னமேயே, தங்க சாமிக் கவுண்டர் இருந்த போது, நடந்த பேச்சு வார்த்தைப்படி, துரை சாமிக் கவுண்டர் மகள் மருதாயியைப் பெண் பார்த்துவிடுவது என்று வள்ளி கிளம்பினாள்.

"பெரிய காசுக்காரனான துரைசாமிக் கவுண்டர் இதற்குச் சம்மதிக்கவும் மாட்டார். கேட்டு அவமானப்படுவதைவிட, கேட்காமலே இருந்துவிடலாம்" என்று மாடன் தாய்க்குச் சொன்னான்.

"அப்படி நினைத்து, இருந்துவிடக் கூடாதப்பா. நாளைக்குப் பெண் வந்து கேட்கவில்லை என்ற பழியைத்தான் சொல்வார்கள்" என்று அவள் சொன்னாள்.

"ஆதியில் பேச்சு இருந்தாலும், எனக்கு இப்பொழுது சம்மதமில்லை. மாடனுக்கு ஒன்றும் சொத்தில்லை" என்று துரைசாமிக் கவுண்டர், வெளிப்படையாகவே சொல்லிவிட்டார். வள்ளி ஏமாற்றத்தோடு திரும்பினாள்.

அத்துடன் மாடனுக்குத் தன் கல்யாணத்தைப்பற்றிய நினைப்பு அற்றுப் போயிற்று. வள்ளி வேறெங்காகிலும், பெண் பார்த்து வருவதாகச் சொல்லியும், மாடன் வேண்டாம் என்று சொல்லிவிட்டான்.

(தொடரும்)

ஒருவர்:— உனக்காக அந்த நாவலை லைப்ரரியிலிருந்து வாங்கிக் கொண்டு வந்திருக்கிறேன். வீட்டுக்குத்தானே போறே, படிச்சுட்டு நாளைக்குக் கொண்டுவந்துவிடு.

நண்பர்:— இப்போ வேண்டாம்பா. வீட்டிலே படிக்கிறதுக்கு எங்கேடா நேரம் இருக்கு. நாளைக்கு ஆபீஸுக்குப் போகச்சே கொடு. சாயங்காலம் 'ரிடர்ன்' பண்ணிடறேன்.

உங்கள் காலபலன்

—'ராவ்'

மேஷ ராசி

அசுவனி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய

இம்மாதத்தில் கிரகங்களின் நிலை அதிக செலவையும், பெரும் பண முடையையும் காட்டுகின்றன. குடும்ப விவகாரங்கள், குழந்தைகள், கிரியைகள், பழைய கடனைத் திருப்பித் தருவது, சகோதரன் சகோதரி போன்ற உறவினர்கள் முதலிய இனங்களில் இச்செலவுகள் ஏற்படும். சேர வேண்டிய பணம் எளிதில் வராது. பெரியவர்களிடத்திலோ அல்லது உத்தியோகத்தில் மேலிருப்பவர்களிடமோ செல்வாக்கு கிடைக்காது. மனைவியின் தேக நிலைமை பாதிக்கப்படும். குடும்ப வாழ்க்கையில் அதிகமாக ஈடுபட விருப்பம் ஏற்படும். தூர இடத்துக்குப் பிரயாணம் ஒன்று ஏற்படும் என்று தோன்றுகிறது. சிலர் விஷயத்தில் அது யாத்திரையாக இருக்கலாம். புது நண்பர்கள் ஏற்பட்டு அதனால் அநுகூலம் ஏற்படும். ராசி அதிபதி மார்ச் 25 க்குப் பிறகு வக்கிரிப்பதால் அத்தேதிக்குப் பிறகு சில முயற்சிகள் தாற்காலிகமாகக் குலைவுறும். சிலருக்குக் கலியாணம் நடக்கும். கடைசி வாரம் பண விஷயத்தில் நன்றாக இருக்கும். ஏப்ரல் முதல் பாதி அதிருஷ்டகரமாக இருக்கும்.

உத்தியோகத்தில் அநுகூலம் ஏற்படாது. சிலருக்கு மாற்றல் ஏற்படும். வேலை கடுமையாகும். அதிக பொறுப்பானதாகவும் இருக்கும். ஏப்ரல் முதல் தேதி வாக்கில் ஆபீஸ் தஸ்தாவேஜி ஒன்றைப் பற்றி கொஞ்சம் கவலை ஏற்படும். ஆனால், அந்தக் குற்றச் சாட்டிலிருந்து தப்பித்துக் கொள்ளும்படியாக இருக்கும்.

வியாபாரிகள்: ஹேஷ்யங்களுக்கு இது சரியான காலமல்ல. ஹேஷ்யங்களால் நஷ்டம் ஏற்படும். வெளி நாட்டு வியாபாரத்தில் கூட்டு வியாபாரம் நல்ல பலனைக் கொடுக்கும்.

குதிரைப் பந்தயத்தில் ஈடுபடுவதில் உற்சாகமிராது.

14, 16, 18, 21, 27, 28, 31, ஏப்ரல் 3, 8, 12. அதிருஷ்ட நாட்கள்.

விருஷப ராசி

கிருத்திகை 2-ம் பாதம் முதல் ரோஹிணி, மிருகசீரஷம் 2-ம் பாதம் முடிய

இம்மாதத்தில் கிரகங்களின் நிலை மகிழ்ச்சிகரமான வாழ்க்கையைக் குறிக்கின்றன. தசா புக்தி அநுகூலமாக இருந்தால், முக்கியமான விவகாரங்களிலெல்லாம் வெற்றி காண இது சிறந்த மாதமாக இருக்கும். திவ்ய ஸ்தலங்களுக்குச் செல்லவோ, அல்லது மத விஷயத்தில் தீவிரமாக ஈடுபடுவோரைச் சந்திக்கவோ இம்மாதம் மிகவும் நன்றாக இருக்கிறது. நன்செய், வீடு, சொத்து முதலியவைகளில் பணக்காரர்கள் அதிக பணம் போடுவார்கள். அறிவாளிகளான புதிய நண்பர்கள் ஏற்படுவார்கள். அவர்களால் அநுகூலமுண்டாகும். எதிர் பாராத பண லாபமும் கிடைக்கும். மார்ச் 27-ந் தேதிக்குப் பிறகு, பழைய பாக்கிகளை வசூல் செய்வதில் கொஞ்சம் தாமதம் ஏற்படக்கூடும். குழந்தைகளில் ஒருவன் எதிர் பாராத விதமாக வெற்றி பெறுவான். வீட்டு வாழ்க்கை மிக மகிழ்ச்சிகரமாக இருக்கும். சிலர் விஷயத்தில் கலியாணம் ஏற்படும். அதனால் நல்லலாபம் உண்டாகும். ஏற்கெனவே மணமானவர்களுக்குக் குடும்ப வாழ்க்கையில் சிறிதளவு குலைவு ஏற்படும். புது விஷயங்கள் தெரியும். வேலைத் துறைகளில் செல்வாக்கு இருக்கும்.

உத்தியோகத்தில் நிச்சயமான அநுகூலமுண்டு. அபிலாஷைகள் பூர்த்தியடையும். ஆபீஸின் பாராட்டுதலும், சகபாடிகளின் பாராட்டுதலும் கிடைக்கும்.

வியாபாரிகள்: வியாபார முயற்சிகள் வெற்றிகரமாக இருக்கும். வெளி நாட்டு வியாபாரமும், கூட்டு வியாபாரமும் அதிக உற்சாகமூட்டக் கூடியதாக இருக்கும். ஆனால், பெரும் செலவு இருந்து வரும். குதிரைப் பந்தயம் ஆடுவோருக்கு மிகவும் அதிருஷ்டகரமாக இருக்கிறது.

14, 16, 18, 24, 26, 27, 31, ஏப்ரல் 5, 9, 10 ஆகியவை அதிருஷ்ட நாட்கள்.

மிதுன ராசி

மிருகசீரிஷம் 3-ம் பாதம் முதல் திருவாதிரை புனர்வஸு 3-ம் பாதம் முடிய

அநுகூலமான கிரகங்களின் பலனே இம்மாதத்தில் பலமாக இருக்கிறது. ராசி அதிபதி புதன் பத்தாவது வீட்டில் பிரவேசித்திருப்பதால் எல்லா முயற்சிகளிலும் வெற்றி கிட்டும். வெளிப் பழக்கங்கள் தீவிரமாகவும், முன்னேற்றமாகவும் இருக்கும். சகாக்கள் உயர்ந்த அந்தஸ்தினராக இருப்பார்கள். அவர்களால் அதிக லாபம் ஏற்படும். குழந்தைகளில் ஒன்று இஷ்டத்தைப் பூர்த்தி செய்யும் அளவுக்கு முன்னுக்கு வரும். சிந்தனா சக்தியை அதிகம் உபயோகிக்கும்படியாகவும், புதுப் புது யோசனைகளைக் கண்டுபிடிக்கும்படியாகவும் இருக்கும். நாலு ஐந்து வீடுகள் தேக ஆரோக்கியம் குலைவதைக் காட்டுகின்றன. வயிற்றுக் கோளாறு ஏற்படலாம். அதிக தண்ணீர் குடிப்பதைத் தவிர்க்க வேண்டும். அதிகமாக தண்ணீர் குடிப்பதால் ஏதாவது வலியும், கால் வீக்கமும் உண்டாகும். கலியாணம் முதலியன போன்ற முக்கிய கிரியை ஒன்று நடக்கும். அன்றாட வாழ்க்கையில் சிறிதளவு மாறுதல் ஏற்பட்டால் கூட மகிழ்ச்சி ஏற்படுவதாக இருக்கும் இம்மாதத்தில். வீட்டிலும், பணவிஷயத்திலும் அதிகசந்தோஷம் ஏற்படும் இளம் நண்பர்களில் ஒருவர் இம்மாதத்தில் உறு துணையாக இருப்பார். மார்ச் 27-ம் தேதிக்குப் பிறகு லாபம் பாதிக்கப் படலாம்.

உத்தியோகத்தில் எதிர் பார்க்கும் பிரமோஷன் இல்லாவிட்டாலும் வேலை மாற்றமாவது ஏற்பட்டால் நல்லது என்ற விருப்பம் ஏற்படும். வேலையில் மேலதிகாரிகள் திருப்தி கொள்வார்கள். சீக்கிரத்தில் ஆபீஸில் பதவி உயர்வு ஏற்படலாம்.

வியாபாரிகள்: மந்தம் சம்பந்தமாக சிறிது காலத்துக்கு கவலை இருந்து வரும். சீக்கிரத்தில் நம்பிக்கை நிறைவேறும்.

14, 16, 18, 24, 27, 29. ஏப்ரல் 3, 5, 11, 12, அதிருஷ்ட நாட்கள்.

> **1952-ம் ஆண்டு மார்ச் மாதம் 14உ முதல் ஏப்ரல் மாதம் 12-ந்தேதி வரையில் பொதுவாக ஒவ்வொரு ராசிக்காரர்களுக்கும் பலன்கள் கொடுக்கப்பட்டுள்ளன ராசியைத் தெரிந்துகொள்ள உதவியாக நட்சத்திரங்களும், பாதங்களும் கூடவே பிரசுரிக்கப் பட்டிருக்கின்றன.**

கடக ராசி

புனர்வஸு கடைசி பாதம் முதல் புஷ்யம் ஆயில்யம் முடிய

தனாதிபதி ரவியும், தனலாபாதிபதி சுக்ரனும் பரஸ்பரம் இடம் மாறியிருப்பதால், அதிக பண வசதிகள் கிடைப்பதும், செலவைக் கட்டுக்குள் அடக்குவதும், வீட்டில் பெரியவர்களுடனும், ஆபீஸில் மேலதிகாரிகளுடனும் தொடர்புஏற்கெனவேபாதிக்கப்பட்டிருந்தால்இம்மாதத்தில் அது கணிசமான அளவு சீர்படும். இல்லாவிட்டால் அது மேலும் வளரும். தூரப் பிரயாணம் நேரிடும். சிலருக்கு கடல் மார்க்கமாக பிரயாணம் நேரிடலாம். அது ஒரு சுபத்தையோ, அல்லது வைதீக காரியத்தையோ முன்னிட்டிருக்கும்.

இன்ஷ்யூரன்ஸ் வேலையிலிருப்பவர்கள் புது கேஸ்களைப் பிடிப்பதில் பிரமாதமான வெற்றி காண்பார்கள். ஏற்கெனவே ஏற்பட்ட கடன் ஏதாவது இருந்தால் அதில் ஓரளவையாவது திருப்பித் தருவது சாத்தியப்படலாம். செவ்வாய் சுக்ரன் காரணமாக வீட்டு வாழ்க்கை மகிழ்ச்சிகரமாக இராது. மனைவியின் தேக ஆரோக்கியம் பாதிக்கப்படும். அல்லது குடும்பத்தில் சண்டைகளும், மனஸ்தாபங்களும் ஏற்படலாம். தூர இடத்திலிருந்தோ, அல்லது பெரியதொரு சங்கத்திலிருந்தோ பண லாபம் ஏற்படக் கூடும். தேக ஆரோக்கியம் சரியாக இராது. நண்பர்கள் கட்டும் மனக் கோட்டைகளை நம்பியிருக்கக் கூடாது.

உத்தியோகத்தில் சீக்கிரத்தில் நிலைமை சீர்படும். மார்ச் கடைசி வாரத்துக்குள்ளாக விருப்பங்கள் நிறைவேறவில்லையென்றால் நம்பிக்கை தாற்காலிகமாகக் குலையும்.

1952-ஆண்டு மார்ச்சீ 14-ந்தேதியுள்ள கிரகநிலை

புதன் சூரியன் குரு			யுரேனஸ்
சுக்கிரன் ராகு	ராசி		
			கேது
		செவ்வாய்	சந்திரன் வ. சனி நெப்டியூன்

வியாபாரிகள்: இம்மாதத்தில் வெளி நாட்டு வர்த்தகம் அதிக லாபகரமாக இருக்கும். கூட்டு வியாபாரத்தில் கூட்டாளிகளிடையே அதிகமான ஒற்றுமை வேண்டியிருக்கும். இல்லாவிட்டால் கூட்டு கலையும்படி நேரிடும்.

குதிரைப் பந்தயம் உற்சாகமூட்டக் கூடியதாக இருக்கும்.

14, 16, 18, 24, 25, 30, 31, ஏப்ரல் 5, 6, 8, 10 11 அதிருஷ்ட நாட்கள்.

ஸிம்ம ராசி

மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய

கிரக நிலை இம்மாதம் ஆரோக்கியத்துக்கோ அல்லது சுபிட்சத்துக்கோ அநுகூலமாக இல்லை. நிலைமை ஒரு நிலையாக இராது. பாக்கிகள் சில எளிதில் வசூலாகிவிடும். மற்றவைகள் தாமதிக்கும். இம்மாதத்தில் வருமானம் நன்றாக இருக்கும். திடீர் லாபமும் இருக்கும். செலவு அதிகமாக இருக்கும். 8-ம் இடமான மீனத்திலிருக்கும் கிரகங்களால் ஆத்மார்த்த விஷயங்களில் நாட்டம் செல்லும். சமீப பந்து அல்லது குழந்தை ஒன்றின் தேக ஆரோக்கியம் காரணமாக தூர இடத்துப் பிரயாணம் ஒன்று நேரிடலாம். தூர இடத்திலிருந்து கெட்ட செய்திகள் வரக் கூடும். தேக ஆரோக்கியம் சரியாக இராது. மறைந்து கிடக்கும் வியாதி ஏதாவது திடீரென வெளிக்குக் காட்டும். மனைவி பக்கத்து உறவினர்களிடமிருந்து உதவி கிடைக்கும். கால் வீக்கக்காரர்களுக்கு இம்மாதம் மோசமாக இருக்கும். புது வருமான இனம் தேடப்படும். மனைவி தேக ஆரோக்கியம் சரியாக இராது. வியாபார உறவு வைத்திருக்கும் ஒரு நண்பர் சரியாக நடந்து கொள்ள மாட்டார்.

உத்தியோகத்தில் ஆபீஸ் வேலைப் பளு முழுவதையும் சுமப்பதைவிட வேறொரு லாபமும் இல்லை. பெரியவர்கள் தப்பு கண்டுபிடிக்கும்படியாக எதையும் செய்யக் கூடாது.

வியாபாரிகள்: இம்மாததில் நன்றாக இருக்கும். கூட்டு வியாபாரத்தில் லாபம் உண்டு. வெளி நாட்டு வியாபாரம் உற்சாகமூட்டக் கூடியதாக இருக்கும். புது வருமான இனங்கள் கண்டுபிடிப்பதில் வெற்றி கிட்டும்.

குதிரைப் பந்தயம் ஆடுவோர் பதட்டமில்லாமலிருந்தால் நன்றாக லாபம் பெறுவார்கள்.

14, 16, 18, 24, 26, 27, 31, ஏப்ரல் 3, 5, 6, 8, 12, அதிருஷ்ட நாட்கள்.

கன்யா ராசி

உத்திரம் 2-ம் பாதம் முதல் ஹஸ்தம், சித்திரை 2-ம் பாதம் முடிய

அநுகூலனான மீன குரு ஏப்ரல் 1-ம் தேதி மேஷத்துக்குச் செல்வதாலும், மற்ற இரு கிரகங்களான புதனும், குஜனும் மார்ச் கடைசியில் வக்கிரிப்பதாலும், மாத முதல் பாதி இரண்டாம் பாதியைவிட நன்றாக இருக்கும் என்று தெரிகிறது. இவ்விரு கிரகங்களின் வக்ர கதியால் சிறிது காலத்துக்கு முயற்சிகள் வெற்றி பெறுவது தடைப்படும். பல முயற்சிகள் சீக்கிரத்தில் முன்னேற மாட்டா. அம் முயற்சியில் கல்யாண விஷயம் ஒன்றாக இருக்குமானால் பலர் விஷயத்தில் அது தாற்காலிகமாகக் கைவிடப்படும். செலவு என்றுமில்லாத அளவுக்குப் போகும். பெரியவர்கள் குறுக்கிட்டால் கல்யாணப் பேச்சு வார்த்தையில் ஏமாற்றம் ஏற்படும். பாக்கிகளை வசூல் செய்ய கோர்ட் நடவடிக்கைகளை எடுக்க வேண்டி வரும். மனைவி அல்லது புருஷனின் ஆரோக்கியம் அதிகம் பாதிக்கப்படும். புதிதாக கல்யாணமான தம்பதிகளுக்கு மகிழ்ச்சியிராது. ஏப்ரல் 4-ம் தேதியிலிருந்து பண விஷயத்தில் அதிக அதிருஷ்டம் இருக்கும். இதற்கு முன்பு கை மாத்தாக கடன் வாங்க வேண்டி வரும். தேக ஆரோக்கியம் சரியாக இராது.

உத்தியோகத்தில் அநுகூலம் இராது விரும்பினால் மாற்றல் கிடைக்கும். ஆபீஸில் வேலை கடினமாக இருக்கும். வேலையைக் கொண்டு இலாகாவைத் திருப்தி செய்ய முடியாது. யாரையும் எதிர்த்துக் கொள்ளாமல் போய்க் கொண்டிருந்தால் சிறிது காலத்துக்கு வேலையில் திருப்தி நிலவும்.

வியாபாரிகள்: இது கொஞ்சம் செழிப்பான மாதம் தான். கூட்டு வியாபாரத்தைத் தவிர்க்க வேண்டும். ஏப்ரல் இரண்டாவது வாரம் அதிக லாபகரமாகவும், உற்சாக மூட்டக் கூடியதாகவும் இருக்கும். தூரப் பிரயாணம் ஒன்று நேரிடலாம்.

குதிரைப் பந்தயம் ஆடுவோருக்கு கடைசி வாரம் அதிருஷ்டகரமாக இருக்கும்.

14, 16, 18, 24, 27, 31, ஏப்ரல் 3, 5, 8, 11, 12 அதிருஷ்ட நாட்கள்.

துலா ராசி

சித்திரை, 3-ம் பாதம் முதல் சுவாதி விசாகம் 3-ம் பாதம் முடிய

6, 12 வீடுகளிலுள்ள கிரகங்கள் இவ்வாரத்தில் கெட்ட பலன்களைக் குறிக்கின்றன. பெரும் கவலைகளையும், மாமா, பெரியப்பா, சகோதரர் போன்ற உறவினர்களால் தொந்தரவு, பலவீனமான தேக நிலை, கால்களுக்குப் பாதகம், கடன் பீதி, பெரும் செலவு, தொழிலில் ஏமாற்றம், சூழ் நிலையில் பகை முதலியனவற்றைக் குறிக்கின்றன. பண சம்பந்தமாக புதுக் கடன் வாங்க நேரிடும் செலவு உச்ச நிலையை அடையும். லக்னத்தில் குஜன் இருப்பதால் அதிக முடையான காலத்தில் பிறர் மூலமாகப் பணம் கிடைக்கும். புது முயற்சிகள் வெற்றி பெறமாட்டா. குழந்தைகளைப்பற்றிக் கவலை இருக்கும். முதலீடு போடுவதுபற்றி தைர்யமிராது. நண்பர்களில் ஒருவர் விரோதமாகக் கிளம்புவார். குறிப்பாகக் கடைசி வாரத்தில் ஏரி, சமுத்திரம் முதலியவைகளில் நீஞ்சுவதால் ஏற்படக்கூடிய விபத்துகளைத் தவிர்க்க வேண் வேண்டும்.

உத்யோகத்தில் மனநிம்மதி இராது. வேலை கடுமையாக இருக்கும். சிப்பந்திகள் புகார் செய்வார்கள்.

வியாபாரிகள்: எதிர்பார்த்த உற்சாகமிராது. கூட்டு வியாபாரம் செழிப்பாக இராது. தனி வியாபாரம் நல்ல பலனைக் கொடுக்கும்.

குதிரைப் பந்தயம் ஆடுவோருக்கு சரியாக இல்லை.

14, 16 18, 24, 28, 29, 31, ஏப்ரல் 3,5, 10, 12 அதிருஷ்ட நாட்கள்.

விருச்சிக ராசி

விசாகம் 4-ம் பாதம் முதல், அனுஷம், கேட்டை முடிய

இம்மாதத்தில் போன மாதத்தைவிட அதிகமாக நல்ல பலன்கள் தென்படுகின்றன. இவை எல்லாம் பாரமார்த்திகமாகவே இருக்கும். பெரியோர்களின் ஆசீர்வாதத்தைப் பெற நேரிடும். ஸத் காரியங்களில் புத்தி தீவிரமாகச் செல்லும். குழந்தைகளில் ஒன்றின் விவகாரத்தில் அதிக சிரத்தை ஏற்படும் அல்லது குழந்தை பிறக்கும். அடிக்கடி உறவினர்களைக் காண நேரும். ராஜ்யாதிபதி குஜன் வக்ர கதியில் இருப்பதால் பிரயாணங்கள் போன்ற திட்டங்கள் நிறைவேறமாட்டா. பண விஷயத்தில் செலவு அதிகமாக இருந்தபோதிலும் அசௌகர்யம் ஏற்படாது.

உத்யோகத்தில் மேலதிகாரியின் தயவு கிடைக்கும். சம்பாதனை உயரும். கடைசி வாரம் அதிருஷ்டகாமாகவும் வீட்டில் சந்தோஷமாகவும் இருக்கும்.

வியாபாரிகள்: ஹேஷ்யங்களுக்கு இது அதிக அதிருஷ்டமான மாதம். வியாபாரத்தில் அதிகமுதல்போட நேரிடும். உள்நாட்டு வியாபாரம் அதிக பலனைத் தரும்.

குதிரைப் பந்தயம் ஆடுவோர்களுக்கு இந்த மாதத்தில் நல்ல லாபம் கிடைக்கும்.

14, 16, 18, 24, 26, 27, 31 ஏப்ரல் 3, 5, 9, 10, 12 அதிருஷ்ட நாட்கள்.

தனுர் ராசி

மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் முடிய

லக்னாதிபன் தனது நவாம்சத்திலும் சூரியன் புதனுடனும் நாலாமிடத்தில் இருப்பதால் வீட்டு விவகாரங்களில் அதிக சிந்தனை செலுத்தும்படியாக இருக்கும். பலர் விஷயத்தில் ஜாகை மாற்றம் ஏற்படலாம். விவசாயிகளானால், தங்கள் கிருஷியை அபிவிருத்தி செய்வதில் விருப்பம் ஏற்படும். நிலம் அல்லது வீட்டு சொத்தின்மீது பணம் போடுவதால் அனுகூலமுண்டு. செவ்வாய 11-ல் இருப்பதால் அத்தகைய வெற்றி சாத்தியமாகும். உறவினர்களும் துர்லபமான நண்பர்களும் வருவார்கள். ஏப்ரல் 1-ம் தேதியிலிருந்து குரு மேஷத்தில் இருக்கப்போவதால், உத்யோகத்தில் உயர்வு, குடும்ப வாழ்க்கை, தேக ஆரோக்யம் முதலிய எல்லா விவகாரங்களிலும் அதிக நம்பிக்கை இருக்கும். இம்மாதத்தில் செலவு அதிகரிக்கும். ஒரு உறவினர் அல்லது நண்பரால் ஏமாற்றம் ஏற்படும். இதுவரையில் கைகூடாத கலியாணப் பேச்சுவார்த்தைகள் திருப்திகாமாக நடக்கும். வெளிப் பழக்கங்கள் சந்தோஷகாமாக இருக்கும். பணவசதி சீக்கிரத்தில் அதிகரிக்கும்.

உத்யோகத்தில் ஏதாவது அனுகூலம் ஏற்படும். சம்பளம் தகுந்தபடி இல்லாவிட்டாலும் அந்தஸ்து இருக்கும்.

வியாபாரிகள்: ஹேஷ்யத்தில் மிதமாக இருந்தால் கொஞ்சம் வெற்றி கிட்டலாம். புது முயற்சிகளுக்கு அனுகூலமில்லை. கூட்டு வியாபாரம் சிரமப்படும்.

குதிரைப் பந்தயங்களுக்கு மாதக் கடைசி வாரம் அதிருஷ்டமாக இருக்கிறது.

14, 16, 18, 22, 27, 31 ஏப்ரல் 3, 5, 8, 9, 12 அதிருஷ்ட நாட்கள்.

மகர ராசி

உத்திராடம் 2-ம் பாதம் முதல் திருவோணம், அவிட்டம் 2-ம் பாதம் முடிய

ஏப்ரல் 1-ம் தேதியில் குரு மேஷத்திற்குச் செல்வதாலும் ராசியதிபதி சனி அநுகூலமான நவாம்சத்திலிருப்பதாலும், இம்மாதம் முக்கியமானதாக இருக்கும். இது வரையில் முடியாதிருந்த பல விவகாரங்கள் முடியும். அக்கம் பக்கத்திலிருந்து ஆதரவு கிடைக்கும். சகோதரிகள் அல்லது உறவினர்களிடமிருந்து உதவி கிடைக்கும். பிரயாணம், தத்வ விசாரங்கள், ஆத்மார்த்த விஷயங்கள், யாத்திரை, முதலியனவற்றுக்கு இம்மாதம் அநுகூலமாக இருக்கிறது. இலக்கிய சேவைக்கும் எழுதியவற்றைப் பிரசுரிப்பதற்கும் இம்மாதத்தில் வசதிகள் கிடைக்கும். முதலீடு போடுவதற்கு இரண்டாம் பாதி அநுகூலமாக இருக்கும். பண முடை இரண்டாம் பாதியில் அவ்வளவாக நிர்ப்பந்தம் இராது. பண நிலைமை போன மாதத்தைவிட திருப்திகரமாக இருக்கும். தேக நிலைமை சீர்படும். பதட்டமின்றி நிதானமாக இருக்க வேண்டும். சில நாட்களுக்குத் தகராறுகள் இருக்கும். ஜலதோஷம் வாராமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

உத்தியோகத்தில் அதிக உற்சாகம் இருக்கும். சகபாடிகளுடனும், மேலதிகாரிகளுடனும் மோதல் கூடாது.

வியாபாரிகள்: போன மாதத்தைவிட நன்றாக இராது. வெளி நாட்டு வர்த்தகம் அதிக லாபகரமாக இருக்கும். இரண்டாம் பாதியிலிருந்து புது முயற்சிகள் ஆரம்பிக்கும்.

13, 16, 18, 24, 27, 29, 31, ஏப்ரல் 3, 5, 10, 12 அதிருஷ்ட நாட்கள்.

கும்ப ராசி

அவிட்டம் 3-ம் பாதம் முதல் சதயம், பூரட்டாதி 3-ம் பாதம் முடிய

லக்னத்தில் சுக்ரன் இருப்பதால் போன மாதத்தைவிட அதிக நல்ல பலன்கள் இருக்கும். அதிக வசதிகள் கிடைக்கும். குடும்ப வாழ்க்கை அதிக திருப்திகரமாக இருக்கும். இலக்கியத் துறையிலும் பத்திரிகைத் துறையிலும் அதிக நடவடிக்கை இருக்கும். ஏப்ரல் 1-ம் தேதியிலிருந்து குரு 3-ல் இருப்பதால் அடிக்கடி பிரயாணமும், பத்திரிகைத் தொழிலில் அபிவிருத்தியும் தூரத்தில் உறவினரிடத்தில் அநுதாபமும் இருக்கும். இம்மாதத்தில் எல்லா வழிகளிலும் செலவு அதிகமாக இருக்கும். அதிக வருமானத்தைப் பெறும் நோக்கத்துடன் இம்மாதத்தில் தொழிலில் புதிய முயற்சி எடுக்க விருப்பம் ஏற்படும். பெரியவர்களின் ஆதரவு இருக்கும். ஐந்தாவது வீட்டுக் கதிபதி நீசமாக இருப்பதால் குழந்தைகளில் ஒன்றின் நோயைப் பற்றி பெரும் கவலை ஏற்படும். வெளிப் பழக்கங்கள் போன மாதத்தைப் போலவே இருக்கும். இம்மாதத்தில் சமீப பந்துக்களைச் சந்திக்க நேரிடும். வேளா வேளைக்கு ஆகாரம் சாப்பிடாததால் ஏற்படக் கூடிய ஜீரணக் கோளாறுகளால் ஆரோக்கியம் பாதிக்கப்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். பிரசித்தி பெற்றவர்களைச் சந்திக்க நேரும். லக்னத்தில் சுக்ரன் இருப்பதால் புது வசதிகளும் கிடைக்கும். பண விஷயங்களில் உறவினர்களுடன் மனஸ்தாபம் ஏற்படலாம்.

உத்தியோகத்தில் தேக்க நிலைமை இருந்து வரும்.

வியாபாரிகள்: ஹேஷ்யங்களில் புது முயற்சிகள் வெற்றிகரமாக நடக்கலாம். நாளுக்கு நாள் அபிவிருத்தி காணும்.

14, 16, 18, 24, 27, 31, ஏப்ரல் 3, 5, 10, 12 அதிருஷ்ட நாட்கள்.

மீன ராசி

பூரட்டாதி 4-ம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய

ஏப்ரல் 1-ம் தேதி வரையில் கெட்ட பலன்களே அதிகமாக இருக்கின்றன. பண முடை, குடும்பத்திலும் வெளிப் பழக்கத்திலும் கவலை, முன்னேற்றப் பாதையில் தடங்கல்கள், வியாஜ்ஜியங்கள், உறவினர்கள் மூலம் ஏமாற்றம், வீண் முயற்சிகள், மனஸ்தாபங்கள், வாகனங்களினால் விபத்து, குடும்பத்திலிருந்து பிரிந்து இருத்தல் முதலியன நேரிடலாம். இவை குறிப்பாக முதல் பாதியில் தெரியும். பண சௌகர்யங்களுக்கு மாதக் கடைசி நன்றாக இராது. சிலருக்கு தேக நிலைமை பாதிக்கப்படும். கால் வலி, நரம்பு கோளாறு, மூளைக் கோளாறு முதலியன இம்மாதத்தில் ஏற்படலாம். கூடுமான வரையில் வியாஜ்ஜியங்களை இம்மாதத்தில் தவிர்க்க வேண்டும். பண முடை பல விதங்களில் இருக்கும். ஏப்ரல் 1-ம் தேதியிலிருந்து குரு பாக்யத்தில் இருக்கப் போவதால் அவ்வப்பொழுது பணம் கிடைக்காமற் போகாது. குடும்பத்தில் மகிழ்ச்சியிராது. மனைவி அல்லது உறவினர்களின் தேக ஆரோக்கியம் பாதிக்கப்படுவதே இதற்குக் காரணம். இம்மாதத்தில் கடல் பிரயாணத்தைத் தவிர்க்க வேண்டும்.

உத்தியோகத்தில் பழைய நிலைமையே நீடிக்கும். ஏப்ரல் 1-ம் தேதியிலிருந்து வேலை கொஞ்சம் கொஞ்சமாக அபிவிருத்தியடையும்.

வியாபாரிகள்: குஜன் 8-ல் இருப்பதால் குரு பார்ப்பதாலும், ஹேஷ்ய வியாபாரத்தில் அதிக கவர்ச்சி ஏற்படும். ஆனால், அத்தகைய நடவடிக்கைகளில் இருக்கக் கூடிய ஆபத்தைக் கவனிக்க வேண்டும். குஜன் அஷ்டமத்தில் இருப்பதைக் கவனிக்க வேண்டும்., இது அபாயகாமானது. கூட்டு வியாபாரம் வெற்றிகாமாக இராது.

14, 16, 18, 21, 22, 24, 27, 29, 31, ஏப்ரல் 5, 11, 12 அதிருஷ்ட நாட்கள்.

★

ஸ்ரீ பி. வி. ராவ்

நெ. 5, வாசுதேவபுரம், ஐஸ்ஹவுஸ் ரோடு, திருவல்லிக்கேணி, சென்னை, 5.

உத்தம புருஷன்

★

ஸுசீலா

1. கண் இழந்தேன்

எங்களுக்கு மணமாகி மூன்றாண்டுகள் கழிந்துவிட்டன. ஆயின் மணமாகி மறுநாள் வேற்று புருடரான அவருடன் புறப்பட்ட நான் இன்றுவரை பிரியவில்லை! ஒருநாள்கூட சண்டை என்பதையே அறியோம் நாங்கள். என் மாமா தன் மகனுக்கு கல்யாணம் என்று அழைத்துப்போக வந்தார். எனக்கு போக மனமில்லை. ஆனால் என் தாய்தந்தையர் என்னை பார்க்க ஆவலாயுள்ளனர். கண்டிப்பாய் கூட்டிவர கூறினர் என கூறவும் அவரும் என்னை போய் பார்த்து வா என சொல்லவும் நான் தட்டமுடியாமல் அவருடன் புறப்பட்டு போனேன் ஒருமாத காலம் தங்கிவர. போனால் இங்கிருந்து (கல்கத்தாவிலிருந்து) அவ்வளவு தூரம்; அதுகூட தங்காமல் வர முடியுமா? மாமா மகன் மணவினை பார்த்துக்கொண்டு தாய்வீடு சேர்ந்தேன். அங்கு போய் இரு வாரங்கள் இருக்கும்; ஒருநாள் இடியும் மின்னலுமாய் மழை பெய்தது. வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தேன் நான். தோன்றி மறையும் மின்னலைப் பார்த்துக்கொண்டிருந்தேன். ஐயோ! அம்மா! என்றலறிவிட்டேன். என்ன; என்ன என்று பதறி ஓடிவந்தாள் அவள். விழித்தபடியிருந்தேன். மின்னலும் காணவில்லை;என் தாயும் தெரியவில்லை. ஒரே இருட்டு தெரிந்து கொண்டேன் என் விழிகள் பறிபோயின. அடி பாவி பெண்ணே! என்று என் தாயும் பிரலாபித்தாள்! என்ன செய்வது! என் தந்தை பெரிய வைத்தியர்களிடம் யோசனை கேட்டார்; என் தாயார் எத்தனையோ தெய்வங்களை வேண்டிக்கொண்டாள். இதனில் மீண்டும் நாட்கள் கழிந்தன. ஒருநாள் என் சகோதரி அக்கா, அத்தான் உனக்கு கடிதம் எழுதியிருக்கிறார் என்று படித்தாள். மற்ற நாட்களாயிருப்பின் எனக்கு வந்த கடிதத்தை நான் படிக்கவிடுவேனா! “நீ குறிப்பிட்டுச் சென்ற நாள் கழிந்துவிட்டது உடனே புறப்பட்டு வா” என்பதுதான் அதன் சாராம்சம். இதற்கு என்ன பதில் யார் கூறுவோம்? என் தந்தையர் மட்டில் இன்னும் இரண்டு மாத காலம் பிரபல வைத்தியர்களைக் கேட்டு ஆலோசித்து பிறகு அவருக்குத் தெரிவிக்கலாம் என்று கூறவே கடிதத்திற்கு பதிலே எழுதவில்லை. என் மனசாட்சி உறுத்திற்று; பின் வந்த கடிதங்களுக்கும் பதிலே எழுதவில்லை. உள்ளத்தை விள்ளும் வேதனை கடைசியில் உண்மையை என் சகோதரி மூலம் கடிதத்தில் எழுதி தெரிவித்துவிட்டேன்.

2. இதயராணி

சௌதாமினியிடமிருந்து கடிதமே வரவில்லை; தபால் என்ற குரல் கேட்டதும் ஓடிப்போய் வாங்கினேன். யாருடையதோ கையெழுத்து; கிழித்தேன், அன்பரே.. என்று ஆரம்பித்ததும் ஆவலுடன் படித்தேன்; இனி என்னை மறந்து விடுங்கள் என்று அவள் கண் இழந்த விவரங்களை எழுதி கடைசியில் முடித்திருந்தாள். தீயை மிதித்தவனைப்போல் பதறினேன். அவள் என் கண்முன் தோன்றினாள். “தாங்கள் எவ்வளவு அன்பாக இருப்பினும்; நான் கண் இழந்துபோயின் காப்பாற்றுவீர்களோ? உலகிலே அன்பெல்லாம் மற்றொருவருக்குப் பயனாய் இருக்கும்மட்டில்தான்” என்றாள். விளையாட்டாகஒருநாள். விளையாட்டே உண்மையாய்விட்டது. அவள் கண் இழந்தால் என்ன? என்னை இவ்வுலகில் விட்டுப் பிரிக்காததற்கு இறைவன்பால் நன்றி செலுத்துகிறேன். என்றுமவள் என் இதயராணி; அன்று அவள் எனக்கு பணி செய்தாள். எனை நம்பினாள்; என் கண் இழந்தால் அவள் கைவிடுவளோ! மாட்டாள். ஆகவே அவளை நான் வைத்து ஆதரிப்பேன். அவளை மறந்துவிடுவதாம் “அன்பு செலுத்த மற்றொருவளை” கொள்ளுங்கள் என்று கூறியிருக்கிறாள். அவளால் எனக்கு பயனில்லையாம். ஒரே நிமிடம் உள்ளம் திடமுற்றது. அவளை அழைத்துவர இரண்டு நாள் லீவில் ஊருக்குக் கிளம்பினேன்.

3. காதற் கணவன்

“சௌதா” யார்? என்றேன். “நான் தெரியவில்லையா?” என்றார். நான் என்றால் யார்? எனக்கு கண்ணிருந்தால் நான் தெரிந்துகொள்ள மாட்டேனா என்றேன். கையை பிடித்துக்கொண்டு நான்தான் என்றார். உங்கள் குரல் தெரிந்துவிட்டது. வளையலிலா கரங்கள்; கண்களில் நீர் பெருக, என்னை பார்க்க வந்தீர்களா என்றேன். இல்லை உன்னை அழைத்துச் செல்ல வந்தேன் என்றார்! என்னை அழைத்துச் சென்றால் உங்களுக்கு துன்பமேயன்றி இன்பமில்லை என்றேன். அதைப் பற்றி யோசனை இல்லையென்றார். என் தாய்தந்தையர் எவ்வளவோ சொல்லியுமவர் என்னுடன் எங்கள் வீட்டு சமையற்காரியை எனக்குத் துணையாக அவர்கள் அனுப்ப கூட்டிக் கொண்டு புறப்பட்டார். கண் தெரியா என்னை கைப்பிடித்து ரயில் ஏற்றி இறக்கி, கல்கத்தாவும் வந்துவிட்டார். பகலெல்லாம் உழைக்க செல்லுவார்; எனக்குத் துணையாகவும் என்னை கண்காணிக்கவும் சமையற்காரி இரவில் இன்மொழி கூறி எனக்குத் துன்பமே தோன்றாமற் செய்துவிடுவார். என் இன்ப வாழ்வில் ஒன்று கூற மறந்துவிட்டேன்.

நாங்கள் இங்கு கல்கத்தா வருமுன் மதராஸில் அவர் தாய் வீட்டில் இறங்கியிருந்தோம். கண் இழந்த மருமகளைக் கண்ட மாமி உள்ளங் குமுறி விம்மினாள். அன்று இரவு ஏதோ பேச்சு குரல் கேட்க நான் கவனித்தேன்; என் மாமி தன் மைந்தனிடம் என்னால் அவருக்குத் துன்பம் என்றும்; மறு பெண் கொள்ளுமாறும் கூறிக்கொண்டிருந்தாள். அவர் மறுத்து மறுமொழி கூறிக்கொண்டிருந்தார். மறுநாள் மாமி என்னிடம் வந்து அவர் இல்லாத சமயம் பார்த்து என் கணவரை மறுவிவாகம் செய்துகொள்ளும்படி கூற கூறினாள். நான் அவர் அவ்வாறு செய்துகொள்வது எனக்கு பரிபூரண சம்மதமே என்று உறுதி கூறினேன். நான் அவர் வந்ததும் நான் எவ்வளவு எடுத்துக் கூறியும், என்னை தாய்வீட்டிலேயே விட்டு விட்டு செல்லும்படி கூறியும் மறுத்து அழைத்துச் சென்றார். நாட்கள் உருண்டன இரவும் பகலும் எனக்கேது தெரியும்; இது எந்த வருடம் என்றேன் 1948–என்றார் அவர்; மணமாகி ஐந்து ஆண்டுகள் ஆய்விட்டன. நான் கரு தறித்தேன்.

4 தாயின் சூழ்ச்சி

உடனே புறப்பட்டு வரவும் என்ற தந்தி என் தந்தையிடமிருந்து வந்தது. என் மனைவியின் இளைய சகோதரன் டில்லியில் வேலையாயிருக்கிறான். அவன் சௌதாவை பார்த்துவிட்டு ஒரு மாத ரஜாவில் ஊருக்குச் செல்ல வந்திருந்தான். அவனும் அன்று புறப்படுவதாயிருந்தான்; ஆகவே தந்தி வரவும் என்னுடன் யாருக்கு என்ன உடல்நலக் குறைவோ? அன்று என்னுடன் புறப்பட்டான். சௌதாவை சமையற்காரியிடம் கவனித்துக் கொள்ளும்படியும், போய் நான் விவரம் தெரிவிக்கிறேன் என்றும் புறப்பட்டேன். நானும் என் மைத்துனனும் ஊர் வந்து சேர்ந்தோம். வீட்டில் வாயில் புறம் வாழைக் கம்பங்கள் நாட்டி மண வீடுபோல் காட்சியளித்தது. நான் ஆச்சரியப்பட்டுக் கொண்டே வீட்டினில் நுழைந்தேன். என் தாய் மலர்ந்த முகத்துடன் வா “ரகு வீரா” என்றாள். நான் மண ஏற்பாடுகள் நடப்பதைப் பார்த்து யாருக்கு மணவினை என்றேன். அவள் முதலில் உணவருந்தி வா என்றாள். அவ்வாறே நான் குளித்து உணவருந்தி வந்தேன். தகப்பனார் “ரகு வீரா” என் பேச்சை தட்டாதே என்ற பீடிகையோடு ஆரம்பித்தார். என்ன என்றேன்? கலவரத்துடன். கண்ணில்லா பெண்ணுடனிருந்தாலும், உனக்கு பணி செய்ய ஒருவள் வேண்டாமா? இதன் விஷயமாய் உன் மனைவியோ உன் மறு மணத்திற்கு பரிபூர்ண சம்மதம் அளித்திருக்கிறாள் என்றார். இருதலைக் கொள்ளி எறும்பின் நிலையானேன் நான். ஏற்பாட்டை செய்துகொண்டு நான் மறுப்பதால் என் வீட்டார் அவமானப் பட்டு விடுவர். இந்நிலையில் கதி கலங்கினேன் நான். பெண் ஏழை வீட்டாள் என்றும், எனக்கு அவள் மறுமனைவி (மனைவியிருக்கையில்) என்பது அறிந்தும் சம்மதப்பட்டிருக்கிறாள் என்று கூறினர்.

இந்நிலையில் என் மைத்துனன் நடப்பதை அறிந்து என்னிடம் வந்து, என் நிலை நோக்கினன். என் தர்மசங்கட நிலையையும், உள்ள குமுறலையும் எடுத்துக் கூற. அவன் அந்த யுக்தி கூறி என்னை கார்த்தனன். மாப்பிள்ளை அழைக்கும் நேரம் வந்தது. அவன் முன்பின் கண்டிராத அக் கன்னியைக் கைபிடிக்க துணிந்தனன். மண பலகையில் அலங்கரித்துக்கொண்டு வந்தமர்ந்தான் அத் தயாகி. இதைக் கண்டு என் தாய் என்னிடம் வந்து கேட்க நான் கோபமாக நான் எதிர்க்க, பேசாமல் சென்று விட்டனர். எப்படியோ அவமானமின்றி மணம் முடிந்தது. அவன் தன் மனைவியுடன் தாய்தந்தையரிடம் ஆசி பெற சென்றனன், நான் ஊர் திரும்பினேன்.

5 மீண்ட ஒளி

எங்கு சென்றீர்? என்ன விசேஷம் என்று கேட்ட என்னிடம்,

என்னை ஒன்றும் கேட்காதே சௌதா என்றார். யாருக்காவது உடல் நலமில்லையா? என்று கேட்டாலும், யாவரும் சுகமே என்றார். இப்படியிருக்கையில் என் விலாசத்திற்கு ஒரு கடிதம் வந்ததாய் அடுத்த வீட்டு பையன் கொடுக்க அதை அந்த சமையற் கார அம்மாள் படித்தாள். என் சகோதரன் இங்கு வந்திருந்த வன் ரவிசந்திரன். தன் ஆச்சரிய திருமணத்தையும், அங்கு நடந்த விவரங்களையும் கூறியிருந்தான். இப்பொழுது தெரிகிறது அவர் ஏன் போய்வந்த விவரத்தை கூற வில்லையென்று? கூறினால்கூட நான் மனம் வருந்துவேன் என்று தான். இவரைப்போன்ற புருஷோத்தமரை நான் அடைந்தது என் "தவவினைப்பய"ன்தான்.

என்னுடம்பை என்னவோசெய்தது. விவரிக்க முடியா வேதனை. அவர் ஆபீஸிலிருந்து வந்ததும் கூறினேன். அவர் புறப்படு என்று ஆஸ்பத்திரி அழைத்துச் சென்று டாக்டரிடம் விசேஷ கவனம் எடுத்துக்கொள்ள கூறிவிட்டு வந்தார். நீண்ட நேர துன்பத்திற்கு பிறகு சாந்தி. அந்த குரல் என்னை இன்ப நிலையில் உயர்த்தியது. ஆண் குழந்தை என்றனர் யாரோ. வீட்டிற்கு வந்தேன். அவன் என் குழந்தை எப்படியிருக்கிறானோ! அவன் உருவம் என் மனக்கண்ணால் கற்பித்துக் கொண்டேன். அவனை கவனித்துக்கொள்ள தனியாக ஓர் ஆள் போடப்பட்டார். அவர் அவனை எடுத்து என் கையில் கொடுப்பார் கொடுக்கும்நிலையறிந்து நானும் வாங்கி அவனை சீராட்டுவேன். சிறு குழந்தை இவன் நாளை பெரியவனாயின் "குருட்டு தாயிற்கு" பிறந்தவன் என்று எண்ணுவனே என்று ஏங்கி நான் அழ ஆரம்பித்துவிட்டேன். காரணம் வினவிய அந்த உத்தமர் எவ்வளவோ தேறுதற் கூறினார்.

ஒருநாள் வந்தார். என் சிநேகிதர் ஒருவர் கண் வைத்தியராய் இருக்கிறார். அவரிடம் அதிர்ச்சி வைத்தியம் "மின் ஒளியை" கண் மீது செலுத்தி வரவழைக்கலாம் என்று கூறுகிறார். வருகிறாயா? என்றார். இழந்த கண் மீளுவதாவது?!. சரி என்று அவருக்காக சம்மதித்தேன். இது என்ன ஒளி கண்ணை விழித்தேன். எதிரிலுள்ள பொருள்கள் தெரிந்தது. நான் அந்த அறை அதன் நடுவில் அதோ அவர், அவர் கையில் ஓராண்டு நிறையப் பெற்ற அப் பாலகன். சுவர்க்க இன்பம் இதுவே. கண்ணிழந்தாள், கண் பெற்றேன். அம்மா என்று தாவினான் அச் சிறு பாலகன். என் மனதில் கற்பித்த உருவங்களைக் காட்டிலும் அவர்கள் அதிக அழகுள்ளவர்களாக எனக்குத் தோன்றினர்.

அவர் கூறினார். அஷ்டமி சந்திரன் வீசும்பொழுதும் மாநிலத்துக்கு ஒளியுண்டு. ஆயினும் சந்திரன் குறையுள்ளவனாயிருக்கிறான். பௌர்ணமி சந்திரன் பரிபூர்ணமாயிருப்பதோடு காண்பவரைப் பரவசப்படுத்தி நிலவைப் பொழிகிறான்."

என்னே இந்த உத்தம புருஷரின் இலக்கிய கற்பனை!

சிறந்த கூந்தல் உணவு

உங்கள் சரீரத்துக்கு நல்ல உணவு அவசியமானது போல் கூந்தலுக்கும் நல்ல உணவு அவசியமாகும் உங்கள் கூந்தலின் வசீகரம் நீங்களுபயோகிக்கும் கூந்தல் தைலத்தைப் பொறுத்ததே.

காமினியா ஆயில்
(ரிஜிஸ்டர்ட்)
மூளைக்குக் குளிர்ச்சியூட்டி கூந்தல் வளர அவசியமான பலவித சத்துக்கள் சேர்ந்தது மயிர்க்கால்களுக்கு அவசியமான போஷாக்கு அளிக்கையில் ஆரோக்யமாக வளரவும் உதவுகின்றது. பொடுவன்களைப்போக்கி கூந்தல் உதிர்வதை நிறுத்தும். ஆயிரக்கணக்கானவர்கள் காமினியா ஆயில் உபயோகித்துப் புகழ்ந்துள்ளனர் இன்றே பரீக்ஷித்து திருப்தி அடையுங்கள் எல்லா ஸ்டோர்களிலும் விற்கப்படுவது. எப்பொழுதும்உபயோகியுங்கள்.

ஆடோ டில்பஹார் (ரிஜிஸ்டர்ட்)
இணையற்ற வாசனை நீடித்த நறுமணம். தபால் சார்ஜிற்கு 4 அணு ஸ்டாம்பு அனுப்பி சாம்பிள் பெறுங்கள்.

Sole Agent:—ANGLO INDIAN DRUG & CHEMICAL CO., 285, Jamma Musjid P. O. Box 2085, Bombay 2.

பிரசுரமான கிருதிகள்

★

"சுதேசமித்திரன்" வாரப்பதிப்பில் வெளியான கீர்த்தனைகள் கீழ்க்கண்டுள்ள விலைக்கு கிடைக்கும்:—

காயகசிகாமணி அரியக்குடி ராமானுஜய்யங்காரால் ஸ்வரப்படுத்தப்பட்டவை

1.	அருணாசலக் கவிராயர் கீர்த்தனை 32-க்கு	ரூ.	8 0 0
2.	திருப்பாவை 30 பாட்டுக்கு	ரூ.	7 8 0
3.	பூச்சி ஐயங்கார் ஜாவளிகள் 24-க்கு	ரூ.	6 0 0
4.	ஸ்ரீ சியாமா சாஸ்திரி க்ருதிகள் 12-க்கு	ரூ.	3 0 0

செம்மங்குடி ஸ்ரீ ஸ்ரீனிவாஸய்யரால் ஸ்வரப்படுத்தப்பட்டவை

1.	ஸ்ரீ ப்ரும்மேந்திரர் க்ருதிகள் 15-க்கு	ரூ.	3 12 0
2.	ஸ்வாதித் திருநாள் 30-க்கு	ரூ	20 0 0

மேற்கூறியுள்ளவை புத்தக ரூபமாக இல்லை. தனித்தனி தாளாக உள்ளன. ஒரு தாளில் ஒரு கீர்த்தனைதான் இருக்கும். தபால் செலவு பிரத்தியேகம்.

மானேஜர்.

சுதேசமித்திரன் புத்தகசாலை,
மவுண்ட்ரோடு. சென்னை.



பத்மபுரி ஜமீன்தாரான பத்மநாபன் என்பவர் தனது மனைவியான பத்மினியுடன் தனது பெரிய பத்மாராகம் என்னும் பெரிய மாளிகையில் வசித்து வந்தார்.

பத்மராக மாளிகையில் பத்மினிக்குக் கூடமாட உதவியாக வேலைசெய்துகொண்டிருந்தாள் சாருகேசி என்பவள். சாருகேசி ஜமீந்தாருக்கு தூரத்து உறவு முறை கொண்டவள். அவள் நல்ல வெளுத்தநிறமும் அழகும்கொண்டவள். அவளுக்கு தன்னைவிட அழகில் குறைந்தவளான பத்மினி ஜமீந்தாரை மணந்து ஜமீந்தாரிணியாக இருக்கத் தான் மட்டும் அவளுக்கு வேலை செய்து கொண்டு கிடக்க வேண்டி இருக்கிறதே என்கிற எண்ணம் அதனால் அவளுக்கு பத்மினி மீது அசாத்திய பொறாமையாக இருந்தது. பத்மினி கபடு சூது தெரியாதவள். வெள்ளையுள்ளம் படைத்தவள். சாக்ஸப் பேச்சும் அதீதமான சாமர்த்தியங்களும் தெரியாதசாத்வியாகஇருந்தாள். அதனால் அவள் சாருகேசியின் எண்ணத்தைத் துளிக்கூடத் தெரிந்துகொள்ளாமல் அவளை மிகவும் நம்பினதுடன், அன்பாகவும் இருந்தாள்.

சிறிது நாளில் ஜமீந்தாரின் குலத்தைப் பிரகாசிக்கச் செய்ய பத்மினிக்கு ஒரு குமாரன் பிறந்தான். அவனுக்குப் பிரபாகரன் எனப் பெயரிட்டு அருமையாக வளர்த்து வந்தனர். ஜமீந்தார் அவனுக்குப் படிப்புச்சொல்லிக் கொடுத்ததுடன் பல தினுசு விளையாட்டுக்களையும் பழக விட்டார். குதிரையேற்றமும் பயின்று வைத்தார்.

பிரபாகரனுக்கு பத்து வயதாக இருக்கும்பொழுது பத்மினியிடம் அதுவரையில் ஆசையுடன் இருந்து வந்த ஜமீந்தார் இரகசியமாகச் சில தகவல்களைச் சொன்ன சாருகேசியின் பேச்சைக் கேட்டு பத்மினியை வெறுக்க ஆரம்பித்தார். ஆனால் ஜமீந்தாரின். மாறுதலுக்குக் காரணம் தெரியாத பத்மினி மனவேதனையுடன், தானாக அதைப்பற்றி அவரை விசாரிக்கக்கூடாதென்று ஒதுங்கியே நடந்து வந்தாள்.

மேலும் ஒரு வருஷம் கடந்தது. ஒரு நாள் சாருகேசி இரவில் ஜமீந்தாரிடம் வந்து "எனது பேச்சில் உங்களுக்கு சிறிதாவது அவநம்பிக்கை இருக்கணும் இப்பவே நீங்கள் உங்கள் பத்மினியின் அறையில் சென்று பாருங்கள் உங்கள் சந்தேகம் தீரும் அங்கு பத்மினியுடன் ஜமீன் காரியதரிசி சாகுஸ்தர் இராவிட்டால் என்னை இந்த மாளிகை விட்டே விரட்டி விடுங்கள்" என்று கூறினாள்.

ஜமீந்தார் மிகுந்த கோபத்துடன் பத்மினியின் அறைக்குச் சென்றார். சிறிது திறந்தே இருந்த கதவின் வழியாக உள்ளே பார்த்தார். உள்ளே கட்டிலில் பத்மினி படுத்திருக்க காரியதரிசி சாகுஸ்தர் பக்கத்தில் குனிந்து பத்மினியின் முகத்தைப் பார்த்தபடி நின்றுகொண்டிருப்பதைக் காணவும் 'சாருகேசிநிஜத்தையே கூறி இருக்கிறாள். அவள் மிகவும் நல்லவள்' என்று நினைத்தார். உடனேயே அவருக்கு தனது உத்திரவு இல்லாமலும், தனக்குத் தெரியாமலும் காரியதரிசி சாகுஸ்தர் பத்மினியின் அறைக்குள் தைரியமாக இருப்பதைக் கண்டதும் மனம் கொதித்தது. உடனேயே உள்ளே சென்ற ஜமீந்தார் அடே துஷ்டா என்று சாகுஸ்தன் குடுமியை இருகப் பிடித்தார்.

வெலவெலத்துப் போய்த்திரும்பின சாகுஸ்தர் ஏதோ கூற வாய் திறக்கவும் "பேசாதே" என்று கர்ஜித்தார் ஜமீந்தார். பிறகு கட்டிலைக் கோபத்துடன் திரும்பிப் பார்த்தார். ஆனால் பத்மினி மூர்ச்சையாகிக் கிடந்தாள். கட்டிலில்.

ஜமீந்தார் அந்தக் கட்டிலைத் தூக்கும்படி சாகுஸ்தனுக்கு உத்தரவிட்டார். பிறகு அவரும் கட்டிலின் மறுபுறத்தைப் பிடித்துக் தூக்கிக்கொண்டு அந்த மாளிகையில் யாரும் அறியாதபடி யாருக்குமே தெரியாத பாதாளச் சிறையில் கொண்டுபோய் வைத்துக் கதவைப் பூட்டினார். பிறகு சாகுஸ்தனையும் மற்றொருபாதாளச் சிறைக்குள் தள்ளிப் பூட்டிக் கொண்டு சென்று விட்டார். சாகுஸ்தன் என்ன கூப்பிட்டும் அவர் திரும்பிக் கூடப்பாராமல் சென்று விட்டார்.

பாவம் பத்மினிதன்னைத்தான் என்றுமே கண்டிராத பாதாளச் சிறையில் சிறைப்பட்டிருப்பதை துளிக்கூட அறியாமல் மூர்ச்சையாகிக் கிடந்தாள்.

மறுநாள் பொழுது விடிந்தது. தூக்கத்திலிருந்து எழுந்துவந்த பிரபாகரன் தனது தாயைக் காணாமல் அழுதான். ஜமீன்தார் "முதல்நாள் இரவு வேடிக்கையாக தானும் பத்மினியும் கடலில் குளிக்கச் சென்றதாகவும், ஆனால் அவன் அம்மாவை ஒரு பெரிய அலை வந்து வெகுதூரம் கண்ணுக்குத் தெரியாமல் அடித்துக்கொண்டு போய்விட்டதாகவும், அதனால் இனி அவன் அம்மாவை என்றுமே பார்க்க முடியாதென்றும், ஆனால் அந்த விஷயத்தை அவன் வெளியில் யாரிடமும் சொல்லக் கூடாதென்றும்" கூறி சமாதானம் செய்தார்.

அடுத்த மாதமே ஜமீன்தார் மாளிகையிலேயே இருந்துவந்த சாருகேசியை விவாகம் செய்து கொண்டார். அழகிய சாருகேசியிடம் ஜமீன்தாருக்கு மிகவும் அன்பு ஏற்பட்டுப்போயிருந்தது.

சாருகேசிக்கு ஜமீன்தார்மேல் அபார ஆசை ஏற்பட்டிருந்ததே தவிர ஜமீன்தார் குமாரனான அழகிய சிறுவன் பிரபாகரன் மீது அவளுக்கு ஆசை ஏற்படவில்லை. பிரபாகரன் எவ்வளவோ புத்திசாலியாகவும் சமத்தாகவும் இருந்தும்கூட சாருகேசிக்கு ஏனோ அவனைப் பிடிக்கிறதே இல்லை. நான்கு வருஷங்களுக்குப் பிறகு சாருகேசி கர்ப்பவதியானாள். அப்பொழுது அவளது மனம் நமக்குப் பிறக்கப்போகும் குழந்தையை நாம் என்னதான் உயர்வாக வளர்த்தாலும் மூத்தபிள்ளையான அந்தப் பிரபாகரன் தானே பிற்காலத்தில் பத்மபுரி ஜமீன்தாராக வரப்போகிறவன் என்பதை நினைக்க அவளுக்கு ஆதிகாலத்தில் ராமாயணத்தில் தசரதரின் இளைய மனைவியான கைகேயிக்கு இருந்ததைப் போன்ற அசூயை ஏற்பட்டது. கைகேயி மாதிரி சாருகேசியும் பிரபாகரனை எப்படியாவது தொலைத்துவிடவேண்டும் என்று தீர்மானித்துக்கொண்டாள்.

அன்று பிரபாகரனுக்கு பதினைந்தாவது வயது பிறந்த நாள் வந்தது. அந்தப் பிறந்த நாளுக்காக ஜமீன்தார் பிரபாகரனுக்கு உயர்ந்த ஆடைகளை வாங்கிக் கொடுத்ததுடன் அநேக விளையாட்டு சாமான்களையும் வாங்கிக்கொடுத்தார். பிரபாகரன் அன்றுமாலைதகப்பனார்வாங்கிக் கொடுத்த உயர்ந்த ஆடைகளை அணிந்து கொண்டு தனது பாலம் என்னும் குதிரை மீது ஏறிக் கொண்டு பத்மபுரியைச் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டான். வழியில் ஆலையம் இருப்பதைக்

ஆபீஸ் ஸ்தாபிதம் 1924.

பிரபல ஜோதிஷர்

★

மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர் ஒரு வருஷ பலன் மாதவாரி எழுத ரூ 5 ஆருடம் 3 கேள்விகளுக்கு ரூ 2 ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை

★

பண்டித காழியூர்

ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார்,

தபோநிதி

தியாகராய நகர், மதராஸ் 17.

தபால் பெட்டி 1417

பாத்ருடுவின் "பால சஞ்சீவினி" (Regd.)

Phone: 85254.

குழந்தைகளின் சுரம், குளே ஜுரக்கட்டி வியாதிகளைச் சொற்ப காலத்தில் நிச்சயம் குணமளிக்கும் சிறந்த மருந்து இது ஒன்று தான் அசல் விஜயநகரம் மருந்து. போலிகளைக்கண்டு ஏமாறுதீர்கள்.

Dr. பிள்ளா பாபய்யா பாத்ருடு & பிரதர்,

19, தெற்கு மாட வீதி, மயிலாப்பூர்.

கும்பகோணம் கிளை:— 7 சாரங்கபாணி கோவில் கீழ வீதி.	திருச்சி கிளை:— 15. புகழிய பிள்ளை தெரு, தெப்பக்குளம் போஸ்ட்



ரிஸர்வ் பாங்கி (சென்னை) யைச் சேர்ந்த ஸ்ரீ டி. கே. ராமசுப்ரமணியன் பம்பாய்க்கு மாற்றப்பட்டதை முன்னிட்டு அவருக்கு அளிக்கப்பட்ட பிரிவுபசாரத்தின்போது எடுக்கப்பட்ட படம்.

...ராணிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஸ்ரீமதிகள் சூர்ய குமாரி, ஹேம மாலினி, லலிதா ருத்ரா, லீலா பகவந்தராஜ்.



இந்திய கிரிக்கட் கண்ட்ரோல் போர்டின் போட்டோக்காரரான ஸ்ரீ எம். எஸ். ஆராவமுது. இந்திய கிரிக்கட் கோஷ்டியின் அடுத்த இங்கிலாந்து சுற்றுப் பிரயாணத்தைப்பற்றிப் படமெடுக்க சீக்கிரத்தில் பம்பாயிலிருந்து புறப்படுவார்.

சுதேசமித்திரன் புத்தகசாலை

விக்டரி ஹவுஸ் :: மவுண்ட்ரோட் :: சென்னை.

அடியிற்கண்ட ரயில்வே பிளாட்பாரங்களில் எமது புத்தகசாலைகள் இருக்கின்றன.

ரயில்வே ஸ்டால்கள் :

1.	பெங்களூர் க-மெண்ட்	17.	ராமனதபுரம்
2.	செங்கற்பட்டு ஜங்.	18.	ரெய்ச்சூர்
3.	கோயமுத்தூர் ஜங்.	19.	சேலம் மார்க்கெட்
4.	கடலூர் N. T.	20.	ஸ்ரீ வைகுண்டம்
5.	திண்டுக்கல் ஜங்.	21.	தாம்பரம்
6.	ஈரோடு ஜங்.	22.	தென்காசி ஜங்.
7.	கரூர்	23.	திருநெல்வேலி ஜங்.
8.	காசரகாட்	24	திருப்பதி
9.	கும்பகோணம்	25.	திருப்பூர்
10.	மதராஸ் பீச்	26.	திருத்துறைபூண்டி ஜங்.
11.	மதுரை ஜங்.	27.	திருவாரூர் ஜங்.
12.	மானமதுரை ஜங்.	28.	திருச்சி கோட்டை
13.	மாயவரம் ஜங்.	29.	திருச்சி ஜங்.
14.	ஓலவக்கோடு	30.	தூத்துக்குடி
15.	பழனி	31.	விழுப்புரம் ஜங்.
16.	பொள்ளாச்சி ஜங்.	33.	விருத்தாசலம் ஜங்.
		32.	விருதுநகர் ஜங்.

அடியிற்கண்ட இடங்களில் கூடிய சீக்கிரம் ஸ்டால்கள் திறக்கப்படும்.

நெல்லூர் - குத்தி (Gooty)

மேற்படி இடங்களில் எல்லாவிதமான இங்கிலீஷ், தமிழ் புத்தகங்களும, தினசரி, வாரப பத்திரிகைகளும், அமெரிக்கா, இங்கிலாந்து முதலியஇடங்களில் பிரசுரமாகும் வாரப பத்திரிகைகளும், மாதப் பத்திரிகைகளும் கிடைக்கும்.

மானேஜர்,

சுதேசமித்திரன் புத்தகசாலை,

விக்டரி ஹவுஸ், மவுண்ட் ரோட், சென்னை.

Published by S. Chakrapani Iyengar at the "Swadesamitran" Press Victory House Mount Road, Madras. Editor C. R. Srinivasan B. A.



கண்டதும் குதிரையை விட்டிறங்கி ஆலயத்திற்குள் சென்று ஸ்வாமியை வணங்கி விட்டுச் சென்றான். அப்பொழுது மாளிகைக்கு அடிக்கடி வந்து போகும் ஒருவன் பிரபாகரன் எதிரில் வந்து "பிரபாகரா அதோ அந்த வீட்டில் ஜமீந்தார் வந்திருக்கிறார். அவர் உன்னை அழைத்து வரச் சொன்னார்" என்று சொல்லி குதிரையின் கடிவாளத்தைப் பிடித்துத் திருப்பி பிரபாகரனை அழைத்துச் சென்றான். குறித்த வீட்டிற்கு முன் பிரபாகரன் குதிரையை விட்டு இறங்கி உள்ளே போனான். பின்னாலேயே சென்ற ஆள் ஒரு கைகுட்டையை எடுத்து திடீரென்று பிரபாகரன் முகத்தை அழுத்தி மூடினான். "ஆ" வென்று கத்தித் திமிறின பிரபாகரன் உடனேயே மயக்கமடைந்து துவண்டு சாய்ந்து விட்டான். உடனே அந்த ஆள் பிரபாகரனின் மேல் சட்டையை மட்டும் கழற்றி விட்டு அவனை ஐந்தடி நீளமும் இரண்டடி அகலமும் உள்ள ஒரு கருப்புப் பெட்டிக்குள் கிடத்திப் பூட்டிவிட்டான். பிறகு வாசலிலிருந்த குதிரையைக் கொல்லைபுறத்தில் கொண்டு கட்டி விட்டு பிரபாகரனைக் கிடத்தி இருந்த பெட்டியையும் அவனது மேல் சொக்காயையும் எடுத்துக் கொண்டு கடற்கரையோரமாகச் சென்றவன் பிரபாகரனின் சொக்காயை கரை மீது ஓரிடத்தில் போட்டு ஒரு பெருங்கல்லை அதன் மீது வைத்தான். பிறகு பெட்டியுடன் துறைமுகத்தை அடைந்து அரை மணி நேரத்திற்கெல்லாம் புறப்பட இருந்த கப்பலில் ஏறிவிட்டான்.

கப்பல் துறைமுகத்தை விட்டுப் புறப்பட்டு விட்டது. அர்த்த இராத்திரியில் கப்பல் கொந்தளிக்கும் கடலின் நடுவில் அமைதியாகப் போய்க் கொண்டிருந்தது. அப்பொழுது கப்பலில் ஏறின ஆள் பிரபாகரனை மயங்கச் செய்து அடைத்து வைத்திருக்கும் கருப்புப் பெட்டியை ஒருவருக்கும் தெரியாமல் கடலில் தள்ளி விட்டான்.

பாபம்! பெட்டிக்குள் தன் நினைவேயில்லாமல் மயங்கிக் கிடந்த பிரபாகரன் அந்த துஷ்டன் தன்னை கப்பலுக்கு எடுத்து வந்ததையோ நடு இரவில் யாருமறியாதபடி தானிருக்கும் பெட்டியை நடுக் கடலில் தள்ளி விட்டதையோ எதையுமே அறியவில்லை.

(தொடரும்)

என்ன பேரோ ?



குழந்தைகளா ! இப்படத்தில் இருக்கும் குழந்தைகளின் பெயர்களை கண்டு பிடியுங்கள்,





170

தியாகி

★

"ஒருவன் தனக்குரியகடமைகளைத் தமோ குணத்தில் பிறந்த அவிவேகத்தால் செய்யாது விடுகிறான். மற்றொருவன் அவற்றைச் செய்தால் உண்டாகும் சரீரப் பிரயாசத்திற்கும் துன்பத்திற்கும் அஞ்சி ராஜசம் காரணமாகச் செய்யாது விடுகின்றான். அவ்விதம் விடாமல் செய்யவேண்டியதாக விதிக்கப்பட்ட உரிய கடமைகளை அபிமானத்தையும் பலனையும் விட்டுச் செய்வதே சாத்துவிகத் தியாகமாகும்" என்று முன்னே சொன்னாரல்லவா? 'அவ்விதத் தியாகமுடையவனே உண்மைத் தியாகி ஆகின்றான். அவனது அடையாளங்கள் என்னென்ன?' என்பதைக் கண்ணன் அடுத்தபடியாகத் தெரிவிக்கின்றார்.

சத்துவத்தி னின்றுந்
தவிர்ந்தபயன் சார்ந்தறிவு
தத்துவத்திற் சந்தேகந்
தானற்றான்—ஒத்துவரும்
தீவினையில் நல்வினையில்
சேர்வெறுப்பு சங்கமவை
ஓவியிருப் பெய்தும் உகந்து.

(இ—ள்)சத்துவத்தில் நின்றும்—சத்துவ குணத்தில் பொருந்தியும், பயன் தவிர்ந்த அறிவு சார்ந்து—பலனை விட்ட ஞானத்தில் நிலையாகப் பொருந்தியும், தத்துவத்தில் சந்தேகம் அற்றான்—உண்மைப் பொருளில் ஐயம் இல்லாத தியாகி, ஒத்து வரும்—(தன்னிடம்) நிகழும், தீவினையில் நல்வினையில் சேர்—தீய கருமத்திலும் நல்ல கருமத்திலும் வருகின்ற, வெறுப்பு சங்கமவை ஓவி—(முறையே) த்வேஷமும் பற்றுதலும் நீங்கியவனாய், உகந்து இருப்பு எய்தும்—ஆத்மானந்தத்தில் நிலைத்திருப்பான்.

3
ந த்வேஷ்ட்ய குசலம் கர்ம
குசலே நாநுஷஜ்ஜதே
3
த்யாகீ ஸத்வ ஸமாவிஷ்டோ
4 2
மேதாவீ சிந்நஸம்சய:

(இ—ள்)ஸத்வ ஸமாவிஷ்ட:—சத்துவ குணமுடையவனாய், மேதாவி—ஞானியாய், சிந்நஸம்சய:—சந்தேகமில்லாதவனாய், த்யாகீ—(இவ்விதம் விடும்) தியாகி, அகுசலம்—துன்பகரமான, கர்ம—கருமத்தை, நத்வேஷ்டி—பகைக்கமாட்டான். குசலே—இன்பகரமான கருமத்தை, நாநுஷஜ்யதே—விரும்பமாட்டான்.

ராமாநுஜர்:—"கருமங்களைச் சிலர் தமோகுணத்தால் செய்யாது விட்டனர். சிலர் ரஜோ குணத்தால் விட்டனர். ஸத்துவ குணத்தால் விட்டவனாக முன் சுலோகத்தில் சொல்லப்பட்ட தியாகியின் மனம் நல்லதிலும் கெட்டதிலும் கலங்காது. இதுவே இவனுக்கு அடையாளமென்று இங்கு சொல்லுகிறார்.

சத்துவ குணம் ஓங்கி, எல்லாப் பொருள்களையும் சந்தேகமில்லாமல் உள்ளபடி அறிந்து கருமங்களைச் செய்து பலன், அஹங்காரம், மமகாரம் ஆகிய மூன்றையும் விட்டவன் சுவர்க்கம் முதலிய பலன்களைக் கொடுக்கும் கருமங்களைச் செய்து சந்தோஷப்படுகிறதில்லை. ஏனெனில், அவற்றின் பலன்களை வேண்டாமென்று ஏற்கனவே விட்டுவிட்டான். அத்தகையவனுக்கு வேண்டியது பகவான் ஒருவரே. அன்றியும் தியாகி அந்தக் கருமங்களையும் கர்த்திருத்துவத்தையும் தன்னுடையவைகள் அல்ல என்றும் விட்டுவிட்டான்.

இவ்வாறே தவறான கருமம் நேர்ந்தாலும் அவனுக்கு வருத்தமில்லை. அதாவது தெரியாமல் பண்ண நேர்ந்தால் வருந்த இடமில்லை. ஆனால், தெரிந்து பண்ணக் கூடாது. தெரிந்து அவற்றைச் செய்தால், தியானத்தைக் கெடுக்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால், சாஸ்திரங்களில் சொன்ன தியாகம் (விடுவது) என்பது பலன், அஹங்கார, மமகாரம் ஆகிய மூன்றுக்கேயன்றி கருமங்களுக்கல்ல."

தியாகம் என்பது கருமத்தை அறவே செய்யாது விடுவதைக் குறிக்காது என்பதற்குக் கண்ணன் மற்றொரு காரணமும் காட்டுகிறார்.

காய முடையோன்
கருமமெல்லாங் கைவிடுத
லாய வகையங்
கரிதாகும்—ஏய
பலன்துறந்தோன் நன்றாம்
படிதுறந்தோன் என்று
நலஞ்சிறந்தோர் சொல்வர் நயந்து.

(இ—ள்)காயம் உடையோன்—உடம்பையுடைய ஜீவன், கருமம் எல்லாம் கைவிடுதலாய வகை அரிதாகும்—கருமங்கள் யாவற்றையும் அறவே விட்டிருப்பது முடியாததாகும். நலம் சிறந்தோர்—பெரியோர்கள், ஏய பலன் துறந்தோன்—(செயலுக்கு) உரிய பலன்களை விட்டவனே, நன்றாம்படி துறந்தோன் என்று—சிறந்த தியாகி என்று, நயந்து சொல்வர்—உறுதியாகச் சொல்வார்கள்.

3 4
ந ஹி தேஹப்ருதா சக்யம்
த்யக்தும் கர்மண்யசேஷத:
2 3
யஸ்து கர்மபலத்யாகீ
3 4 4
ஸ த்யாகீத்யபிதீயதே.

(இ—ள்)தேஹப்ருதா—உடம்பை எடுத்தவனால், கர்மாணி—கருமங்களை, அசேஷத:—முழுவதும், த்யக்தும்—விட, ந சக்யம் ஹி—இயலாதன்றோ? யஸ்து—எவனால், கர்ம பலத்யாகீ—கரும பலம் விடப்பட்டதோ, ஸ:—அவன், த்யாகீ இதி—தியாகி என்று, அபிதீயதே—சொல்லப்படுகிறான்.

உடம்பு உள்ளவரையிலும் உணவு முதலானவைகளையும் அவை பற்றி வரும் வேலைகளையும் எப்படி விட முடியும்? வைசுவதேவம் முதலான காரியங்களைச் செய்யாமல் ஒருவன் எப்படிச் சாப்பிடலாம்? ஆகையால், கருமங்களைச் செய்து, பலன் கர்த்திருத்துவம் பற்று மூன்றையும் விடுவதைத்தான் 'தியாகம்' என்று சாஸ்திரம் சொல்லுகிறது. (ராமா)

ராகவேந்திரர்:—"முந்திய அத்தியாயங்களில் கூறியபடி முற்றிலும் செயல் அற்றிருப்பது இயலாத காரியம் ஆகும். விதித்த கருமம் அல்லது, கடமையை அறவே விடுவது யாருக்கும் (எவ்வருணத்திற்கும் ஆசிரமத்திற்கும்) கூடாதது. அவ்வாறு விடுவது நரகத்தையும் பல்வேறான தீமைகளையும் தரும். எனவே, கர்மத்தியாகம் என்பது, பொருளுடையதாக வேண்டுமானால், பலனையும் பற்றையும் துறப்பதையே குறித்தாகவேண்டும்."

அக்னி ஹோத்திரம் வைசுவதேவம் முதலிய கருமங்கள் சுவர்க்காதி பலன்களை அளிப்பதாகச் சாஸ்திரம் கூறுகிறது அவ்விதமே சந்தியாவந்தனம் முதலான வற்றிற்கும் பலன் சொல்லப்பட்டிருக்கிறது. அவற்றைச் செய்தவன் பலன் வேண்டாமென்று நினைத்தாலும் அது எப்படி வாராதிருக்கும்? முளைக்க வேண்டாமென்று நினைத்து நிலத்தில் விதையைப் போட்டால், எப்படி முளையாதிருக்கும்? ஆகவே, சாஸ்திரத்தில் சொல்லிய கருமங்கள் மோட்சத்திற்கு இடைஞ்சலான பலனைக் கொடுப்பதால் முமுக்ஷு (மோட்ச இச்சையுள்ளவன்) அவற்றைச் செய்யக் கூடாது. செய்யின் அமிருதத்தை விரும்புவோன் விஷமரத்தை வைத்து வளர்ப்பதை நிகர்க்குமல்லவா?—என்று சொல்லக்கூடிய கேள்விக்குக் கண்ணன் அடுத்தபடியாகச் சமாதானம் சொல்லுகிறார்.

நன்றும்தீ துங்கலந்து
நண்ணும் பலமூன்றாய்
ஒன்றும் துறவா
துடன்சென்றார்க்-கென்றுங்
கருமத்தில் ஒன்றில்
கருதுபயன் சாரா
தொருமைப் படத்துறந்தார்க் குற்று.

(இ—ள்) நன்றும்—(சுவர்க்காதிகளான) நற்பலன் என்றும், தீதும்—(நரகாதிகளான) தீய பலன் என்றும், கலந்து நண்ணும் பலம்—(புத்திரன், பசு, செல்வம், பதவி என்கிற) நன்றும் தீதும் கலந்து வரும் பலன் என்றும், மூன்றாய்—மூவகைகளாக, துறவாது உடன் சென்றார்க்கு—(யான் எனது என்ற அபிமானங்களையும் பலனையும்) கைவிடாமல் கருமத்தைச் செய்து கொண்டிருப்போர்க்கு, ஒன்றும்—வந்து சேரும். ஒருமைப்பட துறந்தார்க்கு—(அபிமானம் பலன் இவற்றை) முழுதும் துறந்த தியாகிக்கு, கருமத்தில் ஒன்றில்—கருமானுஷ்டானத்தில் பொருந்தினால், கருது பயன் சாரா—சொல்லப்படும் பலன்கள் உண்டாக மாட்டா.

அநிஷ்டமிஷ்ட மிச்ரஞ்ச
4 2
த்ரிவிதம் கர்மண: பலம்
4 3
பவத்யத்யாகிநாம் ப்ரேத்ய
ந து ஸந்யாஸிநாம் க்வசித்.

(இ—ள்) அனிஷ்டம் இஷ்டம் மிச்ரஞ்ச இதி—துன்பம் இன்பம் இரண்டும் கலந்தது என்று, த்ரிவிதம்—மூன்று வகையாக, கர்மண:—கருமத்தினுடைய, பலம்—பயனானது, அத்யாகினாம்—விடாதவருக்கு, ப்ரேத்ய—இறந்தபிறகு, பவதி—உண்டாகிறது. ஸந்யாஸிநாம்து—தியாகம் செய்தவர்களுக்கோ, கச்சத் அபி—எங்கும், ந பவதி—உண்டாகாது.

முழுதும் துன்பமானது நாகம். முழு இன்பமானது சுவர்க்கம். துன்பம் கலந்த இன்பமானது பூலோகம். இவற்றின் முடிவுக்கு எல்லையுண்டு. மாறி மாறி வருபவை. தியாகம் செய்யாதவர்களுக்கு இம்மூன்றுவிதப் பலன்களும் கருமத்தைச் செய்த பிறகு வருகின்றன. தியாகம் செய்தவர்களுக்கு மோட்சத்திற்குத் தடையான பலன்கள் ஒரு கர்மத்தினாலும் வாரா. சாஸ்திரம் (1) உயிரோடிருக்கின்றவன் (2) சுவர்க்க இன்பங்களை விரும்புகின்றவன் (3) எல்லாப் பலன்களையும் விட்டு மோட்சத்தை மாத்திரம் விரும்புகின்றவன் ஆகிய மூன்று சாராரும் கர்மங்களைப் பண்ணவேண்டுமென்று விதித்திருக்கிறது. கருமங்களின் பலன்களை விட்டு மோட்சத்தை ஆசைப்பட்டுச் செய்வோனைச் சோரது. பலன் பலனை ஆசைப்பட்டுச் செய்வோரையே சேரும். யாருடைய நினைப்பும் இல்லாதபோதிலும் தகுந்த பூமியில் விழுந்த நல்ல விதை முளைக்கவேண்டுமென்பது பகவானுடைய ஏற்பாடு. கரும பலன் விஷயம் அதுபோலன்று. ஜீவன்களை நிலையான தன்னிடம் அழைத்துக் கொள்வதுதான் பகவானுக்கு இஷ்டம். ஆகையால், அற்ப பலன்களைக் கேட்காவிடில், பகவான் கொடுக்கமாட்டார். கருமங்களுக்குப் பலன் கொடுப்பவர் பகவான் ஆகையாலும், கேட்காவிட்டால் பலனைக் கொடுக்கவேண்டாமென்று எண்ணியிருப்பதாலும் விதையைப்போலன்று கருமம். ஆகவே, தியாகி கரும பலனையடையான். (ராமாநுஜர்)

வாரியர்

காங்காயன லேகியம்

எல்லாவித மூல வியாதிகளையும், சஸ்திர சிகிச்சையின்றி, நிச்சயமாகவும், நிரந்தரமாகவும் குணப்படுத்தக்கூடிய அரிய ஔஷதம். அஜீரணம், பசியின்மை, வயிற்று வலி, மலச்சிக்கல், மலத்துவாரத்தில்வீக்கம். அரிப்பு, ரத்தம் வருதல் முதலியவைகளை உடனே குணப்படுத்தும் பவுத்திரவியாதியிலும் நல்லது.

1 பவுண்டு (80வேளைக்கு) விலை ரு. 5.
(பாக்கிங் தபால் செலவு தனி.)
ஆர்ய வைத்தியர்
கே. எஸ். வாரியரின்
அஷ்டாங்க
ஆயுர்வேதசாலா
தெப்பகுளம் — திருச்சி.
(ஸ்தாபிதம் : 1936.)
கேட்லாக் இலவசம்





சாட்சி

23

ஆசையும் பாசமும் கல்யாணமான ஓரிரு வருஷங்களுக்குத்தான். பிறகெல்லாம் கேவலம் மாமூலாகவே புருஷன் மனைவி உறவு என்று சிலர் நினைக்கிறார்கள். இது முற்றிலும் தவறு. வெறும் சரீர அமைப்பைப்பற்றிய ஆசை, சரீரம்தளர்ந்தபோது போய்விடலாம்—உடைந்துபோன பொம்மையைக் குழந்தைகள் புறக்கணிப்பதுபோல. ஆனால், உண்மைக் காதல் சரீர அழகைப் பற்றியதுமாத்திரமல்ல. உள்ளத்தின் அழகில் ஈடுபட்டது. இருவருள்ளமும் ஒன்றுபட்டபோது அன்பு மாறவே மாறாது. அவ்வன்புக்கு வயதே கிடையாது. மூப்பில்லை. நியாயமாகப் பார்த்தால் விவாகத்தில்தான் நம் நாட்டிலே காதல் ஆரம்பமாகிறது.

தேக சௌகரியத்திற்காகக் கிங்ஸ்லி என்பவர் மனைவி மக்களை விட்டு விட்டு ஒரு கடற்கரையூருக்குப் போயிருந்தார். அங்கிருந்து அவர் தம் மனைவிக்கு எழுதிய கடிதத்தில் என்ன சொல்லியிருக்கிறார் பாருங்கள்:

"எனக்கு இந்த ஓய்வையளித்த ஆண்டவனை நான் வணங்குகிறேன். ஆனால், எவளுடைய அன்பொழுகும் பார்வையும் வார்த்தையும் என் ஜீவனுக்கு ஆதாரமோ அந்த ஆருயிர்ப் பெண்ணை (உன்னை) விட்டுப் பிரிந்திருக்கும் துன்பத்தை நான் ஒருபோதும் இதற்குமுன்பு அநுபவித்ததில்லை. கல்யாணமான கொஞ்ச காலத்திற்குத்தான் காதல் என்று சிலர் சொல்லுகிறார்கள் . . . . மடையர்கள்."

விவாகமாகி சுமார் இருபது வருஷங்களுக்குப் பின்னால் எழுதப்பட்ட கடிதம் இது. முதிர்ந்த வயதில் புருஷனும் மனைவியும் காதலித்திருக்க முடியாதென்று வாலிபர்கள் நினைத்திருக்கக் கூடும். கல்யாணமான கொஞ்ச காலம் புருஷனை மனைவியும் மனைவியைப் புருஷனும் புரிந்து கொள்வது கஷ்டம். ஆனால், நாட்கள் செல்லச் செல்ல ஒருவர் குறைகளை மற்றவர் நன்றாக அறிந்து கொண்டு நேசிப்பதற்கு வசதி அதிகம். வாலிப வயதிலிருப்பதைவிட முதிரும் வயதிலே தான் அன்பு வளரவும் நிலைத்திருக்கவும் நியாயமுண்டு. பாலியத்திலிருந்த புயல்போன்ற வேகங்கள் அடங்கி தென்றலையொத்த இனிமையும் சுகமும் நிலவுவது வயது ஏறிய பிறகு தான். பொறுப்புணர்ச்சியும் ஆதரவும் பெருகவேண்டுமானால் வாலிபம்போல் வயதில் ஓரளவு முதிர்ச்சி யேற்படவேண்டும். அப்போது காதலைவிடப் பலமான பிணிப்பும் நேசமும் உண்டாகும்.

"நாற்பத்து மூன்று வருஷ காலம் என் அரிய மனைவி என்னோடு வாழ்க்கை நடத்தினாள். இக்காலத்தில் ஒருமுறைகூட நாங்கள் சண்டையிட்டுக் கொண்டதில்லை" என்று தம் மனைவியின் கல்லறைமீது ருபீனியஸ் ஸௌர் என்னும் பெரியார் எழுதிவைத்துள்ளார். விவாகம் முடிந்து நாற்பத்தாறு ஆண்டுகளுக்குப் பிறகு தம் மனைவி விவாகதினத்தன்று காட்டிய ஆசையையும் ஆதரவையும் காட்டியதாக பாரடே என்னும் ஆசிரியர் கூறுகிறார். இருபத்திரண்டு வருட தாம்பத்திய வாழ்க்கையில் தமக்கு ஒரு நாளாவது கசப்பு வந்ததில்லையென்று டாக்டர் ஆர்னால்ட் என்னும் அறிஞர் கூறியுள்ளார்.

வேலைமேல் நெடுநாள் வெளியூரில் வசித்திருந்த தன் கணவனுக்கு காரலீன் பெர்த்திஸ் என்னும் மாது எழுதிய கடிதத்தைப் பாருங்கள்:

"இன்றிரவு ஜன்னல் மூலமாக ஆகாயமண்டலத்தைப் பார்த்துக் கொண்டிருந்தேன். உங்களைப் பற்றிய நினைவே என் உள்ளம் முழுவதிலும் வியாபித்திருந்தது. நக்ஷத்திரங்கள் ஜொலித்துக்கொண்டிருந்தன. விண் வீதியிலே உங்களுக்கு ஏதாவதொரு நக்ஷத்திரம் அதி சோபையோடு காணப்பட்டால் அதன் ஒளியே என் காதல் என்று நிச்சயமாக நம்புங்கள். நான் எத்தனை எழுதினாலும் சொன்னாலும் என் உள்ளம் முழுவதையும் வெளியிட முடியாது. என் அன்பைப் பூர்ணமாகத் தெரியச் செய்யும் சக்தி மனிதன் கண்டு பிடித்த வார்த்தைகளுக்கில்லை. வார்த்தைகளின் சகாயமில்லாமல் உணரும் சக்தியைமாத்திரம் உபயோகித்தால் என் அன்பை நீங்கள் ஒரு



தாயார், "ஏண்டி, உன் ஆத்துக்காரருக்கு என்னடி வந்துவிட்டது: கடு கடுன்னு கடுவன் பூனைமாதிரி இருக்காரே, உன்னிடம்!"

பெண், "அதென்னமோ, எனக்குத் தெரியல்லே. பவுன் விலை குறைந்ததிலேருந்து கிட்ட அண்ட விடமாட்டேங்கறார்."

—சுமா.

வாறு தெரிந்துகொள்ளலாம். குழந்தைகள் தங்கள் கிள்ளை மொழிகளால் எவ்வளவோ ஆனந்தத்தை உண்டுபண்ணுகின்றனர். ஆயினும் என் இதயத்தில் தாங்களே முதல் ஸ்தானத்தை வகிக்கிறீர்கள். சுகமனுபவித்தாலும் கஷ்டங்கள் பட்டாலும் தங்களிடம் எனக்குள்ள ஆசையில் மாறுதல் வராது. என் அன்புக்கு—தங்களிடம் எனக்கேற்பட்ட காதலுக்கு—வயதேயில்லை. அது சிரஞ்சீவி."

வாலிபப் பருவத்தில் ஆசைகள் அலை மோதிக்கொண்டிருக்கும்போது எழுதிய கடிதமல்ல இது. தாம்பத்ய வாழ்க்கையில் கஷ்ட சுகங்களைப்பட்டுத் தேர்ந்த பருவத்தில் எழுதப்பட்டது.

தாமஸ்கார்லைல் என்னும் மேதாவி தம் மனைவியை வெகுவாக நேசித்துவந்தார். ஆனால், அதைக் காட்டிக்கொள்ள அவருக்குத் தெரியாது. தாமாகக் கடைக்குச்சென்று ஒரு கஜம் துணிகூட வாங்கிக்கொண்டுவந்து மனைவிக்கு அவர் கொடுத்ததில்லை. அவருக்கு வேண்டிய துணிமணிகளைக்கூட அவர் மனைவியே வாங்கிவரவேண்டும். ஒரு சமயம் அகஸ்மாத்தாக அவருக்குத் தம் மனைவியின் பிறந்தநாள் ஞாபகம் வந்தது. கடைக்குச் சென்று வாசனைப் புட்டி யொன்றை வாங்கிவந்து மனைவிக்குப் பிறந்தநாள் பரிசாக அவர் கொடுத்தார். இந்தச் சிறு காரியத்தால் அவர் மனைவி உள்ளம் பூரித்துப் போய்விட்டது. அவள் தன் சிநேகிதிக்கு எழுதிய கடிதத்தைப் பாருங்கள்.

"பிறந்தநாளென்றும் அதற்குப் பரிசளிப்பதென்றும் எதுவும் தெரியாத என் கணவர் இன்று எனக்கு ஒரு வாசனைப் புட்டி வாங்கிக் கொடுத்திருக்கிறார். அந்த சந்தோஷத்தில் என் தாயார் இறந்த துக்கம்கூட மறைந்துவிட்டது. இத்தனை வருஷகாலத்தில் தாமாகக் கடைக்குச்சென்று அவர் வாங்கிக் கொடுத்த முதல் பரிசு இதுதான். பெரிய விஷயங்களில் எப்போதுமே என்னிடம் அவர் அன்போடிருப்பார். ஆனால், பெண்பிள்ளைகளாகிய நாம் பெரிதாக மதிக்கும் சில்லரை விஷயங்களில் அவர் எப்பொழுதுமே கவனம் செலுத்தியவரல்ல. அது அவரோடு கூடப்பிறந்த சுபாவம். ஆனால், இன்று அவர் அளித்த பரிசு என் உள்ளத்தில் இன்ப வெள்ளத்தைப் பெருக்கி விட்டது. கூடப்பிறந்த சுபாவத்தையே அவர் மாற்றிக்கொண்டு விட்டார்."

அந்த நாளிலிருந்து கார்லைல் தம் மனைவியின் பிறந்த நாளை மறந்ததே கிடையாது. தான் வெளியூருக்குச் சென்றபோது மனைவியின் பிறந்த நாள் வந்தால்கூட, அந்தத் தினத்தன்று அவளுக்குச் சேரும்படி ஒரு பரிசும் ஆசிக் கடிதமும் அனுப்பிவிடுவார்.

தம்பி! நீ சம்பளம் வாங்கி அதை உன் தகப்பனாரிடமோ தாயாரிடமோ மனைவியிடமோ கொடுப்பது சரிதான். ஆனால், வீட்டுக்குப் போகும்போது உன் கைப்பட ஒரு ரவிக்கைத் துண்டையோ பக்ஷணத்தையோ வாங்கிக்கொண்டுபோய் உன் மனைவிக்கென்று கொடு. சம்பளம் முழுவதையும் அவளிஷ்டப்படி செலவு செய்து கொள்ளும்படி கொடுப்பதினால் ஏற்படும் இன்பத்தை விட அதிக இன்பத்தை இதன் மூலம் அடைவாள். நாளை வெள்ளிக்கிழமை மாலையில் வீட்டுக்குப் போகும்போது ஒரு அணாவுக்குப் புஷ்பம் வாங்கிக்கொண்டு போய் அவளுக்குக்கொடு. இந்தச் சிறு பரிசு செய்யும் அற்புதத்தைப்பார்!

(தொடரும்)

அர்சோவிஜைசனம்

★

இரத்த மூலம் முதலிய நவ மூல ரோகங்களுக்கும் நிகரற்றது. மலத்தை லகுவாய் வெளியாக்கும் மூல வாய்வு நீங்கும்

விலை ரூ. 2—8 0.

விவரமான காட்லாக் இனம்

மலையாள மெடிகல் ஹால்
(REGD)
189 வக்கீல் புது தெரு,
மதுரை.

हमारी सिंचन-व्यवस्था

卐

इस समय हमारे देश में विद्युत और सिंचाई की लगभग सौ से अधिक निर्माण-योजनाएँ चालू हैं। इनमें से कई योजनाओं के पूरा होने में वर्षों लगेंगे। लेकिन अनाज और कच्चा सामान पैदा करने के लिए किसान को समय पर काफ़ी और नियमित व्यवस्था तो चाहिए। इसलिए किसान की तात्कालिक सहायता करने का मार्ग यही है कि देश में ही प्राप्त साधनों से सिंचाई की छोटी-छोटी योजनाओं को कार्यान्वित किया जाय।

सिंचाई के क्षेत्र में भारत सब देशों से आगे है। यद्यपि देश के विभाजन से सिंचाई की बहुत-सी भूमि पाकिस्तान में पड़ गई है, तो भी भारत में लगभग ४ करोड़ ८० लाख एकड़ सिंचाई की भूमि बच गई है। इसमें से १ करोड़ ७० लाख एकड़ भूमि नहरों से तथा शेष तालाबों, कुओं, नलदार कुओं आदि से सींची जाती ह।

सोतदार कुओं से सींची जानेवाली भूमि का क्षेत्रफल उस भूमि के लगभग बराबर है, जिसकी सिंचाई बड़ी-बड़ी नहरों से होती है। इसलिए यह कहा जा सकता ह कि भारत में छोटी-मोटी सिंचाई का सब से बड़ा साधन सोतदार कुआँ है। ऐसे कुएँ से प्रायः १५ एकड़ तक की सिंचाई हो सकती ह। ये कुएँ पक्के होते हैं और इनसे रहट द्वारा जल निकाला जाता है।

सोतदार कुओं से सिंचाई करने में एक त्रुटि यह है कि इस के जल में उर्वर तत्व नहीं होते जो नहरी पानी में विद्यमान होते हैं। कुओं की सिंचाई के साथ खेत में पर्याप्त मात्रा में खाद डालने की आवश्यकता होती है। सोतदार कुओं और तालाबों से सींची जानेवाली भूमि में अधिक-से-अधिक उपज के लिए केन्द्रीय और राज्यीय सरकारें किसानों को खाद सुलभ कराने पर अधिकाधिक ध्यान दे रही हैं।

भारत में सिंचाई का दूसरा सब से बड़ा साधन तालाब और जलाशय है। अनुमान है कि तालाबों से प्रतिवर्ष ८० लाख एकड़ भूमि की सिंचाई होती है। नदियों की बाढ़ से भी सिंचाई का काम लिया जाता है। वर्षा-ऋतु में नदियों का फालतू जल खेतों की ओर मोड़ दिया जाता है। भूमि इस जल को धीरे-धीरे सोख लेती है। बाढ़ के जल में उर्वर मिट्टी पर्याप्त मात्रा में होती है और यह खाद का काम भी देती है।

सोतदार कुओं के, एक तो, बनाने में खर्च बहुत बैठता है और दूसरे, इनसे पानी निकालने में भी अधिक ख़र्च बैठता है। फिर उपयुक्त भारवाही पशुओं और कृषि-श्रमिकों की संख्या में भी कमी हो रही है। इसलिए अब 'पम्पों' द्वारा पानी निकालने का रिवाज़ बढ़ता जा रहा है। इनसे सिंचाई की व्यवस्था कुछ सीमा तक नियमित हो सकेगी। १९५१ में हमारे देश में ६० लाख टन अनाज की कमी थी। ऐसी स्थिति में अनियमित वर्षा पर निर्भर नहीं रहा जा सकता।

ஒருவர்:—என்ன சார்! இன்ஷ்யூரன்ஸ் ஏஜண்டு வேலை செய்கிறீர்களா என்ன? எத்தனை நாளா இந்த பிஸினஸ்?
மற்றவர்:—அதெல்லாம் ஒண்ணுமில்லே சார்! இந்தக் கடன் தொந்தரவு பொறுக்க முடியவில்லை அப்படி ஒரு தினுசா, பேரைப்போட்டு பையைத் தூக்கிண்டு போனா ஒருத்தரும் கிட்டே நெருங்கறதில்லை. அதான் இதை என் கையோடேயே வைச்சுண்டிருக்கேன்!

सिंचन (ஆ.பா.) **सिंचाई** (பெ.பா.) நீர்ப்பாசனம்.

व्यवस्था (பெ. பா.) ஏற்பாடு,

विद्युत (ஆ. பா.) மின்சக்தி.

लगभग ஏறக்குறைய.

निर्माण-योजना (பெ. பா.) நிர்மாணத்திட்டம்.

चालू நடப்பிலுள்ள, அமுலிலுள்ள.

वर्षों लगेंगे பல வருஷங்கள் ஆகும்.

समय पर சரியான காலத்தில்.

काफ़ी—पर्याप्त போதிய.

नियमित ஒழுங்கான. திட்டமான.

तात्कालिक உடனடியான தற்காலிகமான.

कार्यान्वित करना நிறைவேற்றுதல்.

विभाजन (ஆ. பா.) பிரிவினை.

नहर (பெ. பா.) சிறு ஆறு.

शेष மீதியான. இதர, பாக்கி மற்ற.

नलदार कुआँ (ஆ. பா.) குழாய்க் கிணறு.

सींचना நனைத்தல், நீர்பாய்ச்சுதல்.

क्षेत्रफल (ஆ. பா.) பரப்பு (Area.

सोतदार कुआँ (ஆ.பா.) ஊற்றுக் கிணறு.

रहट (ஆ. பா.) ஏற்றம்.

त्रुटि (பெ. பா.) குறைபாடு.

उर्वर செழிப்பான.

तत्व (ஆ.பா.) பொருள். உண்மை

विद्यमान होना காணப்படுதல்.

मात्रा (பெ. பா.) அளவு.

खाद (பெ பா.) எரு

उपज (பெ. பா.) விளைச்சல்.

सुलभ करना எளிதில் கிடைக்கச் செய்தல்.

अधिकाधिक மேன்மேலும் அதிகமான.

अनुमान (ஆ. பா.) அனுமானம், ஊஹ்யம்.

बाढ़ (பெ. பா.) வெள்ளம்.

वर्षा ऋतु (பெ. பா.) மழைகாலம்.

फालतू உபயோகமற்ற

मोड़ना மடித்தல். திருப்புதல்.

सोखना உறிஞ்சுதல்.

उपयुक्त உரிய. தகுந்த.

भारवाही சுமை தாங்கும்.

पशु (ஆ. பா.) மிருகம்.

कृषि (பெ. பா.) விவசாயம், பயிர்த்தொழில்.

श्रमिक (ஆ. பா.) தொழிலாளி உழைப்பாளி.

रिवाज़ (ஆ. பா.) முறை.

सीमा (பெ. பா.) எல்லை.

स्थिति (பெ. பா.) நிலைமை,

निर्भर रहना சார்ந்திருத்தல் நம்பியிருத்தல்.

जय हिन्द! जय हिन्दी!

அனுபவ ரேகா சாஸ்திரம்

ரமேஷ் கே. சாஸ்திரி

முழைகள்

★

146. கொப்புளம்

हनौ स्यात् पिटको यहिं नित्य सिद्धतया, तया।
दीर्घ रोगस्तु कमला नित्यपात्रतया तथा॥
वैरि भङ्गो नित्यभोगी नस्यादपि चिरादयम्।
योषितां रसवैरूप्यादिति षह्नी प्रमा हनौ॥

கண்களுக்குக் கீழே நிரந்தரமான ஒரு கொப்புளம் காணப்பட்டால் அது நீண்ட அல்லது நீடித்திருக்கும்



வியாதியைக் கொடுக்கும். இன்னும் பிரயத்தினமின்றி தெய்வ வசத்தால் பணப்பெருக்கையும், எதிரிகளின் நாசத்தையும், நிரந்தரமான ஸ்திரீ போக அனுபவத்தையும் கொடுக்கும்.

147. மச்சம்

कृष्णिमा यदि तत्र स्यात् विच्छेदः सन्ततेः भवेत्।
श्रियो वा विच्युतिः साक्षात् स्वसुत अन्तिक विक्षयः॥

மேற்குறிப்பிட்டவிடத்திலேயே கருப்பான ஒரு மச்சம் பெரிதாகத்

தோன்றினால், அது ஸந்ததி முடிந்து விடுவதைக் குறிக்கும். அதாவது ஆண் சந்ததி ஏற்படாது. ஏற்பட்டாலும் இருக்காது. செல்வமும் அவனை விட்டு விலகிவிடும். பெண்ணுக்குப் பிறகு ஸந்ததி முற்றும்.

148. மஹிலா

अधस्तात् पुनः यस्य प्रोन्नतिः बहुवर्तनी।
महिलानाम तद् हेतोः मृतिं आप्नोति विस्तृताम्॥

கன்னத்தின் கதுப்புக்குக் கீழாக நாலா பக்கங்களிலும் பரந்த ஒரு முழை காணப்பட்டால் அதற்கு மகிலா என்று பெயர். இந்த அடையாளம் கண்



டால் பெண், பிள்ளைகள், மனைவி முதலியவர்களுடன் 'கூண்டோடு கைலாசம்' செல்ல நேரிடும். இதிலிருந்து முதலில் குடும்ப சம்பத்தைக் கொடுத்தாகவேண்டும் என்றும் ஏற்படுகிறது. பின்னரே குடும்பத்துடன் அழிவு நேரும்.

149. வெளுப்பு முழை

गडुः कपोल संलग्ना धवलाकृतिः अङ्किता।
मृतिमेव स्वपुत्राणां स्वधनस्यापि सूचयेत्॥

கன்னத்தில் வெண்மை நிறத்தில் ஒரு முழை அல்லது நிரந்தரமான கொப்புளம் இருந்தால் அது சொந்தப் பிள்ளைகளின் மரணத்தைக் குறிக்கும். இல்லையேல் தான் சம்பாதித்த பணத்தின் நாசத்தையாவது ஏற்படுத்தும். ஆணுக்கும் பெண்ணுக்கும் பலன் ஒன்றே. மேற்குறிப்பிட்ட முழை ஏகதேசமாகத் தெரிந்தாலும் போதும். நன்றாகத் தோன்றவேண்டுமென்ற நியதி இல்லை. வெள்ளை முழை என்று குறிப்பிட்டுச் சொல்வதால் கறுப்பு முழையிருந்தால் பலன் வேறு என்று ஊகிக்க இடமிருக்கிறது. உண்

மையில் ஆடுமாடுகளுக்கு நாக்கின் அடிபாகத்தில் இவ்விதமான கருப்பு முழைகள் காணப்படில் தீங்கு ஏற்படுவது அனுபவசித்தம்.

150. நீரோமா

गडुः कल्माष वर्णश्चेत् नीरोमा स्यात् प्रशस्यते।
स्त्रीणां विराग हेतुश्च सु: पुर :कश्च सः॥

கன்னத்தில் புள்ளி புள்ளியாக, அல்லது கறுப்பும் வெளுப்பும் கலந்த நிறத்தில் ஒரு முழை காணப்படில் அதற்கு நீரோமா என்று பெயர். பொதுவாக இந்த முழையின் பலன் புகழ் ஏற்படுவது. இன்னும் பெண்களுக்கு விசேஷமாக உலக விவகாரங்களின் பற்றின்மையையும் மோக்ஷ கர்மாக்களில் பற்று

தலையும் ஏற்படுத்தும். சில சமயங்களில் தர்ம நிஷ்டாவான புத்திரனையும் கொடுக்கும். பெயரிலிருந்து ரோமம் உதிர்தலும் ஸூசகமாகிறது.

151. ஸம்ஸ்கிருதி

नासा कपालयोः या तु संस्कृतिः दृश्यते नृणाम्॥
रेखा तया जगत् सर्वं शत्रु भागे प्रति-ष्ठति

கன்னம், மூக்குத்தண்டு இரண்டின் மேலுமாகப் பிரவஹித்துச் செல்லும்

ரேகைக்கு ஸம்ஸ்கிருதி என்று பெயர். இந்த ரேகையுள்ளவர்களுக்கு உலகம் முழுவதும் விரோத பாவத்தில் அமையும். அதாவது வாழ்க்கைப் போரில் தோல்வியடைவர். இந்த ரேகையுடன்,



மூக்கும் கன்னமும் சந்திக்குமிடத்தில் சிவப்பு நிறமான பிந்துக்கள் காணப்படின், மேற்குறிப்பிட்ட பலன் பன்மடங்கு பெருகும்.

152. லலிதா

या चक्षुः उन्मुखी विर्यां कपोलस्था प्रयच्छति।
ललिता विदिता साक्षात् श्रियं आयुश्च वर्धयेत् ॥

கன்னத்தில் கண்ணை நோக்கிச் செல்லும் ரேகைக்கு லலிதா என்று பெயர். இதன் பலன் படிப்பைக் கொடுப்



பது. இன்னும் செல்வம், ஆயுள் இவற்றை விருத்தி செய்வது. செல்வம் என்ற சொல், சகலவிதமான சௌபாக்கியங்களையும் குறிக்கும்.

153. கல்யாணி

या पुनः नासिका रन्ध्र द्वारात् आरभ्य नेत्रयोः।
अन्तं गच्छति कल्याणीं तां विदुः तत्फलामपि ॥

நாசித்துவாரத்தின் கீழிருந்து புறப்பட்டு கண்ணின் கடையோரம்வரை



செல்லும் ரேகைக்கு கல்யாணி என்று பெயர். இந்த ரேகை இருபுறங்களிலும் காணலாம். இதன் பலன் பெயரை அனுசரித்தது. அதாவது மங்களத்தைக் கொடுப்பது. ஆண் பெண் இருபாலருக்கும் பலன் ஒன்றே.

154. கர்ணிகா

या नासामूलं आरभ्य कर्ण मूलं तु गच्छति।
कर्णिकेति प्रसिद्धा सा श्रियं आयुश्च वर्धयेत् ॥

மூக்கின் மூலத்திலிருந்து ஆரம்பித்து குறுக்காக காதின் மூலம்வரை செல்லும் ரேகைக்கு கர்ணிகா என்று பெயர். இதன் பலன் வாழ்க்கையின்



முதற்பாதியில் செல்வத்தை யளிப்பது. பிற்பாதியில் ஆயுளை விருத்தி செய்வது. இதனால் பிற்பகுதியில் செல்வம் லவலேசமும் வளராது என்று தாற்பரியம். ஆயுளே செல்வமாக மாறும்.

155. வ்யாப்யவிருத்தி

या पुनः चिबुकं नेत्रसन्धि चापि व्यवस्थिता।
व्याप्यैव सा व्याप्यवृत्तिः प्रसिद्धिः फलं ईर्यते ॥

இரண்டு கண்களும் சந்திக்குமிடம், மோவாய்க்கட்டை, இரண்டையும் இணைக்கும் பாவத்தில் ஓடிக்கொண்டிருக்கும் ரேகைக்கு வ்யாப்ய விருத்தி



என்று பெயர். இந்த ரேகையுள்ளவர்கள் மிகவும் பிரசித்தியடைகிறார்கள். அரசாங்கங்களின் பிரதிநிதிகளாக தூதுகளுக்குச் சென்று பெயரடைவர். அல்லது அரசர்களின் கட்டளைகளை ஏற்றுச் செயலாற்றி மேன்மை எய்துவர். முக்கியமாக தூதர் என்று தற்காலத்தில் கூறப்படும் உத்தியோகத்திற்கு இந்த ரேகை பிரதான சின்னமாகிறது.

156. பருஷா

शिप्र गताः परुषाः चेत् रेखाः सर्वाः तथा मृतिः स्यात् तु।
लवणादि लेह्य निष्ठाः क्रूराः स्वल्पाकृति प्रधानाः ते ॥

நாசிக்குக் கீழேயுள்ள பாகத்தில் கரடு முரடான ரேகைகள் காணப்பட்டால் அதற்கு பருஷா என்று பெயர். இவை பெண்களுக்கு நன்றாகத் தெரியும். அவர்களுக்கு சீக்கிரத்தில் மா



ணத்தை ஏற்படுத்தும். புருஷர்களானால் காரசாரமாக நாக்கைச் சப்பைக் கொட்டிக்கொண்டு சாப்பிடுவார்கள். இன்னும் கொடிய சுபாவங்கள் உடையவர்களாக இருப்பார்கள். ஆசாமி குட்டையாக இருப்பான். இதைத் தவிர படிப்பு முதலியவற்றில் கீழ்த்தரம்.

(தொடரும்).

முதல் ஆசாமி:—"என்னஸார்! உங்க கிட்டே தனியாக ஒரு விஷயம் பேசணுமே! வீட்டிலே தானே இருப்பேள்!"

இரண்டாவது மனிதர்:—"ஆமாம் சாவகாசமாக வாருங்களேன்!"

முதல்வர்:—"அப்டீன்னா நான் நாளைக்கு டிபன் டயத்துக்கு வரேனே!"

இரண்டாவது மனிதர்:—"வேண்டாம் ஸார்! ஒரே வெய்யிலா இருக்கு, சாயங்காலமா வாருங்களேன் பேசலாம்."



நமது பம்பாய்க் கடிதம்

★

ஸினிமாவில் சேர்ந்திருப்பவர்களெல்லோரும் எப்பொழுது பார்த்தாலும் வேலை செய்துகொண்டிருந்துவிட்டு கொஞ்சம்கூட அப்பாடா என்று உட்கார்க்கூட அவகாசம் இல்லையே என்று அநேகமாக புகார் செய்கிறார்கள். இப்பேர்ப்பட்டவர்கள் ஒரு கட்சி. மற்றொரு கட்சி சினிமாவில் அதிகமாக வேலையில்லாவிட்டாலும் அதிக அலுவல் இருப்பதாகவும் பேட்டி கொடுக்கவோ, பேசவோ அவகாசம் இல்லையென்று பாசாங்கு செய்பவர்கள். இப்படி வேஷம் போடுபவர்கள் தான் அதிகம்.

சில உண்மையான மனிதர்கள் தங்களுக்கு எவ்வளவு வேலையிருந்தும் தங்களின் அலுவல் மிகுதியை வெளியில் காண்பித்துக்கொள்ளாமல் எல்லோரிடமும் நல்ல பெயர் எடுக்கிறார்கள். இக்கட்சியைச் சேர்ந்தவர்தான் டைரக்டர் ஸ்ரீ.நானாபாய் பாட். பம்பாயில் இவரைப்போல முயற்சியுள்ள அலுவல் மிகுந்த டைரக்டர் வேறொருவருமில்லை என்றே சொல்லலாம். அவர் எப்பொழுதும் ஐந்து அல்லது ஆறு படங்களை ஒரே சமயத்தில் டைரக்ட் செய்துவருகிறார். அவர் படத்தை டைரக்ட் செய்துகொண்டே எல்லோரிடமும் தமாஷாகப் பேசிக்கொண்டும், பத்திராதிபர்களுக்குப் பேட்டிகொடுத்துக்கொண்டும் இருப்பார்.

தேவிகாராணியின் தயாரிப்பான 'ஸீதம்' படத்தின் ஷூட்டிங் ஆரம்ப விழா.

ஸ்ரீ.நானாபாய் பாட்டுக்கு இப்பொழுதெல்லாம் வேலை மிகுதியால் சரியான தூக்கமே கிடையாது. சாப்பாடு இரவில் ஒரே வேளைதான். அவர் எவ்வளவு வேலை செய்தும் எப்பொழுதும் சாந்தமாயும், மிகவும் ஆரோக்கியமுள்ளவராயும் இருக்கிறார். அவர் இதுவரையில் ஒரு மோசமான படத்தையும் டைரக்ட் செய்ததில்லை. அநேகமாக அவர் டைரக்ட் செய்த எல்லாப் படங்களும் நல்ல வெற்றியடைந்திருக்கின்றன. அவருக்கு அயல் பட முதலாளிகளுக்குப் படங்களை டைரக்ட் செய்வது பிரமாதமான காரியமாகத் தோன்றவில்லை. தான் சொந்தமாகப் படங்களைத் தயாரிக்கும்பொழுது தான் அவருக்கு மிகவும் கஷ்டமாக இருப்பதாக அன்றொருநாள் என்னிடம் தெரிவித்தார்.

முப்பத்தைந்து வயதுள்ள ஸ்ரீ.நானாபாய் பாட் 1933ம் வருஷம் (அவர் பதினேழு வயது இருக்கும்பொழுது) சினிமாவில் வேலை செய்யப் புகுந்தார். முதல் முதலில் ஒலிப்பதிவு செய்வதில் ஈடுபட்டார். பிறகு படங்களுக்குக் கதைகளையும், வசனங்களையும் எழுத ஆரம்பித்தார். அவர் எழுதிய படங்களில் ஆக்டிரஸ், சன்சார் லீலா, சிகப்புக் கடிதம் முதலியவைகளைச் சொல்ல வேண்டும். ஸ்ரீ.நானாபாய் முதலில் ஸ்டண்டு படங்களை டைரக்ட் செய்ய ஆரம்பித்தார். அவருடைய முதல் புராணப்படம் "மௌஜ்" பிறகு புராணப்படங்களை டைரக்ட் செய்ய ஆரம்பித்தார். அவருடைய முதல் புராணப் படம் "சுரேக ஹரன்" ஸ்டண்டு படங்களிலும் புராணப்படங்களிலும் நல்ல பெயர் எடுத்தபிறகு சமூகப் படங்கள் டைரக்ட் செய்வதிலும் நல்ல பெயர் எடுத்தார். அவர் இது வரையில் சுமார் 25 படங்களை டைரக்ட் செய்திருக்கிறார். தற்சமயம் தன் சொந்த கம்பெனியின் சார்பாக (தீபக் பிக்சர்ஸ்) மாலுமி சின்பாடு என்று ஒரு உயர்ந்த படத்தை தயாரித்து வருகிறார். இப்படத்தில்தான் ஸ்ரீ.ரஞ்சன் கதாநாயகனாக நடிக்கிறார்.

ஸ்ரீ.நானாபாய் பாட்டு குஜராத்தி வம்சத்தைச் சேர்ந்தவர். அவரை சிறு வயதில் "படுக்" என்று அழைத்து வந்தார்கள். அவருக்கு இரண்டு குழந்தைகள் இருக்கின்றன. நல்ல அடக்கமும் மரியாதையும் பொருந்தியவர் ஸ்ரீநானாபாய் பாட்.

தி.மா.ராமச்சந்திரன்.



•ஆன்தீயாஸில் நிம்மி, தேவ் ஆனந்த், துர்கா கோடே.



நடுவில் இருப்பவர் ஸ்ரீ நானாபாய்பாட். இடதுபக்கத்திலிருப்பவர் நடிகர் பகவான் இன்னொரு பக்கம் பகவான் தம்பி.